அலஹாபாத் உபந்நியாசங்கள்.

1910-ம் வருஷத்தில் நடந்தவை.

சென்னை.

சுதேசமித்திரன் ஆபீஸில் பதிப்பிக்கப்பட்டது.

1911.

விலை அணா 6] [தபால் கூலி வேறு.

அட்டவணை.

அலகாபாத்துப் பொருட்காட்சி.

ஸர் ஜான் ஹியூவெட்டின் பேச்சு.

1–12–1910.

அலகாபாத்தில் நடந்த இன்டஸ்ட்ரியல் எக்ஸ்ஹிபிஷன் கமிட்டியின் சேர்மனை மிஸ்டர் ஜஸ்டிஸ் ரிச்சர்ட்ஸ் அந்த எக்ஸ்ஹிபிஷனைத் திறக்குமுன் ஒரு அட்ரெஸ்ஸைப் படித்து, அதை வெள்ளியிற் செய்த பெட்டியில் வைத்து ஸர் ஜான் ஹியூவெட்டினிடம் கொடுத்தார். அதை பெற்றுக்கொண்டு, ஸர் ஜான் பின் வருமாறு பதில் பிரசங்கம் செய்தார்:—

அலெக்ஸாண்ட்ரா அரசியின் பிறந்தநாளாகும் இன்றையதினம். இத்தினத்தை இந்தப் பொருட்காட்சி யாரம்பிப்பதற்கு ஏற்ற நற்றினமாகத் தெரிந்தெடுத்த பிறகு கொடிதும் எதிர்பாராததுமான ஒரு வியாகுலம் தேசத்துக்குச் சம்பவித்தது. ஏழாவது எட்வர்ட் இறந்ததால் நாமெல்லோரும் பெருந்துக்கம் கொண்டோம். அவர் ஆண்டகாலம் கொஞ்சமே யாயினும், இந்தியக் குடிகளிடத்து அவர் காட்டிய அனுதாபத்தாலும் அபிமானத்தாலும் இத்தேசத்தில் எல்லோருடைய பிரியத்துக்கும் பாத்திரராக அவர் ஆய்விட்டார். சென்ற ஆகஸ்ட் மாதத்தில் ஒரு பப்ளிக் மீட்டிங்கில், அச்சக்கரவர்த்தியின் ஞாபகார்த்தமாக (phthisis) நோய்க்குச் சிகிச்சை செய்வதற்காகக் குமாயூன் ஹில்

ஸில் ஒரு ஸானிடோரியம் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அந்நோய் இந்தியாவின் இப்பாகத்தில் துன்புசெய்யும் மிகக் கொடிய வியாதிகளி லொன்று. அந்த ஞாபகச் சின்னத்தின் பொருட்டுப் பணம் திரட்டச் சில தினங்களுக்குமுன் இந்த டிஸ்ட்ரிக்டில் கூட்டப்பட்ட ஒரு மீட்டிங்கில் என் நண்பராகிய ஸர் ஜான் ஸ்டான்லி அக்கிராசனம் வகித்தார். அந்தக் காரியத்துக்குப் போதுமானபடி இந்த டிஸ்ட்ரிக்டிலும் மாகாணத்திலுமிருந்து பொருள் வந்து சேருமென்றும் இறந்த அரசரின் பெருமைக் குற்றவாறு அவர் பெயரை வகித்ததாய் ஒரு ஞாபகச் சின்னம் கட்டி முடியுமென்றும் நான் கோருகிறேன்.

கொஞ்ச காலத்துக்கு முன் இந்த எக்ஸ்ஹிபிஷனைப்பற்றி நம் இராஜ சக்கரவர்த்தி யிடம் பிரஸ்தாபிக்க எனக்கு வாய்த்தது. இந்த எக்ஸ்ஹிபிஷன் நிறைவேறும் பொருட்டுத் தாம் கோருவதையும் அரசியார் கோருவதையும், இம்மாகாணத்தாருக்கு இப்பொருட்காட்சியால் நிலையான நன்மைக ளுண்டாகு மென்று தாம் விரும்புவதையும் தெரிவிக்கும்படி எனக்குக் கட்டளை யிட்டார். இராஜ சக்கரவர்த்தி அரசியுடன் இந்தியாவுக்கு வந்து, இத்தேசத்தார்க்குக் குதூகலத்தையுண்டாக்கும் வைபவங்களுடன் கீழ்க் கடையில் சிறந்த பல சம்பவங்களால் பிரசித்தி பெற்ற இடத்தில் முடிசூட்டிக்கொள்ள உத்தேசித் திருக்கிறாரென்று சில நாளைக்குமுன் வெளியான நற்செய்தி போல் நமக்கு நற்செய்தி கிடைத்து வெகு காலமாயிற்று. அரசியோடு ஹிஸ் மாஜெஸ்டி இந்தியாவுக்கு வரப்போகிறா ரென்று

அறிந்து சந்தோஷத்தால் கிளர்ச்சி யடையாதவர் இந்த விசாலமான தேசத்துக் குடிகளுள் ஒருவரு மிரா ரென்று நான் சொல்லமாட்டுவேன்.

இராஜ்யமும் தொழிலும்.

இதற்கு நெடுநாள் முன்னேயே இந்தப் பொருட் காட்சியை நடத்தவேணுமென்று உத்தேசமா யிருந் தது. ஆனல் 1907-ல் மழையில்லாமற் போய் 1908-ல் பஞ்சம் உண்டானதால், இதுவரையில் அந்த உத்தே சம் நிறைவேறக் கூடவில்லை. உத்தேசித்திருந்த வித மாய்ப் பொருட்காட்சியை நடத்துவதற்கு முதலில் அனைத்தும் தயார் செய்ய அதிக சாவகாசம் வேண்டி யிருந்தது. பொருட்காட்சி நடத்துவோமா, அதை எவ்விடத்தில் நடத்துவோம், என்று நிச்சயிக்கும் பொருட்டுச் சுமார் 18 மாதங்களுக்கு முன் ஒரு ஆரம்ப மீட்டிங்கு கூடினேம். இப்பொருட்காட்சியைப்பற்றிய காரியங்களை யொழுங்குபடுத்தித் திட்ட மமைப்பதை அவசரப்பட்டுச் செய்து விட்டோம் என்று சொல்வதற் கிடமில்லை. கட்டிடம் கட்டி முடிந்து காட்சிப் பொருள் கள் தம் தம் இடங்களில் வைக்கப்படுமுன் இந்த எக்ஸ்ஹிபிஷனைத் திறக்கக் கூடாதென்று நாங்களெல் லோரும் ஏகோபித்துத் தீர்மானித்திருந்தோம். இந்த எண்ணம் இவ்வளவு நன்றாய் நிறைவேறி யிருப்பதன் பொருட்டு எக்ஸிகூடிவ் கமிட்டி (நிருவாகச்சபை) யை நாம் புகழவேண்டியதே. இந்த வருஷம் ஜனவரி மாதம் இவ்விடத்தை நான் வந்து பார்த்தபோது, கட்டிட சம்பந்தமான அடையாள மொன்றும் காணவில்லை; அக்டோபர் மாத நடுவில் இங்கிலண்டிலிருந்து நான்

திரும்பி வந்தபோது, காரியங்கள் எவ்வளவு விருத்தி யடைந்து விட்டனவென்று கண்டு ஆச்சரிய மடைந் தேன். உண்மையில் இது அதிசயமே. கட்டிடங்களை இவ்வாறு அமைப்பது என்று திட்டம் செய்ததும், கட்டி முடிந்த துரிதமும் இக்காரியத்துக்குப் பொறுப் பேற்றவர்களுக்குப் பெரும் புகழை விளைக் கின்றன. சூபரின்டெண்டிங் என்ஜினீயர் மிஸ்டர் ஆர் டெல், ஸர் ஸ்வின்டண் ஜாகப், ஆகிய இவ்விருவர்களுடம் அமைத்த நிருபாண திட்டம் முற்றிலும் பொருத்த முடையதாயிருக்கிறது. இந்தக் கட்டிட வேலை நடந் திருக்கும் விதமானது இப்பொறுப்பை மேற்கொண்ட என்ஜினீயர் ராய் ஹரிபந்த் சாகிப் அவர்களின் ஊக்கத் துக்கும், திறமைக்கும், உற்சாகத்துக்கும் ஒரு அத் தாட்சியாய் நிற்கிறது. என் உறுதியான எண்ண மென்னவென்றால், இப்போதுள்ள நாகரிக நிலையில், இந்தியாவில் பொருளாதாரத்தைப்பற்றிய பிரசினை களின் ஆவசியகத்தை நோக்கும்போது, இராஜீய பிர சினைகள் பொருட்டாக மதிக்கத் தக்கவைபல்ல. பிரிடிஷ் பார்லிமெண்ட் போன்ற ஜன சுவாதீன ஸ்தாபனங் களைப் பல நூற்றாண்டுகளாயுடைய நாடுகளிலும் ஜனங் களிற் சிறு பான்மையோரே இராஜீய விஷயங்களைக் கவனிக்கிறார்கள். கிரேட் பிரிட்டனில் சமூகத்தில் பல அந்தஸ்துகளிலுமுள்ளவர்களாய் எத்தனை பத்து லட் சக்கணக்கான ஆண்களும் பெண்களும் தம்தம் தொழில் களைச் செய்து கொண்டு, இராஜீய விஷயங்களைப்பற்றி நினையாமலே யிருக்கிறார்கள் ? இந்தியாவில், கல்வி யிருக் கிற ஸ்திதியில், மிகச் சிலரே இராஜீய விஷயங்களில்

அக்கறை கொள்ளக்கூடும். தேச ஜனங்களுள் பெரும் பான்மையானவர்களுக்கு இராஜீய விஷயமென்பதின்ன தென்று தெரியவே தெரியாது. அன்றன்று உணவு கிடைக்கவேண்டியதே அவர்கள் கவலை. அவர்கள் காலமெல்லாமும் எண்ணமெல்லாமும் அந்தக் கவலை யிலேயே அடங்குகின்றன. இந்திய ஜனங்களுக் கும் அவர்களை யாள்வோர்க்கும் மகா முக்கியமான விசாரங்கள் எவையென்றால், நிலத்தின் செழிப்பை யெப்படி பெருக்குகிறது, தேசத்தொழில்களை யெப் படி தூண்டி விருத்தி செய்கிறது, இக்காலத்துக் கொத்த தொழில் முயற்சிகளுக்கு மூலதனம் சேர்ப்ப தெப்படி, கைகளா லுழைப்பவர்களும் அவர்களை மேற்பார்வை செய்பவர்களும் ஆகிய இருவகையோர் களுக்கும் பயன்படுமாறு இப்போதுள்ள கல்வி முறை யைத் திருத்தி யமைப்பது எப்படி, ஆகிய இவையே.

ஐக்கிய மாகாணங்களின் விருத்தி.

இந்தியாவுக்கு இப்போது தேவையானது தொழிற் பெருக்கம் என்பது பொதுவாய் உணரப்படு கிறதென்பதற்கு அடையாளங்கள் எங்கு பார்த்தாலும் தென்படுகின்றன.

இந்த மாகாணங்களிற் சில வருஷங்களாகப் பல காரியங்கள் இவ்வழியில் நாம் செய்திருக்கிறோம். முத லில், தேசத் தொழில்களைப் பற்றி ஆராய்ந்து பார்த்துத் தெரிவிக்கும்படி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது. மிஸ் டர் சாட்டர்ஜியால் இது வியக்கத்தக்க விதமாய் நிறை வேற்றப்பட்டது. நம் தேசத் தொழில்களைப் பற்றிய

விவரங்களெல்லாம் தெளிவாய் அவா ரிபோர்ட்டில் வெளியாகின்றன. இரண்டாவது, தொழில் விருத்தியில் அக்கறைப்பட்டவர்களின் பிரதிநிதிகளாய் இம்மாகாணத்திலுள்ளவர்களெல்லோரையும், வெளியிலுள்ள பெரியோரிற் சிலரையும் கூட்டி ஒரு தொழிலாலோசனைச் சபை நடத்தப்பட்டது. ஒரு நூற்றாண்டில் மூன்றிலொரு பாகம் இங்கு வசித்தவனாதலால், நான் பல கான்பரென்ஸுகளில் கலந்திருக்கிறேன். ஆனால், மேற்குறித்த சபையில் நடந்ததுபோல், அவ்வளவு காலத்தில் அவ்வளவு நன்மையான காரியங்களை வேறெந்த சபையும் செய்ததில்லை. கவர்னர் ஜனரலின் கௌன்ஸிலில் கல்வி யிலாகா மெம்பராயுள்ள ஆனரபில் மிஸ்டர் பட்லருடைய ஊக்கத்தாலும் ஆதரத்தாலுமே பெரும்பாலும் இந்த நடவடிக்கைகள் வெகு விரைவாய் நடந்திருக்கின்றன. முதலில் 16 லட்சமும், வருஷ வாரியாக 4½ லட்சமும் செலவிடுவதாகத் திட்டம் போடப்பட்டது. இந்த மூலதனமும் நிருவாகச் செலவும் முறையே இந்த ஐக்கிய மாகாண வாசிகளுள் தலைக்கு ½ அணா வீதமும், 1/6 அணாவுக்குக் குறைந்தது மான பளுவாய் உறைக்கக்கூடியன. தொழில் வழியில் முற்போக்குக்கு முதலடியாக, தொழிற் கலாசாலை யொன்றேற்படுத்தி, அதைத் தொழிலாராய்ச்சியை மேற்கொள்ளும்படியும், படித்தவர்களை ஓவர்சீயர்களாகவும், போர்மன்களாகவும், ஆராய்வோர்களாகவும், தயார் செய்யும்படியும் அமைக்கவேண்டியது என்று அந்தக் கான்பரென்ஸ் ஏகோபித்து, அபிப்பிராயப்பட்டது. இவ்வெண்ணத்தை நிறைவேற்றும்படி,

தொமேஸன் காலேஜைத் திருத்தி விரிவாக்கி, ரூர்க்கியில் என்ஜினீயரிங் வேலை முழுமையையும் நடத்துவதும், கான்பூரில் தொழில் வேலை முழுமையையும் நடத்துவதும், மிக நன்மையும் சிக்கனமுமான வழியென்று நிச்சயிக்கப்பட்டது. மாதிரிப்படம் வரைதல் (design) கற்பிக்கும் பள்ளிக்கூடம் லக்நௌவிலும், சோதனை நெசவுச்சாலை பெனாரிஸிலும், தச்சு வேலைப் பள்ளிக்கூடம் லக்நௌவிலும், சீக்கிரம் ஏற்படும். கோரக்பூரில் இன்னொரு பள்ளிக்கூடமும் திறக்கப் போகிறோம். ரூர்க்கி காலேஜைத் திருத்தம் செய்திருக்கிறோம். கான்பூரில் தொழிற் கலாசாலை ஸ்தாபிப்பதைப் பற்றி எழுதி 3¼ வருஷமாய் விட்டதென்றாலும், அதற்கு இன்னும் சாங்கிஷன் வந்த பாடில்லை. பூர்வத்தில் நாம் போட்ட திட்டம் கட்டிடத்துக்கு 8 லட்சமும், வருஷ வாரிச் செலவு 2½ லட்சமும், கொண்டது. இது அபரிமிதமான செலவென்று சொல்லப்பட்டது. சென்ற மே மாதத்தில் மறுபடி ஒரு திட்டம் போட்டு அனுப்பினேன். முதலில், 3½ லட்சமும், வருஷ வாரிச் செலவு 82,000 முமாக இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது. இப்போது ஆனரபில் மிஸ்டர் பட்லர் தம் வேலையை ஏற்றுக்கொண்டுவிட்டபடியால், இந்தத் திட்டம் சீக்கிரம் சாங்க்ஷன் செய்யப்படுமென்றும், தொழிற் கல்வி விஷயமாய் நாம் போட்டுள்ள திட்டத்தின் செலவிலொருபாகத்தை இந்தியா கவர்ன்மெண்ட் உதவும்படி அவர் செய்வாரென்றும், நான் கோருகிறேன்.

மூன்றாவதாக, விஸ்தாரமாய் ஒரு தொழிற் பொருட்காட்சி நடத்த வாரம்பித்தோம். இதன் செலவின்

பொருட்டு, சிற்றரசர்களாலும், பூ சொத்துடையவர்களாலும், இம்மாகாணங்களிலுள்ள மற்றச் செல்வவந்தர்களாலும் ரூபா $3\frac{3}{4}$ லட்சத்துக்கு மேலே நன்கொடையாகச் சேர்ந்தது; பட்டினங்களிற்போல, கிராமாந்தரங்களிலும் இவ்விதம் காட்சி நடத்துவதில் மனக்கிளர்ச்சி காட்டப்பட்டது. நீங்கள் வாசித்த அட்ரெஸில் நிருவாகக் கமிட்டியாரின் முக்கிய நோக்க மின்னதென்பது அடங்கி யிருக்கிறது. அந்நோக்கத்தை நீங்கள் சற்றும் குறைவின்றி நிறைவேற்றி விட்டீர்கள். அறிவு புகட்டுவதோடு களிப்பூட்டுவதையும் கலந்து நடத்தினால் காட்சிகளைப் பார்ப்போருக்குப் பிரியமா யிருக்கிற தென்பது அநுபவத்தால் விளங்குகிறது. இக்காட்சியு ளடங்கிய எண்ணிறந்த அதிசயங்களும் கைப்புத்தகத்தில் (hand book) நன்றாய் வருணிக்கப்பட் டிருக்கின்றன.

இக்காட்சியின் அமிசங்கள்.

இக்காட்சியில் இரண்டொரு பிரிவுகளைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் சொல்லப்போகிறேன். விவசாயம், காட்டிலாகா, கல்வி ஆகிய இவைகளைப்பற்றிய பிரிவுகளை நடத்துவதில் கவர்ன்மெண்ட் பொறுப்பேற்க வேண்டுமென்று கருதப்பட்டது. இப்பொறுப்பைக் கவர்ன்மெண்ட் வகிப்பதில் தங்கள் கால்த்தையும் பொருளையும் செலவிட்டு உதவி செய்த கனவான்களுக்கு இங்கு நான் வந்தனம் செலுத்துகிறேன். விவசாயப் பிரிவின் முக்கிய அம்சமென்னவென்றால், விவசாயம் செய்வதிலும் விவசாயப் பொருள்கள் விளைப்

படத்தக்க விதமாய் அவற்றைத் தயார் செய்வதிலும் உபயோகமாகி, மனிதரின் உழைப்பைக் குறைக்கக் கூடியவாயுள்ள யந்திரங்கள் வகைக்கொன்ருய்க் காட்டப்பட் டிருக்கின்றன. இப்போதாணமெங்கும் பல காரணங்களால் கூலி விகிதங்கள் உயர்ந்து, அவ் வுயர்வைப்பற்றிப் பூசொத்துடையவர்களும் பெரும் விவசாயிகளும் கவலைப்படும்படி யிருக்கும் இத்தருணத்தில் இவ்விதக் காட்சி பொருத்தமானதே. கூலி வேலையைக் குறைப்பதற்கான யந்திரங்களுக்கு வரவர அதிகக் கிராக்கி யுண்டாகி வருகிறது. பல பெரிய யந்திர சாலைகள் இவ்விதம் கிராக்கி பெருகிவருவதைக் கருதி, தங்கள் தங்கள் மாதிரி யந்திரங்களைக் காட்சிக்கு அனுப்புவதோடு மட்டும் நில்லாமல், இத்தேச விசேஷங்களுக்கு ஒத்தபடி யந்திரங்கள் இயற்றுவதில் அதிகம் பாடுபட்டு வருகின்றன வென்றறிய நாம் சந்தோஷப்படுகிறோம். இவ்விஷயத்தில் இப்போது காட்சியி லிருக்கும் விவசாய யந்திரங்களைப் போலச் சேர்த்து இதுவரை காட்சி நடத்தப்பட்டதில்லை. ஒரு யந்திரம் எவ்வளவு உபயோககரமானதாயினும், காட்சியில் வந்துவிட்ட தினாலேயே அதற்கு நிலையான கிராக்கி யேற்பட்டு விடாதென்று வியாபாரிகளுக்குப் பிறர் சொல்லித் தெரியவேண்டியதில்லை. விலைப்படுத்துவதற்குத் துவக்கத்தில் அரிய சாதனமாக இந்தக் காட்சியிருக்கும்; விலைப்படுத்த வேணுமென்ருல், மேன்மேலும் விடாமுயற்சி செய்யவேண்டும். பிறதேசங்களிலிருந்து இங்கு காட்சிப் பொருள்கள் கொணர்ந்து வைத்திருப்பவர்கள் பொருள்கள் விலைப்படக்கூடிய தேசத்திலேயே

இப்படி காட்சி நடத்தியிருக்க வேண்டுமென்று இப்போதேனும் உணருகிறார்களோ, என்னவோ? கல்கட்டா, பம்பாய், போன்ற தூரத்திலிருக்கும் நகரங்களின் ஏஜென்ஸிகள் வட இந்தியாவில் பொருள்களை விலைப்படுத்துவதற்கு வேண்டியபடி அவ்விடத்தைப்பற்றித் தெரிந்தவர்களாகவோ, அவ்விடத்தில் ஆதரிப்புடையவர்களாகவோ, இது வரையில் இருக்கவில்லை ; இப்படி விலைப்படுத்தும் பொருட்டு ஆரம்பத்தில் செய்யும் முயற்சிகள் பலனடைவதற்கு அவசியமான அளவு அவர்கள் கவர்ன்மெண்ட் விவசாய இலாகாக்களில் நெருங்கிய பழக்கமுள்ளவர்களாயுமிருக்கவில்லை.

விவசாயப் பிரிவு.

விவசாயப் பிரிவு மிஸ்டர் பர்ட் (Burt) யிடம் ஒப்புவிக்கப்பட்டது. அவர் கடுமையாகவும் இடைவிடாதும் உழைக்கவேண்டியதாயிற்று. அவர் பொறுப்பை மிகுந்த திறமையுடன் நிருவகித்திருக்கிறார். மேலும், தாம் பொறுப்பேற்ற பிரிவையன்றி வேறு வகையிலும் கமிட்டிக்கு அதிக உதவி அவர் செய்திருக்கிறார். இம்பீரியல் விவசாய இலாகா, பூசொத்துடையோர்கள், யந்திர மியற்றுவோர்கள் இவர்களின் உதவியின்றி விவசாய டைரெக்டராகிய மிஸ்டர் மோர்லண்ட், அல்லது மிஸ்டர் பர்ட், தனியாகப் பாடுபட்டிருந்தால், விவசாயப் பிரிவு இவ்வளவு சிறந்திரா தென்று நான் சொல்லத் தேவையில்லை. லோகல் கவர்ன்மெண்டின் பேரால் நான், அருமையான சகாயம் செய்த இம்பீரியல் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும், உதவி செய்த பூசொத்துக்காரர்களுக்

கூர் வந்தனம் செலுத்த விரும்புகிறேன். காசி
மகாராஜா, மெயின்புரி விவசாயச் சங்கம், முஸபர்
நகர் நிலச்சுவான்களின் சங்கம், சந்தார்பூர் ராஜா சந்த்ர
சூர் சிங்க், பரில்லி ராஜா காளிசரன், அவகார் சமஸ்தா
னம், அலகாபாத் ராய் ராகவ பிரசாத் நாராயண சிங்க்
பகதூர், மிர்ஸாபூர் ராய் ஸ்ரீநிவாச பண்ட் சாகிப்,
பஸ்டி பாகு சோஸ்தாத் சிங்க், பனாரிஸ் பண்டிட் வைத்
தியநாத் தாஸ் ஷாப்ரி, ஆகிய இவர்களுக்குக் கவர்ன்
மெண்ட் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

விவசாயப் பிரிவு சிறந்து விளங்கும்படி சகாயம்
செய்தவர்களான காட்சிப் பொருள் கொணர்ந்தோர்
களிற் சிலரைக் குறிக்கிறேன்:—மெஸர்ஸ் பர்ன்
அண்ட் கம்பெனி, மெஸர்ஸ் யூவிங் அண்ட் கம்
பெனி., கல்கத்தா;, மெஸர்ஸ் பர்ன் அண்ட் கம்
பெனி., ஹௌரா; மிஸ்டர் F. காஸ்லிங், மெஸர்ஸ்
அக்மே வியல்ஸ் அண்ட் கம்பெனி, கல்கத்தா ; மெஸர்ஸ்
ஜெஸ்ஸாப் அண்ட் கம்பெனி, கல்கத்தா ; மெஸர்ஸ்
பெக், ஸதர்லேண்ட் அண்ட் கம்பெனி, கான்பூர் ;
மெஸர்ஸ் ரான்ஸம், ஸிம்ஸ் அண்ட் ஜெப்ரீஸ், இப்ஸ்
விச் ; மெஸர்ஸ் க்ரீன்வுட் அண்ட் பட்லி, ; மெஸர்ஸ்
T. F. தாம்ஸன் அண்ட் கம்பெனி, கல்கத்தா ;
மெஸர்ஸ் ரிச்சார்ட்ஸன் அண்ட் க்ரட்டஸ், பாம்பே ;
மெஸர்ஸ் மக்பெக் பிரதர்ஸ், பாம்பேயும் கல்கத்தா
வும் ; எம்பயர் எஞ்சினீரிங் கம்பெனி, கான்பூர் ;
மெஸர்ஸ் ராஜா அண்ட் கம்பெனி, அலகாபாத்தும் லாகூ
ரும்; மெஸர்ஸ் பிளையர், காம்பெல் அண்ட் மக்லீன்,
கிளாஸ்கோ ; மெஸர்ஸ் தாஸ், பிராட்பெண்ட் அண்ட்

ஸன்ஸ், ஹட்டர்ஸ் பீல்ட்; மெஸர்ஸ் டன்கன ஸ்ட்ராட்டன் அண்ட் கம்பெனி, பாம்பே; மெஸர்ஸ் டர்னர் ஹோர் அண்ட் கம்பெனி, பாம்பே; மெஸர்ஸ் மேன் அண்ட் கம்பெனி, கல்கத்தா; மெஸர்ஸ் பால்மர் லாரி அண்ட் கம்பெனி, கல்கத்தா; மிஸ்டர் F. கெவென்டர், அலிகர்; இந்தப் பிரிவுக்காக மெஸர்ஸ் பெர்ட் அண்ட் கம்பெனி 500 டன் கோல் (Coal) கொடுத்திருக்கிறார்கள்.

காட்டுப் பொருட் பிரிவு.

காட்டுப் பொருட் பிரிவில் கவர்ன்மெண்ட் இலாகாவை யன்றி வெளியிலிருந்து உதவி செய்ய அவ்வளவு இடமில்லை. ஆயினும், அரம் அறுக்கும் யந்திர சம்பந்தமாய் ஒரு ஆயில் என்ஜின் (Hornby Akroyd) இரவலாய்த் தந்ததினிமித்தம் மெஸர்ஸ் அலெக்ஸான்டர் யங் அண்டு கம்பெனியாருக்கும், மரவேலை செய்யும் யந்திரத்தை இரவல் தந்ததற்காக மெஸ்ஸர்ஸ் ஆமுடி அண்டு கம்பெனியாருக்கும், காட்டுப் பொருட்காட்சியை யொழுங்கு படுத்தி வைத்ததற்காகப் பம்பாய் மெஸர்ஸ் மர்ரே அண்ட் கம்பெனியாருக்கும், காட்டிற்கான ட்ராம் வேயைக் காட்சிப் பொருளாக வைத்ததனிமித்தம் கல்கட்டா டிகாவில்லி கம்பெனியாருக்கும், நாம் வந்தனம் செலுத்தவேண்டும். இப்பிரிவு மிஸ்டர் க்லட்டர்பக் (Clutter buck) கினிடம் ஒப்புவிக்கப்பட்டது. இப்பொறுப்பை அவர் சற்றும் சளைக்காத ஊக்கத்தையும் காட்டுப் பொருள்களைப்பற்றி நிரம்ப அறிவையும் காட்டி நிருவகித்திருக்கிறார். பல வகை மரங்களும் வேறுவிதக்

காட்டுப் பொருள்களும் அருமையாய்த் திரட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. ஷிகார்வேட்டை பிரிவில் சில நேர்த்தியான வெற்றி அடையாளங்கள் அடங்கியிருக்கின்றன. காட்டுப் பொருட்காட்சியானது இப்போது வீணாக விடப்படும் காட்டுப் பொருள்களை வாங்குவதில் பிரியத்தைத் தூண்டுமென்று கருதுகிறேன். பலவித மரங்கள் ஏராளமாய்க் காட்டில் கிடைக்கின்றன. அவை அழுகிப்போகக் கூடியவையாயும், கறையான் தின்றழிந்து போகக் கூடியனவாயுமிருப்பதாலே பெரும்பாலும் அவைவாங்குவோரற்றிருக்கின்றன. ஆனாலோ, பத்திரப்படுத்தவும் பாதுகாக்கவுமான பல முறைகள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால், அவற்றால் இலேசாகவும் அதிகச் செலவின்றியும் மரங்களை நீடித்து நிற்பனவாய்ச் செய்யலாம். செய்தால், தொழில் முயற்சிகளுக் குபயோகமாகும் வண்ணம் நயமாக மரங்கள் ஏராளமாய்க் கிடைப்பனவாகும்.

காட்டிற் கிடைக்கும்படியான பொருள்களில் முக்கியமானது மரக் கூழ்(Woodpulp). இப்போது செய்யப்படும் காகிதத்தில் நூற்றுக்கு 80 பாகம் அதனாலேயே செய்யப்படுகிற தென்பது சிலருக்குத்தான் தெரியும். உலகத்தில் செலவாகும் பேபரில், தற்காலம் செய்யப்படும் கணக்குப்படி, ஒரு வருஷத்துக்கு 80 லக்ஷம் டன் நிறையுள்ளது. அதில் 65 லக்ஷம் டன் மரக்கூழினாற் செய்யப்படுகின்றது. காகிதச் செலவு சராசரி பத்து வருஷத்தில் நூற்றுக்கு 25 அதிகமாயிருக்கின்றது. இப்படிச் செலவு அதிகமாவதையும் உலகத்தில் பல தேசங்

களில் கிடைக்கக்கூடிய மரக் கூழானது குறைந்து வருவதையும் சேர்த்துப் பார்க்கும்போது, பிரசினை மிகவும் முக்கியமான தாகின்றது. இந்தியாவில் இந்தக் கூழ கிடைக்கும் மரங்கள் தொடப்படுவதில்லை. இப்படித் தொடப்படாத மரங்களினுற் கிடைக்கும் கூழையறிந்து பரிசோதிப்பதற்காக இந்தப் பொருட்காட்சிப் பிரிவில் ஒரு சோதனைச் சாலை (Laboratory) அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சோதனை செய்வதற்காகக் கூழிலும் நாரிலும் சமர்த்தரான மிஸ்டர் வில்லியம் ரெயிட் (Mr. William Raitt) அமர்த்தப்பட் டிருக்கிறார். நயமான மரங்கள் உபயோகப்படக்கூடிய வேறு பல தொழில்கள் இருக்கின்றன. கவர்ன்மெண்டினுல் காடுகள் சாவதானப்பட்டிருக்கும் உலகத்து மற்றத் தேசங்களில் எப்படியோ, அப்படி இந்தியா தேசத்து ஜனங்கள் காட்டிலுண்டாகும் மரங்களினுல் பற்பல தொழில்கள் செய்து ஜீவனம் பெறக்கூடா தென்பதற்கு நியாயமில்லை. காட்டுத் தொழில்கள் அபிவிர்த்தியாவதற்குக் காட்டிலிருந்து பற்பல விளை பொருள்களைத் தெரிந்தெடுப்பது தான் கஷ்டம். மலைப்பிரதேசங்களில் ஜல மின்சார விசையை ஸ்தாபிப்பது இதற்கு ஒரு நிவர்த்தியாகும். அப்படிச் செய்தால் அதை ஸ்தாபித்த இடத்திலேயே முதலெடுப்பில் செய்யும் வேலைகள் முடிவு பெறக் கூடும்.

கல்விப் பிரிவு.

கல்விப் பிரிவானது அதில் காட்டப்படும் விசேஷமான பொருள்களால் அதை நடத்துவோருக்குக்

கீர்த்திதரும். இந்தியாவில் ஒவ்வொரு பாகத்தினின்றும் அதற்குப் பொருள்கள் வந்திருக்கின்றன. அவைகளுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்குக் கிரேட் பிரிட்டனிலுள்ள ஸ்கூல்களிற் செய்யப்படும் பற்பல பொருள்கள் வந்திருக்கின்றன. அந்தப் பிரிவில் பொருள்களைக் காட்டுவதற்கு எங்கும் விருப்ப மிருப்பதாகத் தெரிகின்றது. அந்தப் பிரிவு விசேஷமாகப் பெரிதா யிருந்தாலும், அதில் அடங்கக்கூடியனவற்றிற்கு அதிகமான பொருள்கள் அந்தப் பிரிவில் காட்ட வந்திருக்கின்றன. அப்படி வந்திருக்கும் பொருள்களில் வெகுகவலையுடன் பொறுக்கி எடுக்கப்பட வேண்டியவைக ளிருந்தன. ஆகையினால், அங்கங்கே சில பொருள்களுக்கு உடையவர்கள் ஏமாற்றமடைந்துபோய்விட்டார்கள். கல்வி விஷயமாய்ப் பார்க்கும்போது, இந்தப் பிரிவி லடங்கிய ஒவ்வொன்றும் முக்கியமானதாய் அல்லது மனசுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியதா யிராமல் இருக்காது. காட்டப்படக் கூடிய அநேக பொருள்கள் காட்டப்படாமற் போயிருக்கின்றன. ஆகையினால், எந்தப் பொருள்களையாவது காட்டமுடியாமற்போனால் அந்தப் பொருள்கள் காட்டுவதற்குத் தகுந்தனவல்லவென்று நினைக்கக்கூடாது. உண்மையில், தள்ளுபட்டுப்போன அநேக பொருள்கள் உயர்ந்த யோக்கியதையை உடையன. பம்பாய்க் கவர்ன்மெண்டார் அதனுடைய ஆர்ட்ஸ் ஸ்கூலிலிருந்து சிறந்த காட்சிக்குக் கொடுத்த விசேஷப் பணவுதவிக்காகவும் பொதுப் படிப்பை விளக்கிக் காட்டும் அழகான காட்சிக்காகவும் அதற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஈஸ்ட் பெங்

கால் அண்ட் ஆஸாமுடைய கவர்ன்மெண்டே சில நல்ல பொருள்களைச் சேர்த்தும் கவர்ன்மெண்ட் ஆப் இந்தியாவுக்கு சீப் செக்ரிடேரியாகிய மிஸ்டர் நாதன் C. I. E., கீழ் வெங்காளத்திலுள்ள பெண் கல்வி சம்பந்தமாய்ச் சில பொருள்களைச் சேர்த்தும் அனுப்பியிருக்கிறார்கள். இந்தியாவிலும் அயர்லாந்திலுமுள்ள கிறிஸ்டியன் பிரதர்கள் தொழிற்கல்வி விஷயமாய் அவர்கள் அனுப்பிவித்த பொருள்களினால் நமக்குப் பெரும் உதவி செய்திருக்கிறார்கள். நார்தாம்ப்டன் கௌண்டி கௌன்ஸில் கிராம ஸ்கூல்களின் படிப்பைப் பற்றின காட்சிகள் அனுப்பியிருக்கிறார்கள். அவைகள் இந்தப் பிரிவில் விசேஷமான இடம் பெற்றிருக்கின்றன. ஆக்ரா காலேஜிலிருந்து விலைபெற்ற படங்கள் அடங்கிய கையெழுத்துப் பிரதிகள் இரவலாக வந்திருக்கின்றன.

இந்தப் பிரிவு விஷயமாய் யார் யார் கவர்ன்மெண்டுக்கு ஒத்தாசை செய்தார்களோ அவர்களுக்கெல்லாம் அதன் நன்றி உரியது. நம்முடைய பொருட்காட்சி விவசாய சம்பந்தமானதும் கைத்தொழில் சம்பந்தமானதுமாயுள்ளபடியால், அதில் முக்கியமானது நெசவு. அதில் நூற்பதற்கும் நெசவு செய்வதற்கும் அவசியமான யந்திரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட உபாயங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. எல்கின்மில்ஸ் காரர்களால் யந்திரங்கள் அடக்கம் முழுமையும் காட்டப்படுகிறது. கான்பூர் காட்டன் மில்ஸ்காரர்கள் பருத்தியைச் செடியிலிருந்து எடுத்தபடியும், பிறகு அதை நூலாக நூற்றுத் துணியாகச் செய்கிறவரையில் உள்ள

அந்தந்தப் பகுதிகளில் அது எப்படியிருக்கின்றதோ அப்படியும், காட்டுகிறார்கள். மூயிர் மில்ஸ்காரர்களும் பருத்திக் கைத்தொழில் முழுமையும் காட்டுகிறார்கள். கான்பூர் உல்லன் மில்ஸும் தார்வாலைச் சேர்ந்த இஜெர்டன் மில்ஸும் அவர்களுடைய தொழில்கள் முழுமையையும் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். இந்தப் பிரிவு முழுமையும் கவனத்துக் குரியது. ஐரோப்பாவிலுங் கூட கைத்தறி நெசவானது லாபம் தரத்தக்கதாயிருக்கின்றது. இந்தியாவிலோ அது கிராமாந்தரங்களில் விவசாயத்துக்குப் பிறகு இரண்டாவது தொழில். பாராபாங்கியில் ஹியூவெட் நெசவு ஸ்கூல் நேர்த்தியான காட்சியுடைத்தா யிருக்கின்றது. அதில் ஒரு திருப்திகரமான பாகம், மிஸ்ஸஸ் ஷெரிங்கால் சொல்லிக்கொடுக்கப்பட்டு ஸ்திரிகளாற் செய்யப்பட்ட நேர்த்தியான வேலை. போன பெப்ரவரிமாசத்தில் நான் அந்த ஸ்கூலைத் திறந்து வைத்தபோது, கைத்தறி நெசவை ஒரு முக்கியமான வீட்டுத் தொழிலாக வற்புறுத்திச் சொன்னேன். நெசவுக்காரர்கள், கட்டுப்பாடும் அறிவும் சொல்லி வைப்பாரில்லாமல் இப்போது மிகவும் தடைப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் இதுவரை அசட்டை செய்து கெட்டுப்போயிருந்து மறுபடியும் உயிர்ப்பிக்கப்பட்டு வரும் ஒரு தொழிலைச் சொல்லுகிறேன். என்னவென்றால், அது பட்டுத் தொழிலாகும். ஆதியில் இந்திய தேசத்துப் பட்டென்றால் அது எங்கும் புகழ் பெற்றிருந்தது. சமீபத்தில், பட்டு செய்வதில் உபயோகப்படும் சாமான்கள் உலகத்துக்கு ஜப்பானிலிருந்தும் சைனுவிலிருந்தும் கிடைத்து, இந்தியப் பட்டு உலகத்து

மார்க்கெட்டுகளில் கவலையுண்டாக்கத் தக்க போட்டியைச் செய்வதாயில்லை. ஆனாலும், இந்தியாவில் இந்தத் தொழிலைப் புதுப்பிப்பதற்காக வெகு கவலை செலுத்தப்பட்டு வந்திருக்கிறது. தென்னிந்தியாவில், பங்களூரில் இப்போது ஸால்வேஷன் ஆர்மியின் மேற்பார்வையிலிருக்கும் டாடா பட்டுப் பண்ணையின் ஒரு மல்பெரிப் பட்டு எனக்கு மாதிரி காட்டப்பட்டது. இந்தப்பட்டு அதிசயமான பளபளப்பும் திறமும் காட்டினபடியால் அது விலையாகி, செய்தவனுக்கு லாபம் கிடைக்குமென்று நம்புகிறேன். இன்னும் அனேக விதமான கீழ்த்தரப் பட்டுகள் இருக்கின்றன. அவைகளைப் பயிர் செய்தாலும் லாபம் கிடைக்கக்கூடும்.

விவசாயப்பிரிவில் M. அக்பர் மகமத் கானால் செய்யப்படுகிற பட்டுப்பூச்சி வளர்ப்பு ஒன்றுகாட்டப்படுகிறது. அதை நன்றாய்ச் சோதனை செய்தல் பயன்படும். கைத்தறி நெசவினால் ஜீவிப்போர்களின் வரும்படிக்கு உதவி செய்வதாகப் பட்டு செய்வதை ஒரு தொழிலாகப் பின்பற்றலாம். பட்டுப்பூச்சி வளர்ப்பவர்கள் தங்களுடைய சாமானை மார்க்கெட்டுக்குக் கொண்டுவருவதில் ஒத்தாசை செய்வதில் ஒரு விதமான ஏற்பாடு அவசியமாயிருக்கும். இது கைகூடுவதற்கு ஒரு விதமான கட்டுப்பாடு வேண்டும். ஸ்காட்லாந்திலும் அயர்லாந்திலும் 'காட்டேஜ் இன்டஸ்ட்ரி அஸோஸியேஷன்' என்ற சபையானது செய்துவந்த வேலையினால் அத்தேசங்களில் வீட்டுத் தொழில்கள் அதிசயமாய் அதிகப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும் அதுமாதிரி சபை ஏன் வேலை செய்யக்

கூடாது? அது தேசத்துச் சிற்றரசர்களுக்கும் தலைவர்களுக்கும் மனசில் எட்டவேண்டும். பூர்வம் இந்தியாவில் செழித்துவந்த தொழில்களுக்கு ஆதரவா யிருந்தவர்கள் அரசர்களும் மேற்குலத்தாரும். இப்போதும் இவர்களுடைய ஆதரவினால் பெரும் நன்மையுண்டாகுமென்று எண்ணம் தோன்றக்கூடியது. வீட்டுத் தொழில்கள் மட்டும் இந்தத் தேசத்தில் ஸ்தாபிக்கப்படுமானால், பட்டுப்பூச்சி வளர்ப்பதை அநேகந் தொழில்களில் ஒரு தொழிலாகச் சொல்லுவேன். வேலை செய்கிறவர்கள் ஒன்றாய்க் கூடி தைரியப்பட்டு, தாங்கள் செய்யும் சாமானை மார்க்கெட்டுக்குக் கொண்டுவருவதற்குச் சாமர்த்தியமுண்டென நம்புவார்களானால், இந்தியாவில் பொருளாதார நிலைமையைப்பற்றின பிரசினையை முடிவுசெய்ய ஒரு உண்மையான அடியெடுத்து வைத்தவர்களாவோம்.

எஞ்ஜினீரிங் பிரிவு.

பொருட்காட்சியின் மற்றப் பாகங்களைப்போல் இந்த எஞ்ஜினீரிங் பாகம் அவ்வளவு முற்றுப்பெற்றதாயிருக்கவில்லை. யந்திரங்களில் அநேகம் ஐரோப்பாவிலிருந்து வந்தபடியால் அவைகள் பளுவாயிருக்கின்றன. அவைகளைக் கப்பலேற்றி அனுப்புவதில் தாமசம் உண்டாயிற்று. மெஸர்ஸ் மார்ஷல் அண்ட் ஸன்ஸ், மெஸர்ஸ் ஹீட்லி அண்ட் க்ரெஷாம், மெஸர்ஸ் பர்ன் அண்ட் கம்பெனி, மெஸர்ஸ் ஆஸ்லர் அண்ட் கம்பெனி, ஜெர்மன் எஞ்ஜினீரிங் பில்டிங், மெஸர்ஸ் அக்டேவியஸ் ஸ்டீல் அண்ட் கம்பெனி, மெஸர்ஸ் பால்மர் லாரி அண்ட் கம்பெனி, மெஸ்ஸர்ஸ் ஜெஸ்ஸாப் அண்ட்

கம்பெனி,—இந்தக் கம்பெனிகள் காட்டும் காட்சியானது முற்றுப்பெற்றதாகவும் அல்லது அநேகமாய் முற்றுப்பெற்றதாகவும் இருக்கின்றது. இந்தப் பிரிவில் காட்டப்படும் யந்திரங்கள் அனைத்தும் ஓடும்படியான நிலைமையி லிருக்கும்பொழுது, அவைகள் மிகவும் நேர்த்தியானவும் கற்பிக்கக் கூடியனவாயு மிருக்கும். யந்திரங்களை ஓட்டுவதில் மின்சார விசை உபயோகப் படுத்துவதினால் அவைகள் அதிக கவனத்துக்கு உரியவைகளாகின்றன. மிஸ்டர் எடிஸன் வெகு காலமாய் மின்சாரத்தை யுண்டுபண்ணி, அதை ஒரே இடத்தில் சேர்த்து வைக்கும் எண்ணமாய்ச் செய்து வரும் பிரயத்தினம் கைகூடுமானால், நம்முடைய பிரதான பட்டினங்கள் மாரிகாலத்தில் அதி வேகமாய் ஓடும் ஆறுகள் கொண்டதா யிருப்பதால், அவைகளில் அதிக விலை பெற்ற சக்தியும் இலகுவான உபாயங்களும் ஏற்படும்படியான காலத்தை எதிர்பார்த்திருக்கலாம்.

கை வேலைகள்.

இந்தப் பொருட்காட்சியில் மிகவும் ருசிகரமானமான பாகம் என்னவென்றால், கை வேலைக்காரர்கள் பல தலை முறைகளாய்த் தம் தகப்பன்மார்கள் வேலை செய்து வந்த மாதிரியாகவே, வேலை செய்து வரும் இடங்கள். அவன் தலை முறை தத்துவமாய் அறிந்து கொண்ட கைலாகவமும் இருக்கின்றது; ஆனால், அவனுடைய வழிகளும் கருவிகளும் அநேகமாய் பழைய காலத்தைப் பற்றினவை. அவன் பொதுவாய்உபயோகிக்கும் பழைய காலத்துக் கருவிகளைப் பார்க்கும்போது,

அவன் செய்யும் நானாவிதத் தொழில்களைக் கண்டு ஆச்சரியப்படும்படியாய், அவன் ஒரே மாதிரியாய் வேலை செய்வதும் அவன் காட்டும் திறமையும் நம் வியப்புக்குரியன. ஆனால், அவனுடைய இழிவான மாதிரிகளையும் இளப்பமான வேலைத் திறமையையும் பார்த்துத் துக்கிக்கவேண்டியிருக்கின்றது. இதற்கு நாம் வேலைக்காரன் மீது குற்றம் சொல்லக்கூடாது. மேல் நாட்டிலிருந்து வரும் யாத்திரீகர்கள் இளப்பமான மாதிரிகளிலும் திறமையின்மையிலும் அவன் திருப்தி யடையும்படியாய்ச் செய்து வருவதைப் பார்த்துத் தான் துக்கிக்கவேண்டும். ஆகையால், எந்தக் கை வேலையில் இளப்பம் தோன்றி யிருக்கிறதோ அதை ஆதியிலிருந்த திறமைக்குக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். மாதிரி வரைதலைச் சொல்லிக் கொடுக்கும் ஸ்கூல்களினால் பூர்வ காலத்து மாதிரிகளின் அழகும் கபடின்மையும் திரும்பிக்கொண்டு வரலாமென்று நம்பக் கடவோம். அவர்களுடைய ஒத்துழைப்பினால் அவர்களுடைய புத்தியைக் கிளப்பி, அவர்களுடைய கருவிகளிலும் வழிகளிலும் அபிவிர்த்தியை உண்டு பண்ணக் கடவோம். இந்தக் கை வேலைகள் அவைகளுடைய சரியான நிலைமையைப் பெறவேண்டுமானால் இப்படியெல்லாம் செய்தல் அவசியமாகும். இப்போது அவர்களுக்கு ஆதரவு செய்யும் செல்வவான்கள் இல்லை. நல்ல வேலைகள் செய்யப்பட வேண்டுமானால் அதற்கு கிராக்கி இருக்கவேண்டும். வேலை செய்வோரும் கலைஞானமுள்ளவர்களும் அவரவர்களுடைய தொழிலுக்கு வெகுமதி பெறவேண்டும். பொது ஜனங்களு

டைய ருசியில் அபிவிர்த்தி யுண்டாகிற வரையில் சித்திர வேலையுள்ள சாமான்களின் குணம் உயருமென்று நாம் நினைக்க நியாயமில்லை. நான் இப்போது சொல்லப்போகும் குறிப்புகளில் எக்ஸிகியூடிவ் கமிட்டியுடன் சேர்ந்து உழைப்பதாகவும் அவர்களுடைய பிரதிநிதியாயிருந்து பேசுவதாகவும் நீங்கள் அங்கீகரிக்கவேண்டும். நமக்கு உபகாரம் செய்தவர்களுடைய பெயரெல்லாவற்றையும் இங்கே சொல்லுதல் சாத்தியமல்ல. நமது பொருட்காட்சி நிறைவேறுமானால், அப்படி நிறைவேறுவது நமது மாகாணத்துக்குள் வசிப்பவர்களுடைய ஒத்தாசையோடு கூட, அதற்கு வெளியிலிருப்பவர்களும் மனமொப்பிச் செய்த உபகாரத்தினாலென்று நாம் அறியவேண்டும்.

பொதுவாய்க் கிடைத்த உபகாரம்.

இந்தியாக் கவர்ன்மெண்ட் நமக்குப் பல வழிகளில் உதவி செய்திருக்கிறார்கள். ஆர்மி டிபார்ட்மெண்ட் அதற்குச் சொந்தமான பூமியை உபயோகப்படுத்த இடங்கொடுத்திருக்கிறது. காமர்ஸ் அண்ட் இன்டஸ்டிரி டிபார்ட்மெண்ட் டெலிகிராபும் போஸ்டாபீசும் அடங்கிய கோர்டைக் கொடுத்து உதவி செய்திருக்கிறது. இந்த இரண்டு விதமாயும் செய்த உபகாரத்தினால் வரும் வரும்படியிலிருந்து இந்த டிபார்ட்மெண்டுக்கு 5 லக்ஷம் ரூபாய் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. என்னுடைய பழைய உடன் வேலைக்காரராகிய மிஸ்டர் ராபர்ட்ஸனுடைய பிரேரணை சக்திக்காக அவரிடத்தில் நாம் நன்றி செலுத்தவேண்டியது. இன்று அவர் பிரசன்னமாயிருந்து நாம் செய்

யும் லேவேயில் அவருக்கிருக்கிற அக்கறையைக் காட்டியிருக்கிறார். மேஜர் ஜெனரல் மேகனுக்கு அவர் லக்நௌவில் காட்டி வரும் பாக்ஸிங் கம்பெடிஷனையும் அஸ்ஸால்ட் அட் ஆர்ம்ஸையும் நமது பொருட்காட்சியில் உபயோகப்படுத்த இடங் கொடுத்ததற்காக அவருக்கு வந்தனம் செலுத்தவேண்டும். அவரும் மற்ற மிலிடெரி உத்தியோகஸ்தர்களும் இந்த எக்ஸ்ஹிபிஷனுக்குப் பல விதமாய் ஒத்தாசை செய்ததற்காக அவர்களுக்கு வந்தனம் செலுத்தவேண்டும். அலகாபாத்துக்கு வரும் அநேக ரயில்பாதைகளைச் சேர்ந்த கம்பெனிகள் நமக்கு அனேக ஒத்தாசை செய்திருக்கின்றன. பிரயாணிகளுக்கும் காட்டப்படும் பொருள்களுக்கும் கணிசமான சகாயங்கள் செய்திருக்கிறார்கள். ஏஜெண்ட் மிஸ்டர் ட்ரிங்குக்கும் ஈஸ்ட் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களான மெஸர்ஸ் லாரி, ஹன்டர், பீயர்ஸ், பால்ட்வின் இவர்களுக்கும் இவர்கள் செய்த விசேஷ சகாயத்துக்காகக் கடமைப்பட்டிருக்கிறோம். P.&.O. கம்பெனி டயர்க்டர்கள் அவர்கள் கடைசியாய்ச் செய்த இரண்டு கப்பல்களைப் போல் மாதிரிகள் செய்து அவைகளைக் காட்ட அனுமதி கொடுத்திருக்கிறார்கள். பவர் அண்ட் லேடிங் ஸ்கீம்களுக்காக யந்திரங்கள் முதலியவற்றிற்காகச் சகாயம் செய்த அந்தந்த கம்பெனிகளுக்கு அதிகக் கஷ்டமும் செலவும் பிடித்த போதிலும் அவர்களிடமிருந்து அதை நாம் பெற உதவி செய்த பிரிட்டிஷ் வெஸ்டிங் ஹௌஸ் எலெக்ட்ரிகல் மானுபாக்சரிங் கம்பெனியின் ஏஜெண்ட்களுக்கும், மெஸர்ஸ் பாடாக் அண்ட் வில்காக்ஸூக்கும், மெஸர்ஸ்

பெல்லிஸ் அண்ட் மார்கமுக்கும், ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனியின் ஏஜென்டுகளாகிய மெஸர்ஸ் அக்டேவியஸ் ஸ்டீல் அண்ட் கம்பெனிக்கும் அவர்கள் செய்த ஒத்தாசைக்காகக் கடமைப்பட்டிருக்கிறோம். நமது பம்பிங் ஸ்டேஷனுக்காகப் பம்பிங் யந்திரங்கள் முழுமையும் டீசல் ஆயில் எஞ்சின் கம்பெனி, மெஸர்ஸ் டன்கன், ஸ்ட்ராட்டன் அண்ட் கம்பெனி, மெஸர்ஸ் டிமார் அண்ட் கம்பெனி, மெஸர்ஸ் ஆஸ்லர் அண்ட் கம்பெனி, மெஸர்ஸ் மார்ஷல் அண்ட் கம்பெனி, ஒவ்வொருவரும் கொடுத்திருக்கிறார்கள். பம்பிங் ஸ்டேஷனில் செலவாகும் நிலக்கரியை பெங்கால் கோல் கம்பெனியின் ஏஜெண்டாகிய மெஸர்ஸ் ஆண்ட்ரூ யூல் அண்ட் கம்பெனியார் கொடுத்திருக்கிறார்கள். பொருட்காட்சியில் செலவாகும் எண்ணெயை வாகுவம் ஆயில் கம்பெனி, ஏஷியாடிக் பெட்ரோலியம் கம்பெனி, பர்மா ஆயில் கம்பெனி இவர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஏஷியாடிக் பெட்ரோலியம் கம்பெனி பொருட்காட்சிக்கு உள்ளும் புறமு மிருக்கும் ரஸ்தாக்களில் எண்ணெயை விட்டுப் பரப்பி யிருக்கிறார்கள். பொருட்காட்சிக்கும் காம்புகளுக்கும் பீயர்ஸன்ஸ் ஆண்டிசெப்டிக் கம்பெனி சபானிபைட் க்ரிசால் டிஸ்இன்பெக்டென்டைக் (Saponified Cresol Disinfectant) கொடுத்திருக்கிறார்கள். பொருட்காட்சியில் கலந்து உழைத்ததற்காக பரோடா, க்வாலியர், ஜம்மு அண்ட் காஷ்மீர், ஜெயபூர், ஜோட்பூர், பிகானீர், கோடா, அல்வார், மாலர் கோடா, ஆகிய டர்பார்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களுடைய பிரிவுகளெல்லாம்

இனிப்பைக் கொடுக்கத் தக்கன. க்வாலியரி லிருந்து வந்த சாமான்கள் அந்தத் தேசத்துத்தொழிலபிவிர்த்தியைக் காட்டுகின்றன.

ஜம்மு அண்ட் காஷ்மீர், ஜோட்பூர் கிஷன்கர், ரட்லம், இவைகளின் மகாராஜாக்களும் ஹிஸ் ஹைனஸ் ஜெளரா நவாப்பும் வந்திருப்பதைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். கமிட்டியின் வேலைக்கும் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்த ரல்லாதவர்களும் ஆங்கிலேயரும் இந்தியரும் செய்த பேருபகாரத்துக்கும் சரியான பிரதி செய்வது, இங்கே சாத்தியமல்ல. நாம் நம்முடைய வேலையை ஆரம்பித்த போது அதன் பலனானது பெரிதாய் விளையுமென்று நம்பி யிருந்தோம். இப்போது பொருட்காட்சி திறக்கும்போ திருக்கிறதைப் பார்த்தால் அதில் நாமெவரும் நினைத்ததற்கு மேலாகப் பெரிதா யிருக்கின்றது.

பொருளாதார நிலைமை.

இன்று தினம் பொருட்காட்சி திறப்பதற்குத் தயாரா யிருந்ததைப்பற்றி எல்லாருடைய சந்தோஷத்துக்கும் கமிட்டியார் பாத்தியஸ்தரானார்கள். சில பொருள்கள் இன்னும் இங்கே வந்து சேரவில்லை. ஆனால் நம்முடைய பொருட்காட்சி இன்றைக்கு எவ்வளவு தூரம் தயாரா யிருக்கின்றதோ அவ்வளவு தூரம் வேறெந்தப் பொருட்காட்சியும் திறக்குந் தினத்தில் தயாரா யிருந்ததாக எனக்குத் தெரியாது. இதற்கு உங்கள் கமிட்டியின் பார்வையிலிருந்த ஸர் G. R. பர்

ரே செக்ரிடரி ஜவாப்தாரி. 1907-ம் வருஷத்து வறட்சி காரணமாகச் செய்யப்பட்ட பஞ்ச நிவர்த்தி வேலைகள் முடிவுக்கு வந்து இரண்டு வருஷந்தான் ஆகிறது. அந்த வருஷத்தில் எழுபது லக்ஷம் டன் நிறையுள்ள ஆகாரப் பொருள்கள் அதாவது, 480 லக்ஷம் ஜனங்களுக்கு ஒன்பது மாசத்துக்குப் போதுமான ஆகாரப் பொருள்கள், விளையவில்லை யென்று கணக்கிடப்படுகின்றன. இந்த ஆகாரப் பொருள்களின் மதிப்பு 280 லக்ஷம் பவுன் உள்ள தென்றும், விலைக்கு விற்கக்கூடிய பொருள்களாகிய பருத்தி, சர்க்கரை, எள்ளு, எண்ணெய்விரைகள், இவைகளின் நஷ்டம் நூறு லக்ஷமாகவும் கணக்கிடப்படுகிறது. இவ்வளவு சொற்பக் காலத்துக்கு முன்னால் 380 லக்ஷம் பவுன், ஜனங்கள் உளைத்துப் போகும்படியாக, நஷ்டம் வந்ததென்று யாராவது மாகாணத்தைச் சுற்றிப்பார்த்து நினைக்கிறவர்கள் இருக்கிறார்களா? இவ்வளவு பெரிய நஷ்டம் நேரிட்டதன் அடையாளங்கள் இப்போது இல்லவே யில்லை. இவ்வளவு அதிசயமாய் நஷ்டத்தைத் தாங்கக்கூடிய தேசமானது அதிசயமாக முன்னுக்கு வரக்கூடியதாக இருக்கவேண்டும். அதனுடைய முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பது விவசாயமொன்றையே அதுநம்பி யிருப்பது. மேல்நாட்டிலிருந்துவரும் ஒவ்வொரு யாத்திரைக்காரனும் தேசத்தைச்சுற்றிப் பார்க்கையில் ஒரு சிம்னி (புகைப்போக்கி) யையாவது காணேனென்று ஆச்சரியப்படுகிறான். இந்தியா செழிக்க வேண்டுமானால், தற்காலத்து ஐரோப்பாவிலுள்ள வளப்பமான தேசங்களைப்போல், எங்குபார்த்தாலும் தொழிற்

சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளினால் நிரம்பியிருக்க வேண்டும். ஆனால் உண்மையில் நாம் சும்மாயிருக்கவில்லை. ஈஸ்ட் இந்தியன் ரயில்வேக் கம்பெனி 50 வருஷத்துக்கு முன்னால் இங்கிலாந்திற் செய்த எஞ்ஜினைத் தற்காலம் இந்தியாவில் அதே மாதிரி செய்த எஞ்ஜினோடு ஒத்துப்பார்க்கையில் நம்மில் நேரிட்ட மாறுதல்கள் விளங்கும். ஒரு மனுஷன் இந்தியாவைவிட்டு ஐந்து வருஷம் போய்த் திரும்பி வருவானானால் அவன் இங்கு நேரிட்ட மாறுதல்களைப்பற்றி ரிப்வான் விங்கிளைப் போல் உணருவான். ஆனால், இந்தத் தொழிலபிவிர்த்தி விஷயங்களில் நாம் எவ்வளவு வேகமாய் மாறவேண்டுமோ அவ்வளவு வேகமாய் மாறவில்லையென்று சொல்ல வேண்டும். நம்மைச்சுற்றி எங்கு பார்த்தாலும் வேலை வேண்டுமென்று கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். கவர்ன்மெண்ட் ஸர்விஸும் கற்ற தொழில்களும் பொதுக் கல்வி கற்றவர்களுக்கு நிரம்பிக்கிடக்கின்றன. நாம் தொழில் கல்வியையும் டெக்னிகல் கல்வியையும் பார்த்துச் செல்லுகிறோம். இதனாலே வரும் நன்மை அதிகமில்லை. நாம் இது வரையில் பொதுவாய் புஸ்தகப் படிப்பை அதிகமாக்கிப் படித்தவர்களுக்கு உத்தியோகம் கொடுக்க முடியாமலிருப்பதுபோல் தொழில் படிப்புப் பெற்றவர்களுக்கும் உத்தியோகம் கொடுக்க முடியாமலிருப்போம். இப்படித் தொழிற் படிப்புப் பெற்றவர்களை மானேஜர்களாகவும் ஓவர்ஸியர்களாகவும் போர்மன்களாயும் நியமிக்கத் தொழிற்சாலைகள் ஏற்பட்டாலன்றி அவர்களை அப்படி நியமிக்க நினைப்பது பிரயோஜன மற்றதாகும். தேசத்தை

விருத்தி பண்ணுவதற்காக அதிகப் பணம் வேண்டுமென்று கவர்னர் ஜெனராலுடைய சட்டசபையில் ஐந்து வருஷத்துக்கு முன்னால் நான் கேட்டேன். அதற்குப் பிறகு கொஞ்சம் நாம் நகர்ந்திருந்தாலும், இந்த மாகாணத்தில் நாம் முன் சென்றது போதுமானதல்ல. இந்தியாவில் மூலதனமானது வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது பிரயோசன மில்லாமல் மறைந்து கிடக்கிறவரையில் ராஜாங்கமும் ஜனங்களும் நஷ்டப்படுவார்கள். நம்முடைய பொருட்காட்சியின் பெரிய உத்தேசம் என்னவென்றால், ஜனங்கள் சுற்றிப்பார்த்துத் தங்கள் பணத்தை லாபத்தின் பொருட்டு எப்படிப் போடலாமென்று தெரிந்துகொள்வது; அவர்களுக்கு லாபம் வருமானால் தேசத்துக்கும் நன்மை யுண்டாகும்.

நம்முடைய பொருட்காட்சி சொல்லிக் கொடுப்பதை நன்றாய் நாம் கற்போமானால், அது நம்முடைய மாகாணத்திற்கு நல்ல லாபத்தைக் கொடுப்பதாய் முடியுமென்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அப்படிச் செய்யுமென்றே மனப்பூர்வமாய் நம்பி இது திறக்கப்பட்டுப் போனதாக நான் விளம்பரப்படுத்துகிறேன்.

காங்கிரஸ் மகாசபை.

ஸர். வில்லியம் வெட்டர்பர்னின் அக்கிராசனப் பிரசங்கம்.

26-12-1910

சீமாட்டிகளே! சீமான்களே!— உங்களுடைய இந்த ஜாதீயச் சபைக்குப் பிரசிடெண்டாக இரண்டாந் தடவை நீங்கள் என்னைத் தெரிந்து நியமித்ததால், என்னிடத்தில் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்குக் குறிப்பான அடையாளத்தைக் காட்டி யிருக்கிறீர்கள். கௌரவம் உயர்ந்ததானாலும் பொறுப்பும் உயர்ந்ததா யிருப்பதால் எனக்கு நீங்கள் பூராவும் இடங்கொடுக்க வேண்டும். என்னுடைய குறைகள் எவையானாலும் ஒரு விஷயத்தில் மட்டும் குறை இராது. அதாவது, உங்களிடத்திலும் நீங்கள் மேற் பூண்டிருக்கும் கருமத்திலும் என்னுடைய நல்லெண்ணத்தில் குறை காண மாட்டீர்கள். உங்களுடைய விருப்பங்களில் நான் மனப்பூர்த்தியான அனுதாப முள்ளவன்; இந்தியாவின் பிற்கால கதியில் தீர்க்க பக்தி என் மனதில் குடிகொண்டிருக்கின்றது. இந்தியா சுகமாய் வாழவேண்டிய தேசம். அதற்குப் பிரகாசமான காலம் தூரமல்லவென்று நம்பி யிருக்கிறேன். எந்த ஜனமானாலும் அதன் விதி அதனுடைய செயலின் பலனென்று ஒரு

மூது மொழியுண்டு. இந்தியாவின் பிற்காலத்தில் என்னுடைய நம்பிக்கையானது அதன் ஜனங்களுடைய யோக்கியதைகளை,— அவர்கள் சட்டத்துக் கடங்கியிருக்கும் குணம், உழைப்பு, சாந்தம், சாதுத் தன்மை, கிராம சமுதாயத்தை அவர்கள் நிர்வகிப்பது போல் சொந்தக்காரியங்களை நிர்வகிக்கும் சக்தி, இவைகளை,—ஆதாரமாகக் கொண்டது. இதுவன்றி படித்த வகுப்பாருடைய புத்தி, விவேகம், பொதுப்பான்மை, இவைகளிலும் நம்பிக்கை வைத்திருக்கிறேன். கடைசியாக, காங்கிரஸ் மகாசபையிலும் எனக்கு நம்பிக்கையுண்டு. ஏகாதிபத்தியத்துக்குள் இந்திய ஜனங்கள் சுவாராஜ்யம் பெறுமாறு அமைதியுடன் முன் செல்லுவதில் அவர்களை நடத்துவது இந்தக் காங்கிரஸின் தெய்வீகமான கடமை.

சில தினங்கள் முன்னதாக, இங்கிலாந்தில் சில நேசர்கள் கூடி, அவர்களுடைய வாழ்த்துச் செய்தியை உங்களிடம் கொண்டுவர என்னை விடுத்தபோது, என்னுடைய அருமையான பழைய நேசர் ஸர் வில்ப்ரிட் லாஸனு(Sir Wilfrid Lawson)டையசில வார்த்தைகளை எடுத்துச் சொன்னேன். அவர் தம் ஆயுளெல்லாம் தர்மம் நிலைநிற்குமாறு எதேனும் ஒரு போராட்டத்தில் புகுந்திருந்தவர். அவர் வார்த்தைகள் என்னவெனில், “எல்லாக் காரியங்களும் கைகூடுமென்றே கோரவேண்டும்: எதுவும் கைகூடுமென்று நிச்சயமாய் மட்டும் இருக்கக்கூடாது;” என்பார். இந்தச் சுபாவமே அதைரியத்தைப் போக்கி மாற்றமும் கிட்டாமற் செய்யும். சென்ற 20 வருஷ காலமாய் இந்தியாவின்

நண்பர்கள் எவ்விதக் கோரிக்கையும் கொள்ளுதல் கஷ்டமா யிருந்தது. மனிதன் சகிக்க முடியாத கஷ்டங்களை இந்தியா அனுபவித்து விட்டது. யுத்தம், பிணி, பஞ்சம், பூகம்பம், புசல் இவைகளெல்லாம் அதைக் கஷ்டப்படுத்தி விட்டன. ஹிம்ஸை சகிக்காமல் ஜனங்கள் வெறுப்படைந்து போனார்கள். ஆனால் இப்போது, சிறிது வெளிச்சம் தோன்றுகிறது. கோரிக்கையும் வந்திருக்கிறபடியால், நாம் பலத்தைத் திட்ட ஒழுங்கும் கட்டுப்பாடுங் கொண்டு, முன் நெருக்கிச் செல்லக் காலம் வந்திருக்கிறது. கஷ்டமான வேலை செய்யவேண்டியது அதிக மிருக்கின்றது ; ஆனால் பலனும் அதிக மாகவே இருக்கும். (ஆங்கில) கவி சொன்னதுபோல, “வெளிச்சத்தைப் பார்த்த முகமாய்ச் சென்று அறிவாளைப் போட்டு அறுப்போம்.”

நமது காவற் சொற்கள்.

“நம்பிக்கை, சமரஸம், ஒருமைப்பட்ட முயற்சி,” இம்மூன்றும் நமது காவற் சொற்களாயிருக்கவேண்டும்.

நம்பிக்கை.

அமைதி யாக்குவோராய் விளங்கின எட்வர்ட் ராஜ சக்கரவர்த்தியின் மரணம் நமக்கு எப்போதும் துக்கமா யிருக்கும். ஜூபிலி சமயத்தில் அவர் இந்திய மன்னருக்கும் ஜனங்களுக்கும் அன்புடன் விடுத்த செய்தியில் நம்பிக்கைக்கு இடமிருந்தது. விக்டோரியா மகாராணியின் 1858-ம் வருஷத்து விளம்பரத்தில் கண்ட விதிகளை உறுதிப்படுத்தியும் விரித்தும், மகா ராஜா அன்புடன் செய்த அந்தப் பிரசித்தப் பத்திரிகையில், ஜனங்களுடைய

விருப்பங்களுக்கு இணங்கி, உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமனங்கள் செய்வதில் ஜாதி வித்தியாசத்தை வரவர ஒழித்து விடுவதாகவும், பிரதிநிதி ஸ்தாபனங்களை அதிகப்படுத்துவதாகவும், பொதுவாய் இந்தியருடைய விருப்பங்களில் அன்பும் அநுதாபமும் வைத்திருப்பதாகவும், வாக்களித்தார். இப்படி யளித்த வாக்கின் பலனாக லார்டு மார்லி தமது சபையிலும் ராஜப்பிரதிநிதியின் நிர்வாகச் சபையாகிய மந்திராலோசனைச் சபையிலும், மாகாணக் கவர்ன்மெண்டுகளின் நிர்வாகச் சபைகளிலும், இந்தியரை நியமித்ததன்றி, சட்டசபைகளைப் பிரதிநிதித்துவ அஸ்திவாரத்தின் மேரில் விசாலப்படுத்தித் திருத்தி, பார்லிமெண்டில் ஒரு சட்டம் செய்வித்தார். தேசத்தை விட்டுச் சென்ற பழைய வைஸிராயும் புதிதாய் வந்த வைஸிராயும் அநுதாபங்காட்டிப் பேசினதைப் பார்த்தால், சமீப காலத்தைப்பற்றி நம்பிக்கை கொள்ள நியாயமிருக்கின்றது. லார்டு மிண்டோ சங்கடமான காலங்களில் தமது கடமையை நெறி தவறாமல் தைரியமாய்ச் செலுத்தினாரென்று இந்தியா அவரைக் கனப்படுத்துகின்றது. இந்தியாவில் அமைதியின்மையும் ராஜீய பிரக்ஞையும் தோன்றியிருப்பது, நமது நிர்வாகத்தில் பிரதிநிதி விதிகளை இன்னும் விசாலப்படுத்தக் காலம் வந்து விட்டதற்கு அடையாளமென அவர் அபிப்பிராயப்பட்டார். ஜனங்கள் தங்களுடைய சொந்த விஷயங்களை நிர்வகிப்பதில் முன்னைவிட அதிகமாய் அவர்களைச் சேர்ப்பதற்காக லார்டு மிண்டோவும் லார்டு மார்லியும் ஆரம்பித்த சிலாக்கியமான திருத்தங்களை உறுதிப்படுத்

தத் தம்மால் இயன்றதைச் செய்வதாகவும், பற்பல ஜாதிகள் வகுப்புகள் மதங்கள் இவைகளைக் கூடிய வரையில் சமரஸப் படுத்துவதாகவும் லார்டு ஹார்டிஞ்ஜ் சொல்லி யிருக்கிறார்.

"சமரஸம்"

இதனால் இனி முதலடி யெடுப்பாகச் சமரஸம் உண்டு பண்ணுவது முக்கிய கடமையாக ஏற்படுகிறது. இந்தியத் தலைவர்கள் கவர்ன்மெண்டுக்கு வெளியே நின்று, அதன் செய்கைகளைக் குற்றங்குறை கண்டு கூறக்கூடியவர்களாய் மாத்திரம் இருந்தவரையில், கவர்ன்மெண்டின் நிர்வாக முறையை மாற்றுவதிலே யே தங்கள் முக்கியமான முயற்சிகளைச் செலுத்த வேண்டியவர்களா யிருந்தார்கள். அப்படிச் செய்வதில் கவர்ன்மெண்டுப் பக்கத்திலும் ஜனங்கள் பக்கத்திலும் மனவருத்தம் கொடுக்கக்கூடிய வார்த்தைகள் அடிக்கடி சொல்லும்படி நேரிட்டன. அதனால் நேசப்பான்மையான ஒத்துழைப்பு அசாத்தியமாகா விட்டாலும் கஷ்டமாய் முடிந்தது. இப்போது ஜனப்பிரதிநிதிகள் சட்டசபைகளில் ஸ்தானங்கள் பெற்று, என்ன குறைகளுண்டோ அவைகளையும் என்ன திருத்தங்கள் வேண்டுமோ அவைகளையும் கவர்ன்மெண்டுக்கு நேருக்கு நேராய்ச் சொல்லக்கூடியதா யிருப்பால், நமது பேச்சில் மேலிடும் தொனியானது சமரஸத்தையும் ஒத்துழைப்பையும் தேடுவதாயிருக்கவேண்டும். இந்தியஜனங்களின் நன்மைக்காகப் பல முக்கியமான பெருங்காரியங்கள் செய்யவேண்டி யிருக்கின்றன. அவைகளைச் செய்யப் பலர் சேர்ந்து, ஒருவர் கஷ்ட நிஷ்டூரங்களை மற்ற

வர் அறிந்தவராய், ஒத்துச் செல்லுதல் அவசியம். தேசத்தின் பொருளாதாரங்களைப் பெருக்குவதும் தொழில் நிலைமையை விருத்தி செய்வதும், மூலாதாரக் கல்வி, தொழிற் கல்வி, உயர்தரப் பொதுக் கல்வி, இவைகளை விசாலிப்பதும், இந்தக் காரியங்களாகும். உயர்தரப் பொதுக் கல்வி இந்தியாவுக்கு இங்கிலாந் தளித்த பெரும்பேறு. இந்தியருடைய பழையகாலத்து மனோ சக்திகளை இந்தக் கல்வி, ஜால வித்தையால் கிளப்பினது போல, கிளப்பி யிருக்கின்றது. காங்கிரஸ் மேற்கொண்ட காரியங்களில் இன்னும் முக்கிய மான பல தாமசமின்றிக் கவனிக்கப்பட்டு முடிவு செய் யப்படவேண்டி யிருக்கின்றன. இதெல்லாம் இடை விடாமல் சரியான வழிகளிற் சென்று தன் மறுப்புடன் செய்யும் முயற்சியினாலேயே சாத்தியம். ஒவ்வொரு பக்கத்தி லிருந்தும் ஒத்துழைப்புக் கிடைக்கவேண்டும். இந்தப் பெரு முயற்சி செய்வதில் எவ்வகுப்பாரும் எம் மதத்தினரும் எந்த மனிதரும் தமக்குத் தனியாயுள்ள பழைய குறைகளை மறைப்ப தவசியம். விவாதத்துக் குரிய விஷயங்களை யொழித்து, எல்லோரும் தே சத்தின் க்ஷேமத்துக்காகவே உழைக்கிறவர்களென் றும் நல்லெண்ணங் கொண்டவர்களென்றும் நம்பி, துவேஷம் பாராட்டாமல் உழைக்கக் கடவோம். இந்தப் பொது விதிகளை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களென்று நம்புகிறேன். அப்படியானால், சில பொறுப்பான விஷயங்களில் நாம் விரும்புகிறபடி மனப்பூர்வமான ஒத்துழைப்புக் கிடைப்பது கஷ்டமாகத் தோன்றுகிற படியால், அவைகளை நீங்கள் சிறிது கவனிக்கும்படி

வேண்டுகிறேன். இவ்வளவு பெரிய தேசத்தில் பல வகைப்பட்ட அபிப்பிராயங்களும் பலவகைப்பட்ட செய்கைகளும் இருக்கவே இருக்கும். அவைகளால் விரோதம் உண்டாகவும் கூடும். முக்கியமான வகுப்பு களிலும் தொகுதிகளிலும் மூன்று பிரதானமான வழி களில் இதுவரையில் சங்கடங்கள் நேரிட்டிருக்கின்றன. (1) ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுக்கும் படித்த இந்தியர்களுக்கும், (2) ஹிந்துக்களுக்கும் மகமதியர் களுக்கும், (3) நிதானத் திருத்தக்காரர்களுக்கும் அமிதவாதிகளுக்கும், வித்தியாசங்கள் நேரிட்டிருக் கின்றன. இப்படி வித்தியாசங்களை யுண்டுபண்ணும் மனப்போக்குகள் நாம் அசட்டை செய்யத் தக்கன வல்ல. ஆனால், நான் சொல்லுவதென்ன வென்றால், இப்படி உரிமைகள் வித்தியாசப்படுவது தோற்றத்தில் மாத்திரந்தான்; மேற் புறத்தின் அடியில் பார்ப்போ மானால், இந்த வகுப்புகளுக்கும் தொகுதிகளுக்கும் விஷயம் ஒன்றென்றே அறிவோம்; இந்தியா வின் க்ஷேமத்திலும் சுகத்திலும் எல்லோரும் ஒரே மாதிரி அக்கரைப்பட்டவர்கள்; எல்லோரும் ஒரு மனப்பட்டு உழைத்துப் பொதுப் பொக்கிஷத்தில் அவ ரவர் கொடுக்கக்கூடிய பொருளை—அதிகாரமானாலும், அறிவானாலும், தன்னல மறியாத அர்ப்பணமானா லும் அதை,—போடுவது தான் விவேகமாகும். இது வே நான் சொல்லுவது.

"சமாஜம்" :—உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்த ரல்லாதவர்களும்.

மேலே குறித்த மூன்று வகைகளில் ஒவ்வொன்றைப்பற்றியுள்ள உண்மைகளைச் சுருக்கமாய்க் கவனிப்போம். முதலாவது, ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயத்தையும் சுவாதீனம் பெற்ற இந்தியரின் அபிப்பிராயத்தையும் பற்றின உண்மைகளென்ன? தற்காலமுள்ள சங்கடம் எப்படி வளர்ந்ததென்று அறிய காங்கிரஸ் மகாசபையினுடைய பத்திரங்களைச் சோதிப்பதை விடச் செய்யவேண்டியது வேறில்லை. இந்தக் காங்கிரஸ் மகாசபை சென்ற 25 வருஷங்களாக ஜனங்களது உணர்ச்சியைக் கண்ணாடியிற் காட்டுவதுபோற் காட்டி, மதிப்புப் பெற்ற பல தலைவர்களின் வாக்குகளைப் பதிவு செய்திருக்கின்றது ; இந்தத் தலைவர்களிற் சிலர் நமக்கு துக்கத்தைக் கொடுத்து விட்டுக் காலஞ்சென்று விட்டார்கள் ; மிஸ்டர் W. C. பானர்ஜி, மிஸ்டர் ஜஸ்டிஸ் திபாப்ஜி, மிஸ்டர் ரோமேஷ் சந்திரதத், மிஸ்டர் அனந்தா சார்லு, இவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள் ; வேறு சிலர் இந்தியாவின் பெருங்கிழவனை மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி போன்றவர்கள் உயிருடனிருந்து நம்மை உற்சாகப்படுத்தியும் நெறியே செலுத்தியும் வருகிறார்கள். பிரிட்டிஷ் ராஜ நெறியைப்பற்றியும் நிர்வாகிகளைப் பற்றியும் 25 வருஷத்துக்கு முன்னால் காங்கிரஸ் தலைவர்களின் உணர்ச்சி எப்படியிருந்தது ? சுவாதீனமான இந்திய அபிப்பிராயத்தை உண்மையாயும் விட்டுக்

கொடுக்காமலும் எடுத்துக் காட்டுகிறவர் தாதாபாய் நௌரோஜியைவிட வேறில்லை. இல்லையானாலும் பிரிட்டிஷ் ராஜ நெறியைப்பற்றியும் பிரிட்டிஷ் உபாயங்களைப் பற்றியும் நேச விரோதமான உணர்ச்சி இல்லையென்று அவர் சொன்னதை விடப் பலமாய் நம்மால் சொல்லக் கூடியதில்லை. 1886-ம் வருஷத்தில் இரண்டாவது காங்கிரஸில் பிரஸிடெண்டாக அவர் சொன்னது என்னவெனில்:—"இங்கிலாந்து ஜனங்களும் மகாராணியும் நடத்தும் நாகரிகப் படுத்தும்படியான ஆட்சியின் கீழல்லவோ நாம் இங்கே ஒன்று கூடுகிறோம்; நம்மைத் தடுப்பவரில்லை; சிறிதேனும் பயமில்லாமலும் தயங்காமலும் நம்மனதிலுள்ளதைச் சொல்லத் தாராளமாய் இடம் பெற்றிருக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இது சாத்தியம்; அந்த ஆட்சியின் கீழே தான் இது சாத்தியம்." பிரிட்டிஷாட்சியால் நமக்குக் கிடைத்துள்ள கணக்கற்ற நன்மைகளைச் சொல்லிவிட்டு, மிஸ்டர் நௌரோஜி பின் வருமாறு முடித்தார்:—"பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து உண்டான நன்மைகள் அனைத்தையும் சொல்லப் புகுந்தால், அது இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சரித்திரமேயாகுமாகையால், நீண்ட நேரம் அவைகளைப் பற்றிச் சொல்லலாம். அவ்வளவு நன்மைகளை நாம் ஒப்புக் கொள்ளவேண்டியிருக்கும்போதும், அவைகளை இந்தச் சபையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் நன்றாயறிந்திருக்கும் போதும், அந்த ஆட்சிக்கு விரோதமான நோக்கங் கொண்டதாய் இந்தச் சபை கூடுதல் சாத்தியமா?" பிரிட்டிஷ் ராஜ முறையைப்பற்றியும்

நிர்வாகிகளைப்பற்றியும் படித்த வகுப்பாருக்கு இம்மாதிரி உணர்ச்சி யிருந்தது வெகு காலத்துக்கு முன்னல்ல. ராஜ முறை மாறினபடியால் இந்த உணர்ச்சியிலும் மாறுதல் உண்டாயிற்று. இந்த மாறுதலுக்குக் காரணமான பற்பல திட்டங்கள் இன்னவை யென்று பொதுவாய்த் தெரியும். மறைந்து போனவைகளைப் புதுப்பித்தல் என்நோக்கமல்லவாகையால், அந்தத்திட்டங்களைப்பற்றி நான் இங்கே பேசமாட்டேன். லார்டு மார்லியும் லார்டு மிண்டோவும் சேர்ந்து செய்த திருத்தங்கள் இந்த மனக் கசப்பை நல்லவேளையாய் ஒருவாறு குறைத்திருக்கின்றன. கவர்ன்மெண்டார் சமரஸ முறையை அனுஷ்டித்ததால் நல்ல பலன் உண்டாயிருக்கின்றது. ஆயினும், முழுப் பலனும் விளையும்படி இந்தச் சமாஸ் முறை முற்றிலும் அனுஷ்டிக்கப்படாம லிருக்கிறது. பழைய உணர்ச்சியைத் திரும்பி ஸ்தாபிக்கும் நோக்கமாய், உத்தியோக வகுப்பாருக்கு இரண்டு வேண்டுகோள்கள் செய்துகொள்ளுகிறேன். முதலாவது, இந்தத் திருத்தங்கள் குறிக்கும் ராஜ முறையைத் தாராளமாயும், பெருந்தன்மையாயுங் கூட, அனுஷ்டித்து, ஸ்தல சுய நிர்வாக முறையை டிஸ்டிரிக்ட், தாலூகா, கிராமம், இவைகளில் ஸ்தாபித்து, மேற்கண்ட ராஜ முறையைப் பூர்த்திப் படுத்தவேண்டும். இரண்டாவது, அடக்குந் திட்டங்களைத் தாமசமில்லாமல் ரத்து செய்து, அல்லது இவைகளால் நிர்வாக உத்தியோகஸ்தர்களுக்குக் கிடைத்திருக்கும் சாதாரணமில்லாத புது அதிகாரத்தைக் கூடியவரையில் செலுத்தாம லிருந்தாவது, தேசம் பழைய நிலை

மைக்கு வருவதை எளிதாக்கவேண்டும். சட்டமும ஒழுங்கும் குறிக்கும் நெறியை விட்டுப் புரண்டவர் கள் அப்படிப் புரண்டது தப்பென்று அறிந்து, அந்த நெறியில் எப்போதும் போல் செல்ல விரும்புவோர் அப்படிச் செல்லுவதையும் எளிதாக்கவேண்டும். இனி புதிதாய்க் குற்றம் செய்பவர்களிருந்தால் அவர்களைத் தண்டிக்கத் தான் வேண்டும். ஆனால், மிதப்பான்மை கொண்ட ஜனங்கள் சமாதானம் நிலைக்குமாறு உழைக்க இடம் பெறவேண்டுமானால், கண்டபடி வீடுகளில் நுழைந்து சோதனை செய்வதும், பிராஸி கூட் செய்வதும், பழைமைப்பட்டுப்போன காலத் தில் செய்த குற்றத்திற்காக நடவடிக்கை நடத்து வதுமாய், ஜனங்கள் மனது பீதியடைந்திருக்கக் கூடாது. இரண்டு பேர் சேர்ந்தால் கலகம் என்று ஒரு வசனமுண்டு. ராஜாங்க நிர்வாகத்தை நடத் தும் உத்தியோகஸ்தர்கள் மனதில் சந்தேகத்தை யுண்டுபண்ணி, உருவில்லாத வீண் பயத்தைக் கிளப்பும்படியான வார்த்தைகளை உபயோகப்படுத்தா மல் அவர்கள் ஜனங்களிடத்தில் நம்பிக்கை கொள்ளு வதை எளிதாக்கி, ஜனங்களின் நன்மையைக் காக்கும் படிப் பத்திரிகைக்காரர்களை வேண்டுகிறேன். இப்படிச் செய்தால் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் இருவகையாரும் உதவி செய்வார்கள்.

நான் ஒரு பழைய ஸிவிலியன். என் குடும்பத் தார் வெகு காலமாய் இந்தியாவுடன் சம்பந்தப்பட்ட வர்கள். ஆகையால், இந்திய ஸிவில் ஸர்விஸின் யோக்கி யதைகளை அறிவேன். அவர்களை விடக் கஷ்டப்பட்டு

வேலைசெய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாயுள்ள உத்தி யோகக் கூட்டத்தார் எவருமில்லை. ஆனால், நிர்வாக முறையை மாற்றக் காலம் வந்திருக்கிறது. ஜனங்க ளுக்குக் காவலராயிருந்தவர்கள், சற்றுக் கண்டிப்புள்ள வர்களா யிருந்தாலும், உண்மையும் நல்லெண்ணமு முள்ளவர்களாயு மிருந்தார்கள். இருந்தாலும், அவர் களுடைய சம்ரக்ஷணையி லிருந்த ஜனங்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளும்படி யான வயதுக்கு வந்து விட்டார்கள். இப்படிப் பார்த் துக்கொள்ள மனதார அவர்களுக்கு இடங்கொடுப்பது விவேக மாகாதா? சென்ற சில வருஷங்களாக ஜனங்களை யடக்கி வைக்கச் செய்த திட்டங்கள் அரை குறை இல்லாமலே வழக்கம் போல் செலுத்தப்பட்டு வந்தன; கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன; சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த எவ்வளவு சாதகம் கிடைக்கக்கூடுமோ அவ்வளவும் கிடைத்து விட்டது. ஆனால், இத்தகைய கடமைகளைச் செலுத்து வது பிரிட்டிஷாரின் சுபாவத்துக்கு ஒத்ததா யிராமல் வேதனையையே உண்டுபண்ணி யிருக்கவேண்டும். ஆகையால், இவை சம்பந்தமான நடவடிக்கைகள் நடத் துவதை நிறுத்துவது எல்லோருக்கும் சந்தோஷமா யிருக்கும். சமாதான உபாயத்தைச் செய்து பார்ப்ப தற்குக் காலமிது. அப்படிச் செய்து பார்த்தால் ராஜாங்கத்தாரிடம் நல்லெண்ணமுள்ள பெரும்பான் மையான பிரஜைகளுக்கு அது தைரியத்தைக் கொடுக் கும். இவர்களுடைய கோரிக்கைகள் ஒழுங்கீனத்தால் சிதறுண்டிருக்கின்றன; சஞ்சலப்படும் தேசத்துக்கு

அமைதியைக் கொண்டு வரவேண்டுமென்பது இவர்களுடைய அரும்விருப்பம். இப்படிச் செய்யும் முறையே விவேகத்திலும் பொருத்தத்திலும் உத்தமமாம். படித்த இந்தியர்கள் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களுடன் ஒத்துழைக்கச் சம்மதமும் கவலையும் உள்ளவர்களா யிருப்பதால், அந்த ஒத்துழைப்பை சிவிலியன் உத்தியோகஸ்தர்கள் ஏற்பார்களானால், அவர்களுடைய நிலைமை இப்போதைவிடச் சுகமாயிருப்பது மன்றி அவர்களுடைய பளுவும் குறையும். நான் அனுபோகத்தைக் கொண்டு பேசுவதால் இது எனக்கு நிச்சயம். ஸர் பார்டில் ப்ரெயர் (சுமார் 50 வருஷத்துக்கு முன்னால் பம்பாய்க் கவர்னரா யிருந்தவர்) இதே கருத்துக்கொண்டு பின் வருமாறு சொன்னார்:—“நான் எங்குபோனாலும், அங்கு படித்த இந்தியரே பிரிட்டிஷ் ஆட்சியின் முறையை விளக்கிக் காட்டக்கூடியவர்களாயும், அந்த முறையை இந்திய வாசிகளுடைய குண விசேஷங்களுக்கு ஒக்கும்படிச் செய்வதில் கூடியுழைக்கும் திறமை சாலிகளாயும், இருக்கக் காணுகிறேன்.” ஒரு சிவிலியனுக்கு அவன் இளம்பிராயத்தில் அவனைச் சுற்றியுள்ள நிலைமைகளுக்கு ஒத்தபடி உழைப்பதினால் திருப்தியும் மன அமைதியும் உண்டாகின்றன. தவிர, அவனுக்குப் பிரியமாய் அவன் தெரிந்தெடுத்த உத்தியோக நெறியில் உயர்ந்த லக்ஷியத்தை ஆவலாய் வேண்டுகிறான். எல்பின்ஸ்டன், மால்கம், மெகாலே, மன்ரோ, இவர்களைப்போல் தனக்கு முன்னால் உத்தியோகம் வகித்த பெரியோர்களையும் அவர்களுடைய கருத்துக்களையும் கண்டு அனுதாபங்கொள்ளாமல்

இருக்கமாட்டான். இந்தப் பெரியோர்கள் இந்தியா மீட்சி பெறும் தினத்தைச் சிந்தித்துச் சந்தோஷமடைந்தார்கள். எந்த அலுவலானாலும் அதற்கு ஒரு லக்ஷியமில்லாவிட்டால் அது கேவலம் ஜீவனத்துக்கு உழைக்கும் அற்ப உழைப்பேயாகும். உத்தியோகமாகிய கலப்பையில் கை வைத்தவன் எவனும், இப்போது தோன்றி யிருக்கும் ஒற்றுமையின்மை சில காலந்தான் இருக்கக்கூடியதென்று நினைத்து, ஜனத்தொகுதியை அறியாமை, பஞ்சம், பிணி, இவைகளினின்று மீட்டு, இந்தியா பழைய காலத்துப் பெருமையைத் திரும்பி அடையும்படியான காலத்தை எதிர்பார்ப்பவனா யிருக்கவேண்டும்.

ஹிந்துக்களுக்கும் மகமதியருக்கும் "பரஸ்பர சமரஸபாவம்"

பிறகு, ஹிந்து மகமதியரின் சம்பந்தத்தைப் பற்றிக் கவனிப்போம். இது உங்களுடைய குடும்ப விஷயம் போன்றது. வெளியிலிருப்பவனான நான் இதில் எவ்வளவு தூரம் பிரவேசிக்கலாமோ சந்தேகம். ஆயினும், இந்த இரண்டு பலத்த வகுப்பாரும் கட்சிப் பிரதிகட்சிகளாகப் பலமாய் எதிர்ப்படும்போது, பெருந்தீங்குகள் விளையுமானதால், நான் சில வார்த்தைகள் சொல்லத் துணிகிறேன். நான் இப்போது இந்தக் காங்கிரஸுக்குப் பிரசிடென்டா யிருப்பதாலும் இதில் தலையிடுதற்கு நியாயமிருக்கின்றது. எப்படி யெனில், இந்தக் காங்கிரஸ் 1885-ம் வருஷத்தில் ஆரம்பித்த போது, பிரசிடென்டாயிருந்த W. C. பானர்ஜி

சொன்னபடி, "இந்தியாவில் நேசம் வைத்த எல்லா ஜனங்களும் ஜாதிமத ஸ்தல வேற்றுமைகளை யொழித்து, நேசபாவத்துடன் ஒருவருடன் ஒருவர் பழக வேண்டுமென்பது காங்கிரஸின் நோக்கங்களிலொன்று." இத்தகைய எண்ணங்களைக்கொண்டு நான் இங்கிலாந்தைவிட்டுப் புறப்படுமுன் சமாதானத்தில் கவலை வைத்த சில நண்பர்களைக்கண்டு ஆலோசித்தேன். அதன் பலனுகத் தைரியம் தரத்தக்க ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது. ஹிஸ் ஹைனஸ் ஆகாகான், ஸர் பிரோஜிஷா மேடாவுடனும் ரைட் ஆனரபில் அமீர் ஆலியுடனும் சேர்ந்து யோசித்து, ஒரு கான்பரென்ஸ் கூட வேண்டுமென்று பிரேரித்திருக்கிருர். இந்தக் கான்பரென்ஸில் இரண்டு கட்சித்தலைவர்களும் இரண்டு கட்சிகளுக்குமிருக்கும் வேற்றுமைகளை நேசமாய்த் தீர்க்கும் நோக்கத்துடன் கூடக்கூடும். அவர்களுடைய வேண்டுகோளின் பேரில் இந்தியாவிலுள்ள பற்பல வகுப்பாருக்குக் கடிதம் எழுதி, அதில் இந்த யோசனையை விவகரித்து, அவர்களுடைய சகாயத்தை வேண்டினேன். இந்தச் சம்பந்தத்தில் சென்னை நகரத்தில் நடந்தமூன்ருவது காங்கிரெஸுக்குப் பிரஸிடெண்டாயிருந்தமிஸ்டர்பத்ருதீன் தியாப்ஜி சொன்னதைச் சொல்லலாம்:—"இந்திய சமூகங்களில் ஒவ்வொன்றும் அதனதன் வாழ்வுக்கும் கல்விப் பயிற்சிக்கும் பொருட் பெருக்குக்கும் உரிய கஷ்டங்களைக் கொண்டதாய் அவைகளைத் தீர்க்கக் கடமைப்பட் டிருக்கின்றது. ஆனல், இந்தக் காங்கிரஸில் எல்லா இந்தியாவுக்கும் பொதுவான ராஜீயப் பிரசினைகளை கவனிக்கப்படுவதால், தேச முழுமைக்கும் நன்

மையைக் கோரி, மகமதியர் மற்ற வகுப்பாரைச் சேர்ந்த தங்கள் தேசத்தாருடன் தோளோடு தோள் நின்று ஒத்து உழைக்காததற்கு நியாயம் இன்னதென்று என க்கு விளங்கவில்லை" என்றார். இவர் இப்படிச் சொன் னது பிரஸ்தாப விவகார முழுவதையும் உண்மை யாய் விளக்குகின்றது. இஸ்லாமுக்கு ஒப்புயர் வற்ற ஆப்த நண்பரான மிஸ்டர் வில்பிரிட்ப்ளண்டும் இப்படி யே கருத்துக்கொண்டவர். காங்கிரஸ் நிகழ்ச்சியில் மகமதியர் சேரவேண்டுமென்று தூண்டுகிறார். அப்ப டிச் சேர்ந்தால் தான் தங்கள் தேசத்துக்குக் கிடைக் கப்போகும் சுவாராஜ்யத்தின் நன்மைகளில் முழுப்பங் கும் பெறுவார்கள். கல்கத்தா நகரத்தில் 1896-ம் வரு ஷத்தில் கூடின காங்கிரஸுக்குப் பிரசிடெண்டா யிருந்த மகா அனுபோக சாலியான மிஸ்டர் **R. M.** ஸயானி இதுசம்பந்தமான வரலாறுகளைப் பாகுபடுத்திச் சொன்னார். ஹிந்து மகமதியருக்குள் நேரிட்ட விரோ தத்துக்குக் காரணங்களை ஆதியோடந்தமாய்ச்சொல்லி, அவர்களுக்குள் சமாதானம் உண்டாகும் வழிகளையும் காட்டினார். சமீபத்தில் நடந்த சில சம்பவங்களால் இவ் வகுப்பாருக்குள்ள வேற்றுமைகள் மேற்புறத்துக்கு வந்திருக்கின்றன. இந்த வேற்றுமைகளை நாம் மிகைப்படுத்தாமல் எல்லோரும் பொதுவாய் ஒரே மாதிரியான அக்கறை கொண்டிருக்கும் முக்கியமான உரிமைகளை நோக்கிக் கவனம் செலுத்தவேண்டும். ஆகையால், மிஸ்டர் ஸயானி பிரசிடெண்டாய்ச் செய் துள்ள பிரசங்கத்திற் கண்ட நியாயங்களையும் சங்கதி களையும் நீங்கள் கவனிக்கவேண்டுமென்று விரும்பு

கிறேன். இவைகள் சென்னை மிஸ்டர் G. A. நடேசனாற் பிரசுரிக்கப்பட்ட இந்தியன் நாஷனல் காங்கிரஸ் என்ற பிரசுரத்தில் 319 முதல் 346 வரையிலுள்ள பக்கங் களில் காணலாம்.

இந்த இரண்டு வகுப்பாருடைய உரிமைகளும் ஒன்றென்கிற உணர்ச்சி யுண்டாவதற்கு எவ்வளவு தாமசம் நேரிட்டாலும், கடைசியில் அது உண்டாகு மென்பது எனக்கு நிச்சயம். மத்தியில், வர்த்த மான காலத்தில் கண் வைத்திருக்கும் நாம், இவ்விரு வகுப்பாரும் சேர்ந்து ஒத்து உழைக்கக் கூடியதாய் என்ன தருணங்கள் நேரிடுமோ அவைகளை, உபயோகப் படுத்தல் அவசியம். ஒத்துழைக்காமல் பிரிக்கக்கூடிய விவாதங்களையும் சமயங்களையும் தவிர்க்கவேண்டும். இப்படி ஹிந்து மகதியர் இருவருள் உடனின்று ஒத்துழைப்பதால் விளையக்கூடிய நன்மைக்குத் திருஷ் டாந்தம் தென்னாப்பிரிக்காவி லிருந்து வருகின்றது. அங்கே மற்றெவ்விடங்களையும் விட இந்தியருடைய கட்சிக் கெதிராய் மிகுந்த பலமேறின எதிர்க் கட்சி எதிர்த்து நிற்கின்றது. ஆனால், மிஸ்டர் காந்தியால் சிறப்புடன் நடத்தப்பட்டு, இந்தியர் சலிக்காமல் உறுதி யாய் நின்றபடியால் நீண்ட இரவு முடிந்து,வைகறையின் வெளிச்சக் குறிகள் தோன்றுகின்றன. இந்தியாவில் எல்லாரும் ஜாதிமத வகுப்பு வேற்றுமையின்றி வருந் திக்கொண்டிருக்கும் தங்கள் நேசத்தாருக்குச் செய்த உதவி இந்தியாவிலும் பிரிட்டனிலுமுள்ள கவர்ன் மெண்ட் மனதில் உறுத்தி யிருப்பதில் சந்தேகமில்லை. புதுச் சட்டசபைகளிலுங் கூட, இரண்டு சமூகங்களின்

தலைவர்களும் பொது நன்மைக்கு ஒத்துழைக்கச் சிறந்த சமயங்கள் வாய்க்கும். சாதாரண ஜனங்களுடைய கல்வியைப்பற்றியும், உயர்தரக் கல்வியைப் பற்றியும், தேசத்துப் பொருட் பெருக்கத்தைப் பற்றியும், அவர்கள் முக்கியமான காரியங்கள் செய்யலாம். அப்படி சபைகளில் இருவகுப்பாரும் சேர்ந்துழைப்பதால் நேராக விளையும் நன்மையோடு கூட, பொதுவாய் இரு சமூகங்களிலும் ஒற்றுமைக்குரியஏதுக்கள் கிளர்ச்சி பெறும்.

மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் "சமாதானம்."

கடைசியாக, இந்தியத் திருத்தக்காரருக்குள்ளேயே மிதவாதிகளென்றும் அமிதவாதிகளென்றும் பிரிவுபட்டிருக்கும் வேற்றுமைகளைக் கவனிக்கவேண்டும். மிஸ்டர் ஆலன் ஹியூமும், மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியும், மிஸ்டர் W. C. பானர்ஜியும் 1885-ம் வருஷத்தில் காங்கிரஸை சட்டநெறிகளின்படி நடத்த ஸ்தாபித்தபோது, அதிற் சேர்ந்தவர்களுக்குள் வித்தியாசமில்லாமலே இருந்தது; அது முதல் 20 வருஷம் வரையில் இந்தியத் திருத்தக்காரர்கள் அனைவரும் வித்தியாசமின்றி ஒற்றுமையாகவே உழைத்தார்கள்; வருஷா வருஷம் பொறுமையாயும் மரியாதையாயும் தேசத்துக்கு வேண்டியவைகளை நியாய பூர்வமாய் கவர்ன்மெண்ட் முன்பாகச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஆனால், 1907-ம் வருஷத்தில் சூரத்தில் பிளவு உண்டாயிற்று. சிலர் காங்கிரஸ் வழிகளால் பிரயோசன

மில்லையென்று நம்பிக்கை இழந்து, அவர்கள் தலைவர் களினின்று மீறி, வேறு வழிகளிலும் வேறு உபாயங் களாலும் மீட்சிதேட ஆரம்பித்தார்கள். இப்போது நான் கேட்கிற தென்னவென்றால், இந்த வேறு வழி களையும் உபாயங்களையும், தந்திரங்களெனவும் சம யோசித யுக்திகளெனவும், மற்றப்படி உயர்த்தாமல் கருதினாலுங்கூட, இவைகள் கைகூடியிருக்கின்றனவா? இவைகளால் அநேக பிராசிகூஷன்களும் ஜனங்களுக் குத் தொந்தரவும் நேரிட்டனவே யன்றி ஜனங்கள் பக்கத்தில் புலப்படும் நன்மை விளங்கவில்லை. மாறாக, சட்ட நெறிகளில் அபிமானம் வைத்த ஆங்கிலேய நண் பர்களின் கை பலங்குறைந்து போயிற்று. அதே காலத் தில் பத்திரிகைகளுடைய சுதந்திரத்துக்கும் பொதுக் கூட்டங்கள் கூடும் சுதந்திரத்துக்கும் விரோதமாய்ச் சட்டம் செய்ய ஹேது உண்டாக்கிற்று; விசாரணை இல்லாமல் வெளியேற்றுவதான கத்தியைத் துருப் பிடித்த பழைய உரையினின்று உருவ இடமும் கொடுத் தது. இன்னொரு கேள்வியும் கேட்க விரும்புகிறேன். என்னவெனில், பிற்போக்கு அலை நின்று எவ்விஷயத்தி லேனும் நன்மைக்கு ஆரம்பம் உண்டாயிருந்தால், அது காங்கிரஸ் செய்துவந்த காரியங்களின் பலனல்லவா? காங்கிரஸ் பலன்களை அனாவசியமாய் உயர்த்திப் பேச எனக்கு இஷ்டமில்லை. ஆனால், இந்தியாவில் ராஜ்ய திருத்தத்துக்காக இங்கேயாவது இங்கிலாந்திலாவது வேறென்ன திறமையான சங்கம் இருக்கின்றது? சென்ற 25 வருஷங்களாக இந்தக் காங்கிரஸ் சபை பொதுஜன அபிப்பிராயத்தைச் சீர்ப்படுத்தியும் ராஜீ

யத் திருத்தங்கள் வேண்டுமென்று நெருக்கிக் கேட்டும், பகிரங்கமாயும் பயமில்லாமலும் அவசரமில்லாமலும் ஓய்ச்சல் இல்லாமலும் வேலை செய்து வந்திருக்கின்றது. இவ்வாறு ஜனங்களுடைய விருப்பங்களை அனுபோகத்தில் எடுத்துக்காட்டியும் அது பயன்படவில்லை என்போமானால், அதைவிட ராஜாங்கத்தாரின் விவேகத்துக்கு வேறு குறை என்ன வேண்டும். உண்மையில், லார்ட் மார்லி செய்த திருத்தங்கள் காங்கிரஸ் மகா சபை குறிப்பிட்ட வழிகளிற் சென்றிருக்கின்றன. சட்ட சபைகளைத் திருத்தி விசாலப்படுத்துதல் காங்கிரஸ் சபை ஆரம்ப முதலே கேட்டுக்கொண்டுவந்த விஷயம். ஆகையால், காங்கிரஸ் வழிகளைப்பற்றி மனம் சலித்துப்போகக் காரணமில்லையென்று நமது பொறுமையற்ற கற்பனைவாதிக (Idealists) ளுக்குச் சொல்லுவேன். காங்கிரஸ் வேலையின் பலன்களைக் குறைத்துப் பேசி நம் விரோதிகளுக்கு இடங்கொடுக்க வேண்டாமென்றும், அவர்களுக்குச் சொல்வேன். திருத்தத்தில் முன் வரிசையிலிருப்பவர்கள் அதைரியத்தைக் கொடுக்கக்கூடிய கோட்பாட்டைப் போதிக்கக் கூடாது. முன் செல்லும் சைனியத்துக்குத் துப்பறிவோரும் ஊலன் (Uhlan, குதிரைப்) படையும்போல தைரியமாய் கொடியேந்திச் செல்லவேண்டும். பார்லிமெண்டுக்கும் மேலதிகாரிகளுக்கும் பெடிஷன் (மனுக்கள்) செய்துகொள்ளும் வழக்க சம்பந்தமாய் அது இரப்பதெனப்படுவதைக் கேட்டிருக்கிறோம். மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி 1906-ம் வருஷத்துக் கல்கத்தா காங்கிரஸில் சொன்னதுபோல, மேற்கண்டவாறு

பெடிஷன்கள் கொடுப்பதில் தயவை வேண்டி இரப்பது எதுவுமில்லை. நாம் ஒருவருக்கொருவர் கடிதமெழுதிக் கொள்வதில் "தங்கள் தாழ்மையான ஊழியன்" என்று சொல்லிக்கொள்ளுகிறோம். அதனால் ஊழியனாகி விடுகிறோமா? பெடிஷன் கொடுப்பது மேலதிகாரிகளை அணுக வழக்கமான வழி. பெடிஷன் செய்து கொள்வது பாத்தியங்களையும் நீதியையும் திருத்தங்களையும் கேட்கும் விதம். குறிப்பான எந்த விஷயமானாலும் அதைப்பற்றி ஜனங்களின் எண்ணம் என்னவென்று காட்டி பார்லிமெண்டை நெருக்கி அதன் மனதை மாற்றும் வழி. நிச்சயமாகவே, * "**பெடிஷன் ஆப் ரைட்ஸ்**" என்று பிரிட்டிஷ் சரித்திரத்தில் பேர்போன பாத்தியப்பத்திரத்தை அரசனுக்குக் கொடுத்தவர்கள் இரப்பவர்களல்ல. இரப்பவர்களாயிராமல் இப்போது பிரிட்டிஷ் ஜனங்கள் அனுபவிக்கும் சுதந்திரங்களை 17-ம் நூற்றாண்டில் சம்பாதித்துக் கொடுத்தவல்லாளர். இப்படி சரித்திரத்தில் அனுஷ்டானமாயிருந்து வந்த வழக்கத்தைப் பின் பற்றுவதால் இந்திய ஜனங்களுடைய தன் மதிப்பைப் புண்படுத்தக்கூடிய தொன்றுமில்லை."

* இது 1628-ம் வருஷத்தில் சார்ல்ஸ் 1 இங்கிலாந்துக்கு ராஜாவாயிருந்தபோது, பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டம். பார்லிமெண்டுடைய சம்மதமில்லாமல் வரி வசூல் செய்தல், தேசத்தில் சட்டப்படிக் கல்லாமல் ஒருவனை ஜயிலில் அடைத்தல், முதலியவை செல்லாவென்று இந்த பார்லிமெண்ட் சட்டத்தால் செய்யப்பட்டது. இதை ஸர் ஜான் எலியட் என்ற பார்லிமெண்ட் சபை மெம்பர் முக்கியஸ்தரா யிருந்து செய்துவைத்தார்.

காங்கிரெஸ் வழிகளிலும் சட்ட வரையறைக்குட்பட்டுக் கலக்கம் செய்வதிலும் நம்பிக்கை இல்லாமல் அதை விட்டுப் பிரிந்துபோனவர்கள் நான் சொன்னதையெல்லாம் கவனித்து மறுபடியும் முன்போல காங்கிரஸுக்குள் வந்து சேரவேண்டுமென்று மனப்பூர்வமாய் விரும்புகிறேன். இப்படிப் பிரிந்து போனவர்களன்றி வேறு சிலர் காங்கிரஸ் விதிகளில் கலையாத நம்பிக்கை வைத்திருந்தபோதிலும், சூரத்தில் நேரிட்ட குழப்பத்துக்குப் பிறகு கான்ஸ்டிடூஷனல் கட்சியார், அதாவது சட்டத்துக் குட்பட்டுக் கலக்கம் செய்யும் கட்சியார், காங்கிரஸ் முற்றிலும் நசித்துப் போகாமலிருக்கும் எண்ணத்துடன் செய்த மாறுதல்களில் நம்பிக்கை இல்லாமல் காங்கிரஸை விட்டு ஒதுங்கி யிருக்கிறார்களென்று அறிகிறேன். இந்த நமது நண்பர்கள் அரிதக்கொள்கைகள் கொண்டவர்களினின்றும் வேறாக மதிக்கத்தக்கவர்கள். ஆனால் அந்தச் சமயம் அதிசயமாய் நேரிட்ட சங்கடசமயமா யிருந்ததுபற்றி அதிசயமான உபாயங்களை அனுஷ்டித்தல் அவசியமாய் நேரிட்டபடியால், அதை முன்னிட்டுச் செய்த வழிகளில் நுட்பமான குறைகளைக் கண்டு பேசாமலிருக்க வேண்டுகிறேன். காங்கிரஸைச் சேர்ந்த நீங்கள் எந்த விதிகளுக்காக உழைக்கிறீர்களோ அவைகளை விட்டுக் கொடுக்காமல் உங்களை விட்டுப் பிரிந்துபோனவர்களை நீங்கள் சேர்த்துக் கொள்ளக்கூடாதா வென்று கேட்கிறேன். விவாதத்திலிருக்கிற லாப நஷ்டங்கள் அதிக முக்கியமான தென்பதை மறவாதேயுங்கள். உங்களுடைய பிரிவினைகளை ஒன்றாய்ச் சேர்க்க என்ன நியா

யங்கள் உண்டோ அவைகளை அசட்டை செய்யக் கூடாது.

“ஐக்கியத்துடன் உழைத்தல்”

நம்முடைய அலுவலின் அனுபோகத்துக்குரிய பாகத்தைப்பற்றி இப்போது கவனிப்போம். இவ்வாறு நாம் சொன்ன விதிகளை அனைவரும் ஒப்புக்கொண்டு, முன்னேற்றத்துக் கவசியமான சக்திகள் ஒன்றுசேர்ந்துழைக்கப் பெறுவோமாயின், எந்த வழியில் நமது பிரயாசையைச் செலுத்தி லாபம் பெறக்கூடுமென்பதை யோசிப்போம். இதுவரையில் காங்கிரஸ் வேலையானது மூன்று தலைப்பின் கீழ் பிரிக்கப்படக்கூடியது. (1) இந்தியாவில் பொதுஜன அபிப்பிராயத்தைப் பண்படுத்திச் சீர்படுத்துவதனால் மேன்மேலும் வேலை செய்துகொண்டுபோவது ஒன்று. (2) சில திருத்தங்களைக் கேட்டு அதன்படி கவர்ன்மெண்ட் செய்ய வேண்டுவதொன்று (3) இங்கிலாந்தில் நமது கட்சியைப்பற்றி வேலை செய்வதொன்று. சட்டசபையின் திருத்தத்தினாலேயும் இந்தியாக் கவர்ன்மெண்ட் மாகாணக் கவர்ன்மெண்டுகள் இரண்டிலும் சேர்ந்த நிர்வாகச் சபையில் இந்தியருக்கு ஸ்தானம் கொடுத்ததினாலேயும் முதல் பகுதியில் நமது வேலை அதிகமாக்கப்பட்டிருக்கிறது. சுவாதீனம் பெற்ற இந்தியர்கள் அநேக முக்கியமான இந்திய விஷயங்களில் புகுந்து, திருத்தங்கள் செய்ய நெருக்குவதற்கு ஆரம்பம் செய்ய அதிக சக்தியுள்ளவர்களாவார்கள். இந்த மகா முக்கியமான வேலையில் ஒத்துழைத்து ஒருவர்

பாதி நாட்டிற்குச் சட்டசபைகளின் சுவாதீன மெம்பர்களை ஆலோசனைகேட்டு, எந்தத் திருத்தத்திட்டங்களுக்கு ஜனங்கள் அருகராயிருக்கிறார்களோ எவைகள் கைகூடுகிறவரையில் காங்கிரஸ் மெம்பர்கள் கூடிச் சிந்திக்கத் தயாராயிருக்கிறார்களோ அவைகளை இந்தக் காங்கிரஸ் குறிப்பிட்டு வைக்கவேண்டுமென்று நான் சொல்லுவேன். இரண்டாவது தலைப்பைப்பற்றி, காங்கிரஸ் தீர்மானங்கள் வழக்கப்படி இந்தியாக் கவர்ன்மெண்டுக்கும் செக்ரெடரிக்கும் அனுப்பப்படும். ஆனால், ஹிஸ் எக்ஸெலென்ஸி வைஸிராயிக்கு முக்கியமாய் நமது தீர்மானங்களைக் கொண்டுபோதல் விரும்பத்தக்கதென்று நினைக்கிறேன். காங்கிரஸ் முக்கியமானவை யென்று நினைக்கும் தீர்மானங்களைக் கண்டு ஒரு பத்திரமெழுதி வாசிக்கவேண்டும். அவைகளில் நிர்வாக அதிகாரத்தையும் ஜுடிஷல் அதிகாரத்தையும் பிரித்தல், ராணுவச் செலவைக் குறைத்தல், கல்விக்கு அதிகப்பணச் செலவு செய்தல், இந்தியன் பாமின் (Famin) யூனியன் என்ற சபையாரால் கேட்டுக்கொண்டபடி, சிலபொருக்குக் கிராமங்களைப் பற்றின பொருளாதார நிலைமைகளைப்பற்றி விசாரணை செய்தல், இவைகள் சேரவேண்டும். இந்தியாக் கவர்ன்மெண்டுக்குத் தலைவராயிருக்கிறவர் இந்த முக்கியமான விஷயங்களைப்பற்றிக் கொண்டிருக்கும் கருத்துகள் என்னவை யென்று அறிந்துகொள்ளல் அவசியமாகும். மற்ற சங்கங்கள் தெரிவித்துக் கொண்டதற்கு லார்ட் ஹார்டிஞ்ஜ் கொடுத்த ஜவாப்புகள் நமக்கு வரும் ஜவாப்பானது மரியாதை

யாயிருக்குமென்பதைக் காட்டுகின்றன. ராஜாங்கத்துக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து தண்டனை யனுபவிக்கிறவர்களை விடுவிக்க வேண்டுமென்றும் அல்லது தண்டனையைக் குறைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதோடு கூட, சென்ற சில வருஷங்களாகச் செய்யப்பட்ட அடக்குத் திட்டங்களைக் குறைக்கவேண்டுமென்று, கேட்டுக்கொள்ளலாம். என்னைக் கேட்டால் வங்காளப் பிரிவினை சம்பந்தமான உத்தரவை மாற்றவேண்டுமென்று வேண்டுவேன். ஆனால், தற்சமயம் புதிதாய் ராஜப்பிரதிநிதி வந்திருக்கும்போது இந்த விஷயமாய் எதுவும் செய்வது விவேகக் குறைவாகும். இந்தப் பெரும் பிசகானது கடைசியாய்த் திருத்தப்பட வேண்டுமென்று நான் எப்போதும் நினைத்தவன். வங்காள முழுமைக்கும் ஒரு கவர்னரும் அவருடைய எக்ஸிகூடிவ் கௌன்ஸிலுமாக ஏற்பட்டு, அவரின் கீழ் அதிலடங்கிய பற்பல மாகாணங்களுக்கு கமிஷனர்களுமாக்குவது திருப்திகரமான ஏற்பாடாகுமென்று, இந்த விஷயத்தில் அக்கறைவைத்த எல்லாரும் ஆலோசித்துச் சொல்லுவார்களானால், அப்போது இதை மாற்றுதல் கவர்ன்மெண்டுக்கு அனுபோகத்தில் எளிதாகும்.

இங்கிலாந்தில் கலக்கம்.

இங்கிலாந்தில் கலக்கம் செய்வது மூன்றாவது தலைப்பாகப் பேசவேண்டி யிருக்கின்றது. இம்மாதிரி இங்கிலாந்தில் ஜனங்களைப் பார்த்துப் பேசி, அவர்களை உங்களுக்கு முக்கிய துணையாக்கிக் கொள்ளுவதைப்

பற்றிப் போதுமானவரை நீங்கள் கவனிக்கவில்லை யென்பேனானால், என்னை மன்னிக்கவேண்டும். 1889-ம் வருஷத்தில் நான் மிஸ்டர் பிராட்லாவோடு வந்தபோது, இதை உங்களுக்குச் சொன்னேன். 1904-ம் வருஷத்தில் ஸர் ஹென்றி காட்டனோடு வந்தபோதும் இதைப்பற்றிச் சொன்னேன். 1910-ம் வருஷத்திலும் இந்த முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சிந்தை செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் செய்யவேண்டிய இரண்டு மாதிரி வேலையை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்துவேன். முதலாவது, இந்தியாவிற் செய்யவேண்டிய வேலை இருக்கின்றது. தேசத்தில் நீண்ட அனுபோகத்துக்கும் விவேகமுள்ள ஆலோசனைக்கும் தக்கபடி, இந்தியாவில் பொது ஜன அபிப்பிராயமானது ஒன்று பட்டு அமைய நோக்குவதால் ஜனங்களுக்கு ராஜ்ய விஷயங்களில் அறிவு உண்டாக வேண்டும். நமது வேலையின் இந்தப் பாகம் முடிந்து போயிற்று. சென்ற 25 வருஷ காலமாய் காங்கிரஸ் தீர்மானங்கள் ஜனங்களால் கவனிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்தியா முழுமையும் சுவாதீனமான பொது ஜன அபிப்பிராயத்தை அவைகள் தெரிவிக்கின்றனவென்று ஒப்புக்கொண்டாய் விட்டது. இந்தியாவுக்கு வேண்டியதை காங்கிரஸ் தீர்மானங்கள் சொல்லிவிட்டன. அப்பீல் செய்துகொள்வோனுக்கு ப்ரீப் (Brief), அதாவது கேசின் விபரங்கள், தயாராயிருக்கின்றன. பிரிட்டிஷ் ஜனங்களாகிய ஹைகோர்ட் முன் இந்தியர்களுடைய கேசை நீளச்சொல்லுவது தான் பாக்கி. செய்யவேண்டிய வேலை ஜனங்களுடைய வேலையாயிருக்

கின்றது. பிரிட்டிஷ் ஜனங்கள் மனதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் கடைசி அதிகாரம் அவர்களிடத்திலிருக்கிறது. பிரிட்டிஷ் ஜனங்கள் முன்னிலையில், முக்கியமாய்த் தொழில் செய்வோரது முன்னிலையில், வேலை செய்த இந்தியர் எவருக்கும் அந்த பிரிட்டிஷ் ஜனங்கள் எவ்வளவு ஒற்றுமையுணர்ச்சியும் நல்ல சிந்தையுமுள்ளவர்களென்று சொல்லவேண்டியதில்லை. இங்கிலாந்தில் ஜன அபிப்பிராயமானது பார்லிமெண்ட் இலெக்டர்களைப் பாதிக்கின்றது; இலெக்டர்களுடைய அபிப்பிராயமானது யார் காமன்ஸ் சபையில் மெஜாரிடியுள்ளவராவரென்று காட்டுகின்றது; காமன்ஸ் சபையில் மெஜாரிடியானது அது யாரை ஒப்புக்கொள்ளுகிறதோ அவர்களைக் கவர்ன்மெண்டாக்குகின்றது; கவர்ன்மெண்ட் இந்தியா செக்ரிடெரியையும் கவர்னர் ஜெனரலையும் நியமிக்கின்றது. அவர்கள் இங்கிலாந்தில் ஓயிட் ஹாலிலும் இந்தியாவில் கல்கத்தாவிலுமிருந்து கடைசி அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள். இந்தியர் விவேகிகளாயிருந்தால், இதை மனதில் வைத்துக்கொண்டு, எந்த வழியில் சென்றால் தடைகள் குறைவோ அந்த வழியில் செல்லுவார்கள். கற்சுவரின் பேரில் முட்டிக்கொள்ளாமல் அவர்கள் கையிலகப்பட்டிருக்கும் சாவிகளை எடுத்துக்கொள்வார்கள். மனமோகன் கோஸ், சந்தவர்க்கர், முதலியார் (சேலம் ராமசாமி), 1885-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்குப் போயிருந்தபோது, என்ன நன்மை கிடைத்ததென்பதைக் கவனிக்கவேண்டும். விஷயங்களின் உள்வயணத்தை உண்மையாய் அறிந்தவர்களே மிஸ்டர்

தாதாபாய் நௌரோஜி, மிஸ்டர் W. C. பானர்ஜி, மிஸ்டர் லால்மோகன் கோஸ், மிஸ்டர் A. M. போஸ், மிஸ்டர் சுரேந்திரநாத் பானர்ஜி, மிஸ்டர் வாச்சா, மிஸ்டர் மதோல்கர், மிஸ்டர் கோகலே, இவர்கள் இங்கிலாந்தில் பொது ஜனங்களைக் கூட்டிப் பேசியும் பெரிய மனிதர்களை நேரிற் பார்த்தும் செய்ததை அறிவார்கள். ஆனால், இவர்களிற் சிலர் இங்கிலாந்துக்கு வந்து வெகுகாலம் கழித்து, வேறு சிலர் வந்தார்கள். வேண்டிய தென்னவென்றால், இந்தியர் இந்தியாவின் விஷயங்களைப் பற்றிக்கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை இங்கிலாந்து ஜனங்கள் அறியும்படியாக கிரமமாயும் இடைவிடாமலும் தொடர்ந்து செய்ய வேண்டும்.

தன்னையே தான் நம்பிச் செய்வது என்ற புத்திதான எண்ணம் இந்தியாவில் உண்டாயிருக்கின்றது. இந்த எண்ணம் நன்மையானாலும், இதர ஜனங்களை வெறுப்பதாக முடிந்து தாழக்கூடாது. உங்களுடைய விரோதிகளுக்கு நீங்கள் அன்னிய ஜனங்களிடத்தில் வைக்கும் துவேஷம் ஒரு முக்கிய பலம். உலகத்தில் எத்தேசமானாலும் அங்கும் இங்கிலாந்திலுமுள்ள சுதந்திர விருப்பமுள்ளவர்களிடத்தில் சகோதர பாவம் உண்டாக்கிக் கொள்வதில் இத்தகைய உணர்ச்சி விரோதம் செய்யக்கூடாது. பிரிட்டிஷ் ஜனங்களுடைய நல்லெண்ணத்தால் மாத்திரம் அதன் ஆதரவின் கீழ் இந்தியா அது அடையக்கூடிய உத்தம நிலைமையை, அதாவது ஒன்றாய்ச் சேர்ந்த மாகாணங்க ளடங்கிய தேசமாகும் நிலைமையை, பெறக்கூடும். கவி சொன்னதுபோல, உலகத்து ஜனங்கள் ஐக்கியம் பெற்ற

ஒரே குடும்பம் போலாவதற்கு அது ஒரு அடி முன் வைத்ததாகும்.

நமது கற்பனை வாதிகள் சுவராஜ்யத்தில் ஆசைப் பட்டுக்கொண்டிருக்கையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மெம்பராயிருப்பதின் பெருமைகளையும் அன்னியர்கள் தொந்தரவில்லாமல் தரையையும் கடலையும் சம்ராட்சித்தலையும், உலகத்தில் ஒப்புயர்வற்ற சுதந்திரமும் முற்போக்குமுள்ள தேசத்தாருடன் பங்கு பெற்றிருப்பதையும் மறக்கவேண்டாம். தற்காலத்து நிலைமைகளில் இந்தியா தனித்தேசமா யிருக்கக்கூடுமென்று எவரும் நினைக்கவேண்டாம். சுயஆட்சிக்கு வேண்டிய சகல சாதகங்களையும், அதாவது பழைய காலத்து நாகரிகம், அதிகாரத்துக்கு அடங்கியிருப்பது, சுறுசுறுப்பும் சட்டத்துக்குக் கீழ்ப்படிவதுமான குணம், ஆட்சி நடத்தும் வகுப்பாரில் போதுமான விவேகம், இவைகளை உடைத்தாயிருக்கின்றது. ஆனால், அதற்கு பயிற்சியும் கட்டுப்பாடும் இன்னும் உண்டாகவில்லை. அதற்குக் கொஞ்சக்காலம் பழக்கம்வேண்டும். ஜனத்தலைவர்கள் ஒத்துழைக்க முன் வருவார்களானால் அந்தப் பழக்கம் நீண்டகாலத்துக்கு அவசியமில்லை. பிரிட்டிஷ் ஜனங்களோடு கைபோடு கைசேர்த்துக்கொண்டு முன்னேற்றத்துக்கு முதலடி எடுத்துவைக்கக்கூடும்.

தொழிலாலோசனைச் சங்கம்.

R. N. முகர்ஜியின் பேச்சு.

30-12-1910.

இந்த வருஷத்துக் கான்பரென்ஸுக்குப் பிரசிடெண்டாக நீங்கள் என்னைத் தெரிந்தெடுத்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். 1907-ம் வருஷத்தில் ஐரோப்பாவிலிருந்து நான் பம்பாய்க்கு வந்தபோது, அந்த கௌரவத்தை வகிக்கும்படி என்னைக் கேட்டீர்கள். இவ்வளவு முக்கியமான ஆலோசனைக்குத் தலைவராயிருக்கும் பொறுப்பை நான் ஆறு மாசம் என் வேலையை விட்டிருந்த பிறகு பொறுப்பது சாத்தியமில்லாமல் நான் அந்த கௌரவத்தை இழக்கும்படி நேரிட்டது.

இங்கே அநுஷ்டானத்துக்கு வேண்டிய சில பிரேரணைகளை மாத்திரம் எடுத்துச் சொல்லுவேன். நாம் ஏதாவது நல்ல வழியில் முன்னுக்கு வரவேண்டுமானால் எதை நாம் அசிரத்தை செய்யக்கூடாதோ அதைப் பற்றிச் சில முக்கியமான குறிப்புகளைச் சொல்லுவேன். இந்தியாவில் பல பாகங்களில் சில வருஷங்களுக்குள்ளாகப் பல சிறிய தொழில்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அநேகமாய் நிறைவேறாமலிருக்கின்றன. நிறைவேறாமலிருப்பதற்குக் காரணத்தை நாம் அறியவேண்டும். நமது தேசத்துத் தற்கால நிலைமையில் நமக்குச் சித்தி கிடைக்கவேண்டுமானால் நாம் எடுத்த

தொழிலில் அனுபோகமும் நிபுணரறிவும் உள்ளவர்கள் கிடைப்ப தவசியம். சாஸ்திர அறிவு பெறும்படி வெகு காலத்திலிருந்து அநேக சிறுவர்கள் ஐரோப்பா அமெரிக்கா மற்ற அசல் தேசங்களுக்கும் அனுப்பிவிக்கப்படுகிறார்கள். இவர்களிற் சில பேர் எந்த வித்தையைக் கற்க அனுப்பப்பட்டார்களோ அதைக் கற்று வந்திருக்கிறார்கள். ஆயினும், கைத்தொழில் அபிவிர்த்திக்கு வழிகாட்டிகளாகத் தோன்றி, நிர்வாகத்துக்குத் தகுந்த சக்தியும் பயிற்சியும் உள்ளவர்களாயிருத்தல் அவசியம். நான் அறிந்த வரையில் இவர்களுக்கு எந்தப் பெரிய தொழிலையும் நிர்வகிக்கச் சக்தி இருப்பதாகத் தோன்றவில்லை. இவர்கள் எதில் சமர்த்தர்களாகவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதில் சமர்த்தர்களாகிறதற்கு இதை விட்டுப் புறப்பட்டுப் போவதற்கு முன்னால், தகுந்த பழக்கம் பெறுவதற்குச் சாவகாசமாவது தருணமாவது கிடைப்பதில்லை. இங்கிருந்து எதைப் படிக்கப்போகப் பொதுப்பணத்தைச் செலவிட்டார்களோ அதைப் படித்துப் பிறகு அதற்குத் தகுந்த தொழிலைப் பெறாமல் வேறு வேலை செய்கிறார்கள். ஆகையினால் அவர்களின் பொருட்டுச் செலவான பணம் வீணாய்விடுகிறது. நம்முடைய தொழில்கள் விசாலிக்க இடம் பெறவேண்டுமென்ற எண்ணம் உண்மையாயிருக்கும் பட்சத்தில் ஒரு மத்திய இடத்தில் ஒரு டெக்னிகல் காலேஜ் வைத்து அதற்கு நல்ல தொழிற்சாலையும் லாபரேடரியும், அதாவது சோதனை செய்து பார்க்கும் சாலையும், ஸ்தாபிக்க வேண்டும். இந்தியாவில் நானாவிடங்களிலுள்ள ஸ்கூல்களிற் படித்தான பிறகு அவசியமானால் இங்கே சோ

வரவேண்டும். இது டாடா இன்ஸ்டிடூட்டுடன் ஒரு போதும் போட்டி செய்யாது. ஏனெனில், நான் தெரிந்துகொண்ட மட்டில், அது சுவேச்சையாய் ஆராய்ச்சி செய்ய மட்டும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. சர்வகலாசாலை மாணாக்கர்கள் அங்கே அவர்களுக்குப் படிப்பு முடிந்த பிறகு, உதாரணமாக B. Sc. பரீட்சை தேறின பிறகு, இந்தப் புதுக் காலேஜில் வந்து சேர்ந்து, அங்கே அவர்கள் சாஸ்திர ஞானம் பெறுவதுமன்றி அனுபோகத்தில் உபயோகப்படக்கூடிய அறிவும் பெறலாம். அப்பேர்ப்பட்ட காலேஜ் ஸ்தாபிப்பதற்கு அதிகப் பணச் செலவு வேண்டும். இந்தக் கான்பரென்ஸ் தாமசமில்லாமல் இந்தக் காலேஜ் நியமனத்தைப்பற்றி விவரங்களை எழுதிக்கொண்டு இந்தியாக் கவர்ன்மெண்டைப் பார்க்கவேண்டும். அந்தந்த ஸ்கூல்கள் படித்துத் தேறின பிள்ளைகளுக்குப் பணவுதவி செய்து, இந்தக் காலேஜில் தங்களுடைய சாஸ்திர அறிவைப் பெருக்கிக்கொண்டுபோக அனுப்பலாம். இப்போது அன்னிய தேசங்களிற் போய்க் கல்வி கற்பதற்குச் சிறுவர்களுக்குக் கவர்ன்மெண்டார் உதவி செய்கிறார்கள். அதை நிறுத்தி இந்தக் காலேஜில் வாசிக்கும்படி உதவி செய்யலாம். பிறகு, இந்தக் காலேஜில் தேறினவர்களை 2 வருஷத்துக்கு சாஸ்திரக் கல்வி கற்கும்படி இங்கிலாந்துக்கேனும் வேறெத் தேசத்துக்கேனும் அனுப்பலாம்.

தொழிற் கல்வி யறிவைப் பெறுவதற்காக அன்னிய தேசங்களுக்குப் பழக்கமில்லாத சிறுவர்களை யனுப்புவதிலுள்ள விபத்துகளோடு கூட, ஒரு கட்டு

யில்லாமல் பொறுக்கின சிறுவர்களை அன்னிய தேசத்துக் கனுப்புவதில் சரீரத்துக்கும் ராஜாங்க சம்பந்தமாயும் தீங்குகள் நேரிடக் கூடியன. இந்த விஷயத்தைக் குறித்து இந்தியா கவர்ன்மெண்ட் நன்றாக ஆலோசித்துப் பிறகு, இந்தியாவில் காலேஜ் ஸ்தாபிப்பதை நிச்சயிக்கவேண்டும். இது இந்த உபாயத்தின் மொத்தக் கருத்தாகும். இது முற்றிலும் கவனிக்கப்படும்போது, இதனுடைய உள் வரலாறுகள் இன்னவையென்று தெரிவிக்கப்படவேண்டும். இந்த டெக்னிகல் காலேஜை நிர்வகிக்கவும் அதனுடைய கருத்தை முற்றிலும் நிறைவேற்றவும் சொந்தக்காரர்கள் சக்தியுள்ளவர்களாகமாட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்டுக்கு இந்தக் கான்பரென்ஸ் இந்த விஷயத்தை அறிவித்துப் பர்மிங்காம், மான்செஸ்டர், லீட்ஸ், இவைகளிலும் மற்றிடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள டெக்னிகல் காலேஜைப் போல மத்திய இடத்தில் ஒரு டெக்னிகல் காலேஜ் ஸ்தாபிக்கக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

இதற்கு மத்தியில், தொழிலபிவிர்த்தி யாவதற்கு வேண்டிய ஜனங்கள் மனதிலுண்டாயிருக்கும்போது உணர்ச்சியை நாம் உபயோகப்படுத்தவேண்டும். அன்னிய தேசத்தாராகிய நிபுணர்களை நாம் உபயோகப்படுத்தவேண்டும். சுதேசிய நிகழ்ச்சியானது அன்னியர்களை உபயோகப்படுத்தித் தொழிலபிவிர்த்தியாகக் கூடாதென்ற தப்பெண்ணத்தை நீக்கவேண்டும். மூலதனம் கிடைப்பதற்கு என்ன செய்யவேண்டுமோ அதையும் கவனிக்கவேண்டும். தகுந்த ஒரு நிபு

ணைச் சம்பாதித்துக் கொண்டு நம்பிக்கையை யுண்டுபண்ணின பிறகு, நமது அடுத்த கஷ்டமானது அவசியமான மூலதனத்தைப் பெறுவதாகும். இது உண்மையில் கஷ்டமான காரியந்தான். இத்தேசத்தில் சொந்த முயற்சியானது சிசுப்பிராயத்தில் இருந்து வருகிறது. ஆனதினாலே உண்மையாகவே நிறைவேறக்கூடிய கம்பெனிகளும் மூலதனத்தைப் பெறுவதில் கஷ்டப்படுகின்றன. இந்தியாவில் மூலதனமானது ஊக்கமில்லாததாய் நாணப்படுகிறதென்பது பொதுவாகத் தெரிந்த விஷயம். இதற்குக் காரணம் நமது முதலாளிகளுக்குத் தொழிலைப்பற்றியாவது வியாபாரத்தைப் பற்றியாவது அறிவில்லை. மேலும், அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படும் பற்பல உபாயங்கள் நிறைவேற எவ்வளவு சக்தியுள்ள தென்பதை யறியாதவர்கள். மேலும், பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதும் வட்டிக்குக் கொடுத்து வாங்குவதும் அதனால் அவர்கள் வட்டி வாங்குவோ ரெனச் சொல்லப்பட்டுவருவதுமான நீண்ட காலத்து வழக்கத்தினின்று விலகச் சம்மதிக்கக்கூடியவர்க ளல்ல. இந்தியா பொதுவாய்ப் பேசினால் ஏழை தேசம், அதாவது பெரும்பான்மையான ஜனங்கள் ஏழைகள். ஆனால் இந்தியாவில் செல்வமில்லாமற் போகவில்லை. இப்போது மழுங்கிக் கிடக்கும் அநேக தொழில்களை நடத்தவும் தொழில் செய்து செல்வம் பெற்ற மற்றத் தேசங்களைப் போல இந்தியாவையும் செல்வம் பெற்ற தேசமாக்கவும் இவர்களுடைய மூலதனத்தில் ஒரு பாகத்தை உபயோகித் தாலும் போதுமானது.

புது வகுப்புத் தொழிலில் எப்போதும் ஒரு விதமான ஆபத்தும் நிச்சயமின்மையும் இருக்கும். அந்த ஆபத்தும் நிச்சயமின்மையும் இன்னவென்றும், கைத்தொழிலில் பணம் போடுவதாற் கிடைக்கக்கூடிய லாபம் இன்னவென்றும் நிதானிக்க நம் இந்திய முதலாளிகள் தெரியாதவர்களா யிருக்கிறார்கள். எந்தப் புதுத் தொழிலாகட்டும், அதுவும் இந்தியாவில், அது ஆரம்பித்த கால முதல் இன்ன லாபம் வருமென்று நிச்சயமா யிருத்தல் முடியாது. ஆகையால், நூற்றுக்கு மூன்றல்லது நாலு வீதம் லாபம் தருவதா யிருந்தா லன்றி எந்தத் தொழிலிலும் பணம்போடுவதற்கு நம் முதலாளிகள் நிச்சயமாயிருக்கமாட்டார்கள். கவர்ன்மெண்ட் கொஞ்ச காலத்துக்காவது தொழிலில் போட்ட பணத்துக்கு லாபம் தருவதாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இப்படி ஏற்றுக்கொண்டாலும் அது தொழிலின் நன்மையின் பொருட்டாக மாட்டாது. ஆனால் இந்தியாவைப்போல் தொழில் நடத்துவதில் புதிதான நிலைமையிலிருக்கும் தேசத்தில் கொஞ்சதூரம் கவர்ன்மெண்ட் ஆதரித்தல் அவசியமாகும். வெகுமதி கொடுத்தும் ஒன்றைவிட மற்றொரு தொழிலுக்கு ஏறக்குறைய வரிபோட்டும் சகாயம் செய்யவேண்டும்.

பெரிய தொழில் ஸ்தாபனங்கள் வைத்து நிர்வகிப்பதற்கு ஒரு பெரிய கூட்டு வியாபாரம் அவசியம். இதனால் கூட்டு வியாபாரிகள் எவ்வளவு பணம் போடுகிறார்களோ அவ்வளவு பணத்துக்குப் பொறுப்பாளிகளாகிறார்கள். ஆனால், இது சம்பந்த

மான ஆக்ட் இந்தத் தேசத்துக்குரிய விசேஷமான நிலைமைகளுக்குத் தக்கபடி மாறுதல்களுடன் இங்கிலாந்தில் செய்யப்பட்டிருக்கும் 1908-ம் வருஷத்து ஆக்டைப்போல மாற்றப்படவேண்டும். வியாபாரத்தில் விருத்தியடைவதைத் தடுக்காமல் பங்கு வாங்கிக் கொண்டவர்களைப் போதுமானபடி ஆதரிக்கவேண்டும். இந்த விஷயம் கவர்ன்மெண்டின் கவனத்திலிருந்து வருவதாக அறிந்து சந்தோஷப்படுகிறேன். பங்கு எடுத்துக்கொண்டவர்களுக்குத் தகுந்த சம்ரக்ஷணை செய்வதோடு ஊக்கத்தை உற்சாகப்படுத்த இது முன் வருமென்று நம்புகிறேன்.

ஒரு கூட்டு வியாபாரக் கம்பெனி ஸ்தாபிப்பதில் பலமான டைரக்டர்க ளடங்கிய சங்கம் ஸ்தாபிப்பது முதலவசியம். நமது டைரக்டர் சங்கங்கள் இது வரையில் அலங்காரார்த்திகளாயிருந்து வருகிறார்கள். எடுத்துக்கொண்ட காரியத்துக்கு நன்மையுண்டாகும் பொருட்டு மனப்பூர்த்தியாய் வேலை செய்யக்கூடியவர்களும் அனுபோகசாலிகளும் டைரக்டர் சங்கத்திலிருக்கவேண்டும். நம்முடைய தற்காலத்து வியாபார அறியாமையைக் கவனிக்கும்போது, எந்தத் தொழிலை விர்த்திசெய்ய விரும்புகிறோமோ, அந்தத் தொழிலில் அனுதாபம் வைத்து விருத்திக்குக்கொண்டுவரக்கூடிய சில ஐரோப்பியர்களை டைரக்டர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இம்மாதிரி டைரக்டர்க ளடங்கிய போர்ட்கள் தொழிலை மேல் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டிருக்கும்போது, அதை நிர்வாகம் செய்கிறவர் தொழிலை

நன்கு யறிந்தவராயும், அந்த வேலைக்குத் தகுந்தவராயு மிருந்து அதன் சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் விபரங்களையும் அவரே பொறுப்பேற்று நடத்த வேண்டும்.

இந்தத் தொழிலின் வியாபாரத்தைச் செவ்வை யாய் நடத்துவதற்காக ஒரு தகுந்த வியாபாரக் கம் பெனியை எஜெண்டாக நியமித்துக் கொள்ளவேண்டும்.

நான் நினைத்திருக்கிறவைகளைவிடப் பலமான கம்பெனிகளை வைத்து நடத்தி நிறைவேற்றும் பம் பாய் வர்த்தகர்களுக்கு நான் சொல்லுவது கேவலம் மூலதாரமா யிருக்கும். நான் சொல்லுகிறவைகள் இப் படி நிர்வகித்து நிறைவேற்றுதவர்களுக்கு ஒக்கும். சங் கத்தில் சரியான மனுஷர்க ளில்லாமலும் மானேஜிங் எஜெண்டுக ளில்லாமலும், தொழிலை நடத்தும் மானே ஜர் செய்யும் காரியங்களில் நல்லெண்ணத்துடன் அனுவசியமாய் பிரவேசித்து, நஷ்டப்படுத்தும் யோக்கி யதை யற்ற டயாக்டர்களால் நல்ல பலன் கொடுக்கக் கூடிய முயற்சிகள் தவறிப் போவதைக் கண்டிருப்பதி னால், இதைத் துக்கத்துடன் சொல்ல நேரிடுகிறது.

நமக்குக் கடைசியாய் முக்கியமாக வேண்டி யிருப் பது எந்தச் சாமானை நாம் செய்கிறோமோ அதைச் சீக்கிரம் இலகுவாய் விற்கவேண்டியது. நமக்கு நல்ல நிபுணர் உதவி இருந்தாலும், வேண்டுமான முதல் இருந்தாலும், திறமையான சங்கங்கள் ஏற்பட் டிருந்தாலும், மானேஜிங் எஜெண்டுகள் கிடைத்திருந் தாலும், நாம் செய்த சாமான்களைச் சீக்கிரம் லாபம் தாக்தக்க விலைக்கு விற்க முடியாமற்போனால் எல்லா

வியாபார முயற்சிகளும் தரக்கூடிய பலனைத் தரா. ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் சாமான்களை நாம் நமது தேசத்திலேயே செய்யும்போது, நமக்கு அநேகக் கஷ்டங்கள் எதிர்ப்படும். அவைகளில் முக்கியமானது, அன்னியச் சாமான்கள் நம் சாமான்களோடு போட்டி செய்வது. நாம் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகளைச் செய்யும்போது, ஐரோப்பிய வர்த்தகர்கள் தாங்கள் செய்யும் சாமான்களை இவ்விடத்திய விலைக்குத் தாழ்ந்து விற்று, இங்கே செய்யப்படும் அந்தச் சாமான்களை விலை போகாமற் செய்துவிடுவார்கள். அப்போது ஒருவிதமான காப்பு அல்லது சம்ரட்சணை இருந்தாலன்றி நாம் செய்யும் சாமான்களுக்கு விலைபோக இடம் கண்டுபிடிப்பது கஷ்டமாகிவிடும். நாம் இந்தத் தேசத்தில் செய்யக்கூடிய சாமான்கள் அன்னிய தேசத்தில் விலை போக வெகுகாலம் பிடிக்கும். உள்நாட்டிலும் அவைகள் விலை போகவேண்டுமானால் அன்னியர் சாமான்களின் போட்டியால் அவைகள் தடைப்படாமலிருக்க வேண்டும். இந்த அன்னியச் சாமான்கள் அவைகளுக்குள்ள ஏராளமான மூலதன உதவியால் நமது சாமான்கள் தலையெடுக்கவொட்டாமல் அவைகளுக்குக் குறைந்த விலைக்கு விற்று, சமயம் வாய்க்கும்போது, ஒன்றுக்கிரண்டாய் லாபம் தரத்தக்க விதமாய் உயர்ந்த விலைக்கு விற்கப்படும்.

இது ஒரு முக்கியமான கேள்வியானதால் அங்கங்கேயுள்ள கைத்தொழிலுக்குக் கவர்ன்மெண்ட் சம்ரட்சணை செய்கிறவரையில், இந்தக் கான்பரென்ஸ் மட்டு

மல்ல, தேசத்தின் கைத்தொழில் வளப்பத்தில் அக்கறை வைத்த ஒவ்வொருவரும் சம்ரட்சணை வேண்டுமென்று கலக்கம் செய்யக்கடவர்.

இந்தியாவுக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்த இந்தியாக் கவர்ன்மெண்டுக்குச் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்குமானால், அது தற்காலத்தில் இந்தியாவுக் கவசியமானபடி சம்ரட்சணை செய்ய மறுக்காதென்பது நாமெல்லோரும் அறிந்த விஷயம். ஆனால், நம்முடைய உரிமைகளுக்கு விரோதமாய் வேலை செய்யக்கூடிய உரிமைகள் இருக்கின்றன. ஆகையால் கவர்ன்மெண்டும் ஜனங்களும் சேர்ந்து வேலை செய்தாலன்றி, இந்த விஷயத்தில் திருப்திகரமான முடிவு உண்டாகாது. காப்பு வரி விதிக்கும் பிரசினையானது மிகவும் கடினமானது. அதைத் தயக்கமில்லாமலும் அவநம்பிக்கை இல்லாமலும் நான் குறிப்பிடவில்லை. ஆனால், அதைப்பற்றி நாம் செவ்வையாய்க் கவனித்தாலொழிய சில தொழில்களுக்கு நன்மை செய்யவேண்டி வேறு சில வியாபார விஷயங்களில் அனர்த்தத்தை வேண்டுகிறவர்களாவோம்.

இந்தியாவுக்குக் காப்பு வரி எப்படி விதித்தால் நன்மை செய்வதாகுமென்று கவனிக்கும்படி, உத்தியோகஸ்தரும் உத்தியோகம் செய்யாமல் வியாபாரத்தில் பழக்கமிருக்கிறவர்களும் சேர்ந்த கமிஷன் ஒன்று நியமிக்க, கவர்ன்மெண்டை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும். நாம் நம் தொழிலைக் காப்பு செய்யத்தக்க சட்டம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்கு முன்னால், இந்த விஷயம் செவ்வையாய் நிச்சயிக்கப்

படவேண்டும். நம்முடைய தலைவர்கள் இந்தப் பிரஸ்னையைக் கவனிக்கவேண்டியது அவர்களைப் பொறுத்த முதற்கடமை. தக்க யோசனை செய்யப்பட்டு, நாம் காப்பு வரியைப் பெறுவோமானால், தேசத்தினுடைய தொழிலபிவிர்த்திக்கு ஒரு பெருந்தூண்டுதல் உண்டாகும்.

இன்னொரு விஷயம் நாம் கவர்ன்மெண்டார் தங்கள் உத்தியோகஸ்தர்களைக் கண்டிப்பாய்க் கவனிக்கச் சொல்லிக் கேட்கக்கூடியது என்னவென்றால், அவர்களுக்கு வேண்டிய சாமான்களை தேசத்தில் அங்கங்கேயுள்ள தொழிலாளிகளிடத்தில் வாங்கவேண்டியது. இப்படி வாங்குவதில் இரண்டு விஷயங்களை மட்டும் உத்தியோகஸ்தர்கள் பார்க்கவேண்டும். இறக்குமதியாகும் சாமான்களைப் போல தேசத்திற் செய்யப்படும் சாமான்கள் இருக்கின்றனவா? அவைகள் விற்கின்ற விலைக்கே இவைகள் விற்கின்றனவா? என்று பார்க்க வேண்டும்.

கவர்ன்மெண்ட் அனுஷ்டிக்கவேண்டிய நிலைமை நமது நன்மையைக் கோரிச் சும்மா இருத்தல் அல்ல. ஒத்தாசை செய்வோமென்று கண் மூடித்தனமாய்ச் சொல்லி அனுஷ்டானத்தில் நன்மை செய்வதுமல்ல. கவர்ன்மெண்ட் தாங்குவோமென்று சொல்லி, முழு அதிகாரத்தையுங் கொண்டு, அவசியமானால் சட்டமும் செய்து, கொடுக்கும் உறுதியைத் தவிர வேறு எவ்வித உறுதியாலும் நாம் திருப்தி யடையக்கூடாது. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் குறிப்பில்லாத வாக்குறுதிகளைப் பல பேர் பல விதமாக அர்த்தம் செய்வார்கள்.

கவர்ன்மெண்டானது இத்தேசத்துத் தொழில் முயற்சிகளை நடத்தும் விதத்துக்கு உதாரணம் சொல்கிறேன். கவர்ன்மெண்டுக்குத் தங்களுடைய ரயில்வேக்கு சில வருஷங்களுக்கு முன்னால் அநேக சாமான்கள் வேண்டியிருக்க, இந்தியத் தொழில் முயற்சி செய்யும் கம்பெனி யொன்று அவைகளைச் செய்து கொடுப்பதாகச் சொல்லிற்று. இங்கிலீஷ் தொழிலாளிகளைப் போல ஸ்தலத் தொழிலாளிகளும் தங்கள் சாமான்களைச் சோதிக்கச் சம்மதிப்பார்களோ என்று கேட்க, அதற்கு ஸ்தலத் தொழிலாளிகள் சரியென்று சொன்னார்கள். அப்போது ஆங்கிலேயத் தொழிலாளிகளுக்குக் கொடுக்கச் சம்மதித்த விலையை இங்கே கொடுத்து வாங்கக் கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களென்று நம்பக்கூடும்.

ஆனால், உண்மையில், இப்படிச் செய்வதற்குப் பதிலாக இறக்குமதியான சாமான்களுக்குக் கொடுத்த விலையை விட உள்நாட்டுச் சாமான்களுக்கு நூற்றுக்கு ஐந்து குறைத்துக் கொடுப்பதாகக் கவர்ன்மெண்டார் சொன்னார்கள்.

இங்கிலாந்தில் இந்தியா ஆபீஸோடு சேர்ந்திருக்கும் பிசாசுபோன்ற பெரும் ஸ்டோர் டிபார்ட்மெண்டை நிறுத்திவிட நாம் கலக்கம் செய்யவேண்டும். இந்த ஸ்டோர் டிபார்மெண்ட் ஸ்தாபிக்க ஆரம்பித்தபோது, இந்தியாவில் கவர்ன்மெண்டுக்கு வேண்டிய சாமான்கள் அகப்படாமல் நிலைமைகள் வேறாக இருந்தன. இப்போது இந்தியாவில் நூற்றுக்கணக்கான நல்ல பெயருள்ள கம்பெனிகளிருந்து இந்தியாக் கவர்ன்

மெண்டுக்கு வேண்டியவைகளைச் செய்து கொடுக்கத் தயாரா யிருக்கின்றன. இந்த டிபார்ட்மெண்டை எடுத்துவிடுவதினால் கிடைக்கக்கூடிய பணமிகுதியைப் பார்க்கும்போது, இந்தியாக் கவர்ன்மெண்டுக்கு இந்தியாவிலுள்ள போட்டியும் சிப்பந்திகளும் இப்போது இந்தியாவில் சாமான்கள் எவ்வளவு சாசமாய்க் கிடைக்கின்றனவோ அப்படிக் கிடைக்கும்படிச் செய்யப் போதுமானதா யிருக்கும்.

கவர்ன்மெண்டுக்கு வேண்டிய சாமான்களை ஸ்தலத்தில் வாங்கவேண்டிய விஷயத்தில் கவர்ன்மெண்டின் நோக்கத்தைக் காட்டுவதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்ல அனுமதி கேட்கிறேன்.

பொது உபயோகத்துக்காக வேண்டிய சாமான்களை வாங்குவதற்கு, சென்ற அக்டோபர் மாதம் 29-ந் தேதி இந்தியாக் கவர்ன்மெண்ட் சில புது ஒழுங்குகள் செய்தார்கள். டைரக்டர் ஜெனரல் ஆப் ஸ்டோர்ஸ் வழியாய் இங்கிலாந்திலிருந்து ஒரு சாமானை வாங்கவேண்டியதாய், அதனால் பொது ஊழியத்துக்குச் அதிகமான தொந்தரவு நேரிடுகிறதாயிருக்கும்போதும், அல்லது அந்த ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட் வழியாய் வாங்கவேண்டியதை இந்தியாவில் தாமசமில்லாமல் வாங்கக்கூடியதாயிருந்து அதனால் செலவை மிகுக்கக் கூடியதாயிருக்கும்போதும், 13-வது ரூலுக்கடங்கி இந்தியாவிலேயே அது வாங்கப்படலாம்; வாங்கவேண்டிய சாமானுக்கு உத்தரவு கொடுக்கும்போது, அந்தச் சாமான் செய்து தயாராயிருக்கவேண்டும்; ஆனால், இந்தியாவில் வாங்கப்படும் சாமான் விலையில், 50 ரூபாய்

க்கு உயர்ந்திருக்கும்போது, அதை வாங்க உத்தேசித்திருக்கும் உத்தியோகஸ்தர் அப்படி வாங்குவதற்குக் காரணம் இன்னதென்று எழுதிவைக்கவேண்டும்; இப்படி எழுதிவைத்ததானது எக்ஸாமினர் ஆப் அக்கௌன்ட்ஸுக்காவது அல்லது சூபர்வைஸிங் ஆபீஸருக்காவது வேண்டினபோது, உபயோகப்படுவதாயிருக்கவேண்டும். மேற்சொன்ன உத்தரவை நாம் கவனித்து வாசிக்கும்போது "அதிகமான தொந்தரவு நேரிடும்போது" என்று கண்டிருப்பதைப் பார்ப்போம். (அதில் "அதிகமான" என்பது முக்கியமான வார்த்தை.) 50 ரூபாய்க் கதிகமாய் விலைகொடுக்கும் போதும், இந்தியாவில் வாங்குவதினால் செலவுமிகுமென்று தோன்றும்போதும், அப்படி வாங்கும் உத்தியோகஸ்தர் இந்தியாவில் வாங்குவதற்குக் காரணம் இன்னதென்று எழுதிவைக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியத் தொழிலின் அபிவிர்த்திக்காக அன்னியருடைய (இங்கிலீஷ்) மூலதனத்தை உபயோகப்படுத்துவதைக கண்டித்து, இந்தியப் பத்திரிகைகளில் எழுதுவதையும் பொதுமேடைகளில் பேசுவதையும் கண்டிருக்கிறோம். ஆனால், அப்படிக் கண்டிக்கிறவர்கள் இந்த விஷயம் என்னென்ன வழிகளில் பொருத்தமுள்ளதோ அந்த வழிகளையெல்லாம் கவனிக்காமல் கண்டிக்கின்றனவென்று தெரிகிறது. முதலாவது, ஒரு தேசத்தில் சாவதானமும் க்ஷேமமும் குடிகொண்டிருந்தாலன்றி அன்னியர் மூலதனம் அங்கு

வராது. இரண்டாவது, மற்றத் தேசங்களில் தொழிலபிவிர்த்திக்கென்று அன்னியருடைய மூலதனத்தை அபேக்ஷித்தல் சகஜம். இந்தியாவிலோ, பிரிட்டிஷ் மூலதனம் நம் தொழில்களில் அக்கரை பாராட்டி அவைகள் விர்த்தியாவதில் முக்கியமான பங்கு பெறவேண்டுமென்று கோருவது நமக்கு விவேகமாகும். இந்தியாவில் தொழில் முயற்சிகள் நிறைவேறு மென்பதற்குத் திருஷ்டாந்தமாக அநேகந் தொழில்கள் பெரும் முதலைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. இவைகள் அநேகமாய்ப் பம்பாயில் சிலவற்றைத் தவிர பிரிட்டிஷ் மூலதனத்தாலும் சுறுசுறுப்பாலும் நடத்தப்பட்டு நிறைவேறி வருகின்றனவென்பது நமக்கு ஒரு பெரும் நிந்தையாயிருக்கின்றது. இவைகள் முதலில் ஆரம்பித்தபோது நமது தேசத்தார் இப்பேர்ப்பட்ட முயற்சிகளை அறியாமலிருந்தது உண்மையே. ஆனல், அந்த நிலைமை சீக்கிரம் மாறிவருகின்றது. கூடுமானவரையில் நம்முடைய முயற்சிகளில் அவர்களைப்போல நாமும் முயற்சி செய்து, நமது தொழில்களை முன்னுக்குக் கொண்டு வருவது நமது குறியாயும் முயற்சியாயு மிருக்க வேண்டும். நம்முடைய தொழில்களில் அவர்களுக்கு நேரான அக்கரை யுண்டாகும்படிச் செய்வது நாம் பலன் பெறுவதற்குக் காரணமாகும். ஏனெனில், அவர்களுடைய ஒத்தாசையும் அபிமானமுமில்லாமல் நாம் செய்யும் தொழில்கள் நிறைவேறவாவது அவைகள் நிறைவேறுதற் கவசியமானபடி காப்பு வரி விதித்தலாவது சாத்தியமாகாது.

நான் இதுவரையில் சொன்னதெல்லாம் பெரும் முதல் வேண்டியிருக்கும் தொழில்களைப்பற்றினதாகும். ஆனால், வேறு சில்லரைத் தொழில்களுமிருக்கின்றன. தோல் பதனிடல், சாயமிடல், ஸோப் தீப்பெட்டி செய்தல், சர்க்கரை செய்தல், இவைபோன்ற தொழில்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் முதல் 2 லக்ஷம் வரை மூலதனமிருந்தால் போதும். மூன்றல்லது நாலு வருஷத்துக்கு முன்னால் ஆரம்பமான சுதேசிய நிகழ்ச்சியினால் இவைகளுக்குச் சிறிது பலமுண்டாயிருக்கின்றது. ஆனால், இவைகள் மத்திய வகுப்பாரிடமிருந்து போதுமான ஆதரவு பெறுததினால் நாம் கோருகிறவளவு நிறைவேறவில்லை. நம் தேசத்தில் பலபேர் இந்தத் தொழில்கள் விஷயமாய் ஊக்கங்காட்டி வந்தாலும், அது உதட்டு ஊக்கமே யன்றி மனப்பூர்வமானதல்ல. சுதேசியத்தைப் பற்றியும் இந்தியத் தொழில்களை மீட்பதைப்பற்றியும் புகழுகிறவர்கள் பலர் இருந்தாலும், அப்பேர்ப்பட்ட முயற்சிகளுக்குப் பண உதவி செய்யும்படியான அவ்வளவு நிலைமைக்கு அவர்களுடைய புகழ்ச்சி உயரவில்லை. நம்முடைய மத்திய தரவகுப்பாரில் நல்ல நிலைமையிலிருப்பவர்கள் வக்கீல் தொழில் செய்கிறவர்கள். அவர்கள் அந்த மத்திய வகுப்பாருக்கு படிப்பினால் இயற்கையான தலைவர்களாயிருக்கிறார்கள். கௌன்ஸில்களிலும் முனிசிபாலிடிகளிலும் பொது ஸ்தாபனங்களனைத்திலும் நமக்குப் பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். தொழில் முயற்சிகளைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதில் முன்னிற்கும் இவர்கள், அந்தத் தொழில்களில் பணம் போடுவதற்காக ஒரு வருஷத்து வரும்படியில் ஒரு

மாசம் வருவதை உபயோகிப்பார்களானல், தொழில்களுக்காக மூலதனம் பெறுவதில் கஷ்டமிருக்காது. சட்டவாதம் செய்வதைத் தொழிலாக உடையவர்கள் பலர் என்னுடைய நேரான நெருங்கிய நண்பர்கள். நான் அவர்கள் பேரில் சொல்லும் குற்றத்தைத் தப்பாகக் கிரகிக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர்களும் நான் சொல்லுவதை உண்மையல்லவென்று தள்ளமாட்டார்கள்.

சுதேசிய உணர்ச்சி சமீபத்தில் புதிதாய்க் கிளம்பியதினல் சிறு தொழில்கள் கிளம்பி விர்த்தியாகிப் பெருகுவதற்குக் காரணமுண்டாயிருக்கின்றது. நம்முடைய இந்த தேசத்தில் புராதன காலமுதல் போன நூற்றாண்டு மத்திவரையில், நமது தொழிலாளிகளும் வேலைக்காரர்களும் அவர்களுடைய வேலைத்திறமைக்கு உலகத்தில் பேர்பெற்றிருந்தார்கள். அவர்கள் செய்த சாமான்கள் அன்னிய தேசங்களில் கிராக்கி பெற்றிருந்தன. ஆனல் போன நூற்றாண்டின் மத்தி முதல் மேல் நாடுகளில் தொழில் செய்யும் நீராவி இயந்திரம் முற்றுப் பெற்று, கைத்தொழில் செய்யும் சாஸ்திரமானது அபிவிர்த்தியானது முதல் நமது கைத்தொழில்கள் வரவர மெலிந்துபோய், தொழில் முயற்சிகள் நசிக்கத் தலைப்பட்டன. மேல்நாடுகளில் கைத்தொழில் செய்யும் இயந்திரமானது முற்றி வருகிறபடியால், இங்கே கையினற் செய்யப்படும் தொழில்களும் இங்கே கைவல்லோரும் தொழிலாளிகளும் சொற்பமான ஜீவனம் செய்வதுகூட சாத்தியமில்லாமற் போய்விட்டது. தொழில்களும் இறந்துபோயின அல்லது குற்றுயிரா யிருக்கின்றன.

இது எல்லாருக்கும் தெரியும். ஆனால் நாம் சொல்லுவ தென்னவென்றால், நமது தொழிலாளிகளும் கலைவல் லோரும் சிறிதும் படிப்பில்லாமல் தங்கள் தொழிலுக்கு வேண்டிய மூலதனம் கிடைத்தாலுங்கூடச் சாமான் செய்வதற்குப் பிடிக்கும் செலவைக் குறைக்கும்படி யான இயந்திரோபாயங்களைத் தெரியாதவர்களா யிருக் கிறார்கள். அவர்கள் பழைய மாதிரியை அனுஷ்டிக்கிற வர்களாயிருக்கிறபடியால், அவர்களுக்குள் படிப்பு பரவினா லன்றி இயந்திரோபாயங்கள் சீர்ப்படுவதை அவர்கள் ஒருக்காலும் அறியமாட்டார்கள். அப்படி இயந்திரோபாயங்கள் சீர்ப்படுவதால் மேல்நாடுகளில் இயந்திரங்களை உபயோகப்படுத்திச் செய்யும் சாமான்க ளோடு போட்டி செய்தல் எளிதாகிறது. என்னுடைய 25 வருஷ கால அநுபோகத்துக்குள்ளாகப் பற்பல வகுப்புத் தொழிலாளிகளைப் பார்த்திருக்கிறேன். அவர் கள் தத்தமக்குரிய வேலைகளில் இயற்கையான அறிவும் பரம்பரையாய்ச் சம்பாதித்த திறமையுமுள்ளவர்கள். அவர்களுக்குத் திறமையான மேல் விசாரணை செய் வோர் கிடைக்கும் பட்சத்தில், மேல்நாடுகளில் உயர்ந்த வேலைக்காரர்கள் செய்யும் வேலையைவிடத் தாழ்ந்த வேலை செய்கிறவர்க ளல்ல. ஆனால், அவர்கள் முழுதும் படிக்காதவர்களாய்த் தாங்கள் செய்யும் தொழிலைப் பற்றி உலகத்தில் என்ன புதிதான உபாயங்கள் தோன்றி யிருந்தாலும், அவைகளைத் தெரிந்து கொள் ளச் சக்தியற்றவர்களா யிருக்கிறார்கள். தலைமுறைக ளாகக் காலம் மீறிப்போன வழிகளில் வேலை செய்வதில் திருப்தியுள்ளவர்களாய், அவர்கள் ஆயுளெல்லாம் மாற

வாவது, முன்னேக்கிச் செல்லவாவது கூடாதவர்களா யிருக்கிறார்கள். மற்றத் தேசங்களில் அவர்களைப் போலிருக்கும் வேலைக்காரர்கள் பல தலைமுறைகளாகப் பெற்றிருக்கும் படிப்பானது அவர்களுக் கில்லாமல் தடைப்பட்டிருக்கிறார்கள். இது அதிருப்திகரமான நிலைமை யென் றுணர்ந்து, இந்தியாக் கவர்ன்மெண்டார் கல்வியைப்பற்றிக் கவனிப்பதற்காக ஒரு தனியான இலாகாவைச் சிருஷ்டித் திருக்கிறார்கள். ஆகையினால், கீழ்த்தரப் படிப்பை விசாலப்படுத்திக் கட்டாயமாக்குவ தற்கும் காலம் வந்துவிட்டது.

இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு அம்ஸத்தில் விசேஷ வித்தியாசமிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இங்கே நூற்றுக்கு 95 பேர் எழுத வாசிக்கத் தெரியாம லிருக்க, அங்கே நூற்றுக்கு 95 பேர் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். இதனாலேயே அந்த தேசத்துக்கும் இந்த தேசத்துக்கும் வியாபார விர்த்தியிலுள்ள வித்தி யாசமென்று நான் நன்றாய் அறிவேன்.

நான் இப்போது தொழிலபிவிர்த்தியில் ஒரு பாக மாயிராத விஷயத்தைப்பற்றிப் பேசப் போகிறேன். ஆனால், அது இந்த விஷயத்துடன் கட்டுப்பட்டு நெருங் கிச் சம்பந்தப்பட் டிருப்பதால், இவ்விதமாய் நன்றாய்ச் சிந்திக்கப்பட்ட யோசனையின் ஒரு பாகமாகக் கருதப் படவேண்டும். அதாவது, புது ரயில்வேக்களைப் போடு வதையும் இருக்கிறவைகளை விசாலப்படுத்துவதையும் பற்றிப் பேசுகிறேன்.

இந்த தேசத்தில் வெகுகாலமாய்க் கவர்ன்மெண்ட் அதனுடைய ஏஜென்ஸி செல்லுகிறவரையில், ரயிற்பாதை

களில் முக்கியமானவற்றைப் போட்டுக்கொண்டுபோவ தாக ஒரே மாதிரியாகத் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இந்த முக்கியமான ரயிற்பாதைகள் தேசத்தின் வியாபாரத்துக்கு இரத்த நாடிகள் போலாகி லாபகரமான நல்ல ஸ்திதியி லிருப்பதால் தேசத்துக்குப் பிரதான மான சொத்துக்களாயு மிருக்கின்றன. ரயில்வே போக்குவரத்துகளின் அபிவிர்த்தியைப்பற்றின இந்தப் பிரகமானது கவர்ன்மெண்டால் நன்றாய்க் கவனிக்கப் பட்டு வருவதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்.

நான் இப்போது உங்களுடைய கவனத்தைக் கோருவது எதற்கெனில், முக்கியமான ரயிற்பாதை களுக்கு உதவியாக சில்லரை ரயிற்பாதைகள் போடுவ தற்குத் தேவையான இடமிருக்கிறதென்பதற்கு. முக் கியமான ரயில்வேக்கள் தேசத்தில் பிரதானமான பட்டினங்களுக்கும் துறைமுகங்களுக்கும் போக்கு வரத்து ஸ்தாபித்து, இறக்குமதி ஏற்றுமதி இரண்டும் செவ்வையாய் நடக்கவேண்டுமென்பதை நோக்கமாய்க் கொண்டன. இவைகள் நடுவிலுள்ள அநேக விசால மான பிரதேசங்களை விட்டுவிடுகிறபடியால், அவை களில் நயமாய்ப் போடப்படும் சில்லரை ரயில்வேக் களுக்கு விசாலமான இடந்தந்து, பெரிய பிராட்கேஜ் பாதைகளுக்குப் போதுமான வியாபார வசதிகளில்லாம லிருப்பதால், அவைகளில் இந்தச் சில்லரைப் பாதை களால் இந்த வசதிகள் உண்டாக்கப்பட வேண்டும்.

இந்தியாவில் புதைத்துக் கிடக்கும் லக்ஷக்கணக் கான திரவியங்களைக் கொண்டுவரப் போதுமான நிபந் தனைகளின் பேரில் இந்த சில்லரைப் பாதைகளைப்போடும்

படிச் செய்யவேண்டும். இந்தச் சில்லரைப் பாதைகள் போடுதற்குக் கவர்ன்மெண்ட் சமீபத்திற் செய்திருக்கும் ஒழுங்குகள் பழைய ஒழுங்குகளைவிடத் தாராளமா யுள்ளன.

என்னுடைய அபிப்பிராயப்படி இவைகள் போதா. சில்லரை ரயில்வேக்கள் பிரதானமான ரயில்வேக்க ளுடன் கலந்து அங்கிருந்து போகவேண்டிய சாமான் கள் போதுமான தூரம் போனால், அப்போது ரிபேட் (Rebate) நிபந்தனைகளால் இவ்வளவு பணத்துக்குக் குறையாமல் கிடைக்கக்கூடுமென்ற நிச்சயமுண்டா கின்றது. ஆனால், இந்தச் சில்லரை ரயில்வேக்களால் அனுப்பப்படும் சாமான்கள் போகவேண்டிய ஊரல்லது துறைமுகத்துக்குச் சமீபத்தில் போடப்பட்டதா யிருக் கும்போது, வேறு விதமாயிருக்கின்றது.

அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இன்னும் அதி கம் வேண்டும். நூற்றுக்கு நாலுவட்டி கொடுப்பதாக வும் அதற்கு மேற்பட்டால் கிடைப்பதைப் பாகம்பண் ணிக்கொள்வதாகவும் உறுதி பெற்றுக்கொண்டு, டிஸ்டி ரிக்ட் போர்ட்கள் போட்ட சில்லரை ரயில்வேக்கள் பல விருக்கின்றன. ஆனால், ஒவ்வொரு டிஸ்டிரிக்ட் போர் டும் இப்போது சட்டப்படி அது வசூல் செய்யக் கூடிய வரிகளின் எல்லைக்குள்ளாக அந்த உறுதியைப் பெற்று, பிடிக்கும் செலவைச் செய்யச் சக்தி கொண்ட தாய் நினைக்கக்கூடவில்லை. இவ்விதமாய் கவர்ன் மெண்ட் கொடுக்கும் உறுதியானது நூற்றுக்கு ஐந்தாக உயரும் பட்சத்தில், சில்லரைக் கிளை ரயிற் பாதைகள் சில நிபந்தனைகளின் பேரில் போடத் தைரியமுண்டான

போதிலும், நூற்றுக்கு நாலுவட்டி உறுதியைப் பெற்ற டிஸ்டிரிக்ட் போர்ட்களுடைய நிலைமையைக் கெடுத்து விடும்.

டிஸ்டிரிக்ட் போர்டுகள் அவைகளுடைய ஜில்லாக்களில் ரயில் போடத் தைரியமடையுமாறு உறுதி கிடைத்தால் அப்படி சில்லரை ரயில்கள் நாரோகேஜில் (Narrow Gauge) போடப்படுமென்பதில் சந்தேகமில்லை. அத்தகைய ஸ்தல ஸ்தாபனங்கள் ஸ்தலத்துக்கு வேண்டும் வேண்டாதனவைகளைப்பற்றி நிதானிக்க வல்லவைகளாயிருக்க, பணம் செலவு செய்தால் அதற்கு வட்டி வருமோ வராதோ என்பது வேறு விதமாயிருக்கின்றது.

சில வருஷங்களுக்கு முன்னால், இப்படிப்பட்ட சில்லரைப் பாதைகள் போடுவதில் உறுதி கிடைக்கும்படியாக வரி வசூல் செய்வதற்கு ஒரு சட்டம் கவர்ன்மெண்டின் கவனத்தி லிருந்தது. அப்படிப்பட்ட சட்டம் அவசியமென்பது என்னுடைய அபிப்பிராயம். அந்தச் சட்டத்தினுடைய நிபந்தனைகள் அம்மாதிரி ஒரு செஸ் வசூல் செய்ய அதிகாரம் கொடுப்பதோடு, அது போட்ட ரயிற் பாதைகளி லிருந்து வட்டிக்கு மிஞ்சி அதிகப் பணம் கிடைத்து, அதில் போர்டுக்குரிய பாகத்திலிருந்து கிடைக்கும் பணத்தை அந்த செஸ்ஸுக்கு எதிரிடையாய் எடுத்துவைக்கும்படி செய்யப்படவேண்டும்.

ஆனால், இந்த ஆக்டானது கிளைப் பாதைகள் சம்பந்தமான நிபந்தனைகளுக்கு ஒத்துவரும்படியாய்

டிஸ்டிரிக்ட் போர்டுக்குக் கொடுக்கப்படும் உறுதியை நூற்றுக்கு ஐந்தாக உயர்த்துவ தவசியம்.

இதுவரையில் ஜனங்கள் 3 அல்லது 3½ வட்டி போதுமென்றிருந்தவர்கள் தங்கள் பணத்துக்கு அதிக வட்டி வேண்டும்படியாக, பணத்தின் நிலைமை மாறியிருப்பது இங்குகூடியிருக்கும் அநேகருக்குத் தெரியும். இந்த உணர்ச்சிக்குக் காரணமாக பொருளாதார நிலைமைகள் எவ்விதம் மாறினவென்று சொல்லுதல் என்னுடைய கடமையல்ல. ஆனால், அது இந்தியாவில் மட்டும் தோன்றினதல்ல. ஆனால், இதுவரையில் கவர்ன்மெண்டுக்கு இப்போதைவிடச் சுளுவாய்க் கடன் வாங்குவது சாத்தியமாயிருந்தது போல, டிஸ்டிரிக்ட் போர்ட் நூற்றுக்கு நாலுவீதம் வட்டி கொடுப்பதாக உறுதி சொல்லும் பட்சத்தில் ஜனங்கள் கடன் கொடுக்கத் தயாராயிருந்தார்கள். ஆனால், அந்தக் காலம் போய் இப்போது இன்னும் தாராளமான நிபந்தனைகளை டிஸ்டிரிக்ட் போர்ட் கொடுப்பது அவசியமாகி விட்டது.

ஆனால், புதுக் கிளைரயிற்பாதைகள் சம்பந்தமாய்ச் செய்த நிபந்தனைகள் டிஸ்டிரிக்ட் போர்ட் போடும் பாதைகளை எப்படிப் பாதிக்குமென்று கருதாமற் போனபடியால், நமது புதிய கமர்ஷியல் மெம்பரையும் ரயில்வே போர்டையும் இதைப்பற்றி மறுபடியும் கவனிக்கக் கேட்டுக்கொள்கிறேன். டிஸ்டிரிக்ட் போர்ட் ரயில்வேக்களும் பிரதான ரயில்வேக்களும் கலந்து வியாபாரம் செய்வதில், டிஸ்டிரிக்ட் போர்ட் கொடுக்கும் உறுதியையும் பிரதான ரயில்வேக்களின் ரிபேட்

நிபந்தனையையும் ஏதோ ஒரு விதமாய் ஒன்றாய்ச் சேர்த்தல் சாத்தியமா யிருக்கக்கூடும்.

ரயில்வே போர்டை வியாபார ஸ்தனைக் கருதி, அந்த போர்டில் பினான்ஷியல், பணவரத்துச் செலவு, மெம்பர் ஒருவர் அல்லது வியாபார சமர்த்தர் ஒருவர் மெம்பராயிருக்க விரும்புகிறேன். இப்போதிருக்கிறபடி பார்த்தால், ரயில்வே போர்டானது இருப்புப் பாதைகளைப் போடுவதிலும் நிர்வகிப்பதிலும் சமர்த்தர்கள் அடங்கிய போர்ட். ஆனால், ரயிற்பாதைகள் வியாபார உரிமைகளிலிருந்து பிரிக்கமுடியாமலிருப்பதால், அதில் ஒரு பினான்ஷியல் மெம்பர் அல்லது வியாபார சமர்த்தர் மெம்பரா யிருத்தல் அவசியம். அப்பேர்ப்பட்ட அறிவில்லாமல் வியாபார உரிமைகள் தடைப்பட்டதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.

மத்திய மாகாணத்தில் ஒரு மதிப்புப் பெற்ற தொழில் அதை ஆதரித்தால் வளரவும் இல்லாவிட்டால் அழிந்து போகவுங்கூடின நிலைமையில் இருக்கின்றது. இது மாங்கனீஸ் (வெட்டை நாகம்) மண், இந்தத் தொழில் சில வருஷங்களுக்கு முன்னதாகத் தான் ஆரம்பிக்கப்பட்டது. வெகு காலம் ஆராய்ச்சி செய்து பிறகு நிலைத்தது. இதற்குப் போட்டி ருஷியா காக்கஸஸ் மலையிலிருந்து வருஷம் 6 அல்லது 7 லக்ஷம் டன் நிறையுள்ள மாங்கனீஸ் எடுக்கும் தொழிலெனச் சொல்லப்படுகிறது. இது அடுத்த 20, அல்லது 30 வருஷத்துக்குக் குறையாமல் நடக்குமென்று சொல்லப்படுகிறது. ஆகையால், இந்தியாவின் மாங்கனீஸ் மண்ணுக்குப்போட்டி இருந்து கொண்டிருக்கும். குணத்தில்

இந்திய மாங்கனீஸ் உயர்ந்தியெனச் சொல்லப்படுகிறது. அவசியமான போக்குவரத்து வசதிகள் கிடைக்குமானால், ஐரோப்பிய மார்க்கெட்டுகளில் அது செவ்வையாய் விற்கப்படுமென்று சொல்லப்படுகிறது. ஆனாலும், உண்மையில் இந்திய மாங்கனீஸானது வெளியேற்றத்தில் குறைந்துகொண்டு வருகின்றது. சென்ற மூன்று வருஷங்களாக ருஷியாவிலுள்ள நமது போட்டிக்காரர்கள் முன் வந்துகொண்டிருக்கிறார்கள்.

1908-ம் வருஷம் ஜனவரி முதல் செப்டம்பர் வரையில் இங்கிலாந்துக்குப் போன ருஷிய மாங்கனீஸ் 2,86,416 டன் நிறையுள்ளது. 1909-ம் வருஷத்தில் அதே காலத்தில் 4,26, 488 டன் நிறையுள்ளதாகி, 1910-ம் வருஷம் செப்டம்பர் 30-ந் தேதிக்குள் 5,85,205 டன் நிறையுள்ளதாக அதிகமாய்விட்டது. ஆகையால், மூன்று வருஷத்தில் ருஷியாவினுடைய வியாபாரமானது ஒன்றிற்கு இரண்டாக அதிகப்பட்டுப் போயிற்று. இப்படி அதிகமானதற்குக் காரணம் வியாபாரத்தை ஆதரித்து நிறுத்துவதற்காக ருஷியாக் கவர்ன்மெண்ட் அந்த உலோகத்தை வெளியேற்றும் செலவைக் குறைத்திருக்கிறது.

அப்படியே இந்தியாவின் வியாபாரத்தின் ஒரு பாகத்தையாவது நிலை நிறுத்தவேண்டுமானால் அது விளையுமிடத்திலிருந்து ஏற்றுமதியாகும் துறைமுகத்துக்குப் போகும் கூலியைக்குறைப்பது அவசியம். இப்படிச் செய்தால் சம்பந்தப்பட்ட ரயில்வேக்களுக்கு நஷ்டமுண்டாகாது. ஏனெனில், அவைகளில் முக்கியமாய் B. N. ரயில்வேயில், ஒன்றுமில்லாமல் திரும்பும்

வண்டிகள் அப்போது மாங்களினைக் கொண்டு போகும்.

நான் முடிக்கிறதற்கு முன்னால், விவசாயத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். அது இந்தியத் தொழில்களில் முக்கியமானவை யென்று நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள். இந்தியாவின் ஜனத்தொகையில் மூன்றி லிரண்டுபாகம் விவசாயத்தைப் பற்றினதாயிருக்கிறது. இந்தியாக் கவர்ன்மெண்டாரும் மாகாணக் கவர்ன்மெண்டார்களும் தற்கால சாஸ்திரப்படி விவசாயத்தைத் திருத்திச் செய்விக்க முயலுகிறார்கள். இந்தியாக் கவர்ன்மெண்டின் கீழ் பூஸாவில் (Puss) சிறப்பா யமைக்கப்பட்ட தளவாடங்களுடன் கூடின சாஸ்திர விவசாய வித்தியாசாலை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. மாகாணக் கவர்ன்மெண்டுகளும் விவசாயத்தில் உயர்தர உபாயங்களின்படி, படிப்புச் சொல்லிக்கொடுக்க விவசாயச் சாலைகள் சோதனைப் பண்ணைகளுடன் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. ஆனால், கவர்ன்மெண்ட் இந்த முயற்சிகளிற் செய்துவரும் செலவுக்குத் தகுந்த பிரயோசனம் உண்டாகுமோ வென்று எனக்குச் சந்தேக மிருக்கின்றது. கீழ் வகுப்பார்களுக்குப் படிப்பே இல்லாததினால் இதுவரையில் குமாஸ்தாக்களாய் உத்தியோகம் பெற்றுவந்த நடுத்தர வகுப்பார் இந்த விவசாயக் காலேஜ்களிற் சேர்ந்து, உயர்தர உபாயங்களின்படி இந்த வித்தையைக் கற்றுக்கொள்வார்கள். ஆனால், கேள்வி என்னவெனில், இந்தச் சிறுவர்கள் இவ்வளவு செலவுக்கிடமாகக் கற்றுக்கொண்ட வித்தையை அநுபோகத்தில் எப்படி உபயோகப்

படுத்துவார்கள்? இந்தியா முழுமையும் அந்தந்தக் குடும்பங்களின் யோக்கியதைக்குத் தக்கபடியும் அவைகளி லடங்கியவர்களுக்குத் தக்கபடியும், 3 முதல் 20 ஏக்கரா வரையில் சிறிய தாக்குகளாக விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. இந்த விவசாயிகள் அவர்களுடைய சொந்த புத்திக்குத் தோன்றியபடி விவசாயம் நடத்தி வருகிறார்கள். ஆரம்பத்தில் அதிகச் செலவு பிடிக்கும்படியான நூதன வழிகளை அனுஷ்டித்து விவசாயம் செய்யச் சொல்லுவது நம்மால் முடியாதபடி கஷ்டமாயிருக்கின்றது. அதிகமாகப் பிடிக்கும் செலவை அவர்கள் ஏற்காமலே அவர்கள் வயல்களில் நூதன வழிகளாயாவது அல்லது சோதனையாகவாவது எதுவும் பிறர் செய்ய அசம்மதமா யிருக்கிறார்களென்று என்னுடைய சொந்த அனுபோகத்தில் அறிவேன். இந்த விவசாயக் காலேஜ்களில் வாசிக்கும் சிறுவர்கள், பொதுவாய்ப் பேசில், சொந்தத்தில் நிலமில்லாதவர்களாயும் அல்லது சிறிது மூலதனத்தைக்கொண்டு சோதனை செய்து பார்க்கவாவது சக்தியில்லாதவர்களாயு மிருக்கிறார்கள். காட்டுப் பூமியைத் தவிர வேறு பூமி விவசாயத்துக்கு யோக்கியமாய்த் தரிசு கிடக்கவில்லை. அல்லது ஸண்டர்பன்ஸ (Sundar bans) போல காலியான காட்டு நிலங்கள் தரிசாய்க் கிடக்கவேண்டும். ஜமீன்தார்களில் ஒருவரேனும் அவர்களுடைய காஸ் (Khos) நிலங்களில் அதிகமான நிலங்களை இந்தச் சிறுவர்களிடத்தில் சோதனை செய்து பார்க்கும்படி கொடுக்கத் தயாராயிருக்கமாட்டார்கள். விவசாயத்தில் உயர்தர உபாயங்களை அனுஷ்டிப்பதால் கிடைக்கும் லாபங்களை அறியும்

படியாகவும், இந்த விவசாயக் கல்விச் சாலைகளில் படித்துத் தேர்ந்தவர்கள் சொல்லும் யோசனையையாவது அவர்கள் செய்யும் செயல்களையாவது உபயோகப் படுத்தவும், விவசாயிகளின் கீழ்த்தரப் படிப்பு என்ற ஒரே வழிதான் இருக்கின்றது. இப்போதுள்ள நிலைமையில் படிப்பைக் கட்டாயமாக்குவதை நான் சொல்ல மாட்டேன். இது அநேக நியாயங்களுக்காக அனுஷ்டிக்கத் தக்கதல்ல. ஆயினும், படிப்பே இல்லாதிருக்கும் வகுப்பாருள் பெரும்பாலும் கீழ்த்தரப் படிப்புப் பரவுகிற வரையில் விவசாயிகளாவது தொழிற்காரர்களாவது விவசாயத்திலாவது தொழில்களிலாவது அபிவிர்த்தியடைவார்களென்றாவது அல்லது முன்னுக்கு வருவார்களென்றாவது நம்பிக்கையில்லை.

இங்கே இந்தப் பொருட்காட்சியை இவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டுவந்து நடத்தின கவர்ன் மெண்டுக்கும் அவர்களோடுகூட உழைத்தவர்களுக்கும் நாம் நன்றி செலுத்தாவிட்டால் நாம் அந்தக் குணத்தில் குறைவுபட்டவர்களாவோம். நன்றி செலுத்தாதது நம்முடைய குறையென்று நமக்குத் துவேஷிகள் சொன்னபோதிலும், அது நமக்குக் குறைவல்ல.

நம்மில் அநேகருக்கு இந்தப் பொருட்காட்சிக்குப் பிடிக்கும் செலவுக்குத் தக்கபடி அதனால் பலனுண்டாகாதென்று சந்தேகம் உண்டாகக்கூடும். ஏனென்றால், பொருட்காட்சியைப் பார்க்கவருகிறவர்கள் அநேகாயிரம் பேருக்குப் படிப்பில்லாமல் அவர்கள் பார்ப்பதை அறிவதற்குச் சக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஆனாலும், இதை ஆரம்பித்து நடத்துகிறவர்க

ருடைய நல்லெண்ணத்தைக்கண்டு அதை யறியவும், ஸர் ஜான்ஹியூவெட்பிர் அவருடைய உத்தியோகஸ்தர்களும் இவ்வளவு தூரம் இதை நிர்வகித்து சித்திபெற முயன்றதை அறியவும் சக்தர்களா யிருக்கிறோம்.

இந்தப் பொருட்காட்சிகளினால் நன்மைகள் விளையுமானாலும், ஜனங்கள் பெரும்பான்மையும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களா யிருக்கிறவரையில் இவைகளாலுண்டாகும் நன்மைகளை ஒரு தேசத்து ஜனங்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயிருக்க, விளம்பரங்கள் செய்வதால் என்ன பிரயோசனமோ அந்தப் பிரயோசனந்தான் உண்டாகும்.

நீங்கள் என்னை இதுவரையில் பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்ததற்காக வந்தனம் செலுத்துகிறேன். நான் பேசி முடிக்க விஷயங்கள் உங்களுக்குப் புதிதல்ல. அவைகள் புதிய உருப்பூண்ட பழைய விஷயங்கள். அவைகளைப் புதுக் கருத்துகளும் நவீன எண்ணங்களும் உண்டாகும்படியாய்ப் புதிதான விதமாயுந் தோற்றத்தோடும் அவைகளைச் சொன்னேனால் உங்களுடைய காலத்தை வீண்போக்க வில்லையென்று நான் நிச்சயமா யிருப்பேன்.

உங்களுடைய சேர்மனை என்னை நீங்கள் தெரிந்தெடுத்து என்னிடத்தில் நம்பிக்கை காட்டினதற்காகவும் என்னை அன்புடன் வரவேற்றதற்காகவும் நான் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறேன்.

மதுவிலக்குச் சங்கம்.

பிரசிடெண்ட்
மிஸ்டர் E. W. ப்ரிட்ச்லி (Fritchley) யின் பேச்சு.

(29-12-1910.)

ஸ்ரீமாட்டிகளே! ஸ்ரீமான்களே! எல்லா இந்தியா மது விலக்குச் சங்கமாகிய ஏழாவது சங்கத்தில் என்னைப் பிரசிடெண்டாக நீங்கள் தெரிந்தெடுத்த கௌரவத்துக்காக உங்களுக்கு உண்மையாய் நன்றி செலுத்த அனுமதி கேட்கிறேன். ஒரு விசேஷக் கௌரவமாக இந்த உத்தியோகத்தை வகிக்கிறேன்.

இந்தச் சங்கத்தில் அநேகர் பேசி நம் முன்பாகக் கொண்டுவரப்படும் விஷயங்களைப் பற்றி நாம் கவனத்தையும் கருத்தையும் செலுத்தி, நாம் செய்யும் தீர்மானங்களைப் பற்றியும் முடிவுகளைப் பற்றியும் இந்த வருஷத்தில் நம்மால் இயன்றதைச் செய்யக் கடவோம்.

ஒரு யுத்தம்.

நாம் இந்தக் காரியத்தில் தருமத்தின் வழியிலும் அதனல் வெற்றியின் வழியிலும் நிற்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு வருகிறோம். எல்லாப் பிராணிகளையும் சிருஷ்டித்து சம்ரக்ஷிக்கும் கடவுள்

நமது பக்க மிருக்கிறார். அவர் நமது பக்க மிருப்பாரானால் யார் நமக்கு விரோதமா யிருக்கக் கூடும்?

உலகத்தில் அநேக ஜனங்களுடைய உயிரைக் கவர்ந்து, அதனுடைய நாசகாமான பிடிப்பில் நமது நேர்த்தியான தேசத்தைக் கொள்ள பயமுறுத்திக் கொண்டிருக்கும் குடியென்கிற இந்த பயங்கரமான பிசாசுடன் இப்போது நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். இந்தப் பிசாசு முன் செல்லாம லிருக்கும்படி தடுக்க, இந்த மதுவிலக்கிற் சேர்ந்த சக்திகள் வல்லனவா ?

ஒவ்வொரு யுத்தத்திலும் சத்துருவினுடைய இருப்பிடங்களையும், அவனுக்குள்ள வலிமையையும், பலாபலங்களையும், அவனுக்குக் கிடைப்பனவற்றையும் பற்றி வெகு கவலையாய்க் கவனிக்கப்படுகிறது. அவைகளுக்கு விரோதமாய் அவைகளை வெல்லும் பொருட்டு, நமக்குள்ள பலங்களைத் திரட்டிக்கொண்டு வருவது வழக்கம். ஆகையால், இந்தியாவில் மதுவிலக்குச் சைனியத்தின் பற்பல பாகங்களைக் குறிக்கும் இந்தச் சங்கத்தில், நமது விரோதிகளின் பலத்தையும் உபாயங்களையும் நன்றாயறிந்து, கடவுள் கிருபையால் நமக்கு ஜயமுண்டாகும்படி, நாது பிற்கால முறையை அனுபோக வழிகளாயும் உபயோகப்படும் வழிகளாயும் பிரயோகிப்பதை நாம் நன்றாய்க் குறிப்பிடக் கடவோம்.

“யார் தங்களுக்கே ஒத்தாசை செய்துகொள்கிறார்களோ அவர்களுக்குக் கடவுளும் ஒத்தாசை செய்கிறார்” என்ற பழமொழி இருக்கிறது. கருணையுள்ளதும் அவசியமுமான இந்த வேலையில் அவருடைய

சகாயத்தை நாம் எதிர் பார்த்திருப்போமானால், நாம் நம்முடைய எல்லா எண்ணத்தையும், சாவகாசத்தையும், திறமையையும், நமது உடைமைகளையும் கூட, இதற்கு அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கவேண்டும். இந்த மதுவிலக்கு விஷயத்தை நாம் ஒழிந்த நேரத்தில் செலவு செய்ய நல்லெண்ணமுள்ள காலப்போக்காக மாத்திரம் நினைக்காமல், அவசியமானால் நம்முடைய சௌகரியத்தையும் சௌகரியங்களையும் சுகங்களையும் இழக்கச் சித்தமாயிருக்கும் போராட்டமாக இதை நாம் சிந்திக்கக் கடவோம். அப்படிச் செய்தால், சாராய வஸ்துவில் அகப்பட்டுக்கொண்டிருக்கும் நமது சகோதரர்களுக்கு நாம் கைகொடுக்கவும் அதனுடைய நாசகரமான செயல்களினால் தொடப்படாத ஆயிரக்கணக்கான வீடுகளை நாம் சம்ரட்சிக்கவும் முடியும்.

குடி அதிகப்படுகிறது.

இந்தியாவில் குடி வழக்கத்தைச் சோதிக்கும் எவனுக்கும் இந்த வழக்கம் பயங்கரமாய் விர்த்தியாய்க் கொண்டு வருகிறதென்பது விளங்கும்.

பாம்பே ஆலைக்காரர்களின் சங்கத்துப் பிரசிடெண்டானவர் அந்தச் சங்கத்து முன்பாகச் சொன்னதாவது:—

"சமீபத்தில் 'குடிக்கமிட்டி' பம்பாயில் செய்த விசாரணையில், வெளிவந்த உண்மை என்னவெனில், ஆலையில் வேலை செய்வோர் துணிகளில் செலவழிக்கும் பணத்தை விடக் குடியில் அதிகம் செலவு செய்து விடுகிறார்கள். ஆலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஜில்லாக்

களிலுள்ள கள்ளுக் கடைகள் குறைக்கப்படுமானால், கள்ளு விற்பதும் வாங்குவதும் குறையும். குடிக்கும் கெட்ட வழக்கத்தை வேலை செய்வோர் விட்டுவிடுவார்களானால், அவர்களுடைய குழந்தைகளைப் படிப்பிப்பதில் அவர்களுடைய பணத்தைச் செலவு செய்வார்கள்."

இதைப்பற்றி "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை, எழுதும்போது, சொன்னதாவது:—

" கள்ளு சாராயம் முதலியவை கிடைக்கும் வசதிகளை வெகு கவலையாய்க் கவனித்து, விளையாட்டுக் களங்களை அதிகப்படுத்துதல் அவசியம். விளையாட்டுக் களங்களை அதிகப்படுத்துவதால் கள்ளுக் கடைகளுக்கு விரோதமான கவர்ச்சிகள் வேறிடங்களிற் கிடைக்கக் கூடியதா யிருக்கும்.

லாகிரியின் பயங்கரமான பலங்களால் இந்தியரில் பல உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் இந்தியச் சிறுவர்களில் புஷ்பம் போன்றவர்களும் அகால மரணத்திற்கு உட்படுவது எல்லாருக்கும் தெரியும்.

சரித்திரத்தில் ஆனரெபில் மௌண்ட் எல்பின்ஸ்டன் சூப்ரீம் கவர்ன்மெண்டுக்கு 1810-ம் வருஷம் எழுதிக்கொண்டதாகச் சொல்லுவது என்னவென்றால்:— "பீஷ்வாக் (அரசர்) களின் கீழ் அப்காரியானது 19 ஆயிர ரூபாய்க்கு மேல் ரெவினியூ கொடுக்கவில்லை. புனவில் லாகிரி வஸ்துக்கள் உபயோகப்படுத்தக்கூடாதென்று தடுக்கப்பட் டிருந்தது. மற்றிடங்களிலும் அவைகளின் உபயோகம் ஆதரிக்கப்படவில்லை." அவர்

இன்னும் சொன்னதாவது:—"மாராஷ்டிர தேசத்தில் குடியானது தெரியவே தெரியாது. லாகிரி வஸ்துக்கள் விற்கக்கூடா தென்று தடுக்கப்பட் டிருந்தபடியால் இந்தக் கெட்ட வழக்கம் உண்டாகவில்லை. அந்த வழி யாய் நமக்கு வரும் ரெவினியூவானது மிகக் குறைவா யிருக்கிறபடியால், அதை முற்றிலும் தடுத்து விடுதல் நலமா யிருக்கும்." இந்தப் பிரேரணை அங்கீகரிக்கப் படாதது விசனிக்கத் தக்கது.

1822-ம் வருஷத்தில் புனைக் கமிஷனர்கள் செய் திருக்கும் ரிப்போர்ட்டில் நாம் இன்னும் அறிந்து கொள்வது என்னவென்றால்:—"ஒரு வருஷத்தில் ஆறு சண்டைகள் கூட குடி வெறியினால் உண்டானதில்லை."

இப்போது என்னவா யிருக்கின்றது ;

புனைவிலும் அதை யடுத்துள்ள கான்டோன்மெண் டிலும் 130 ஆயிரம் காலன்கள் தினத்துக்கு உபயோக மாகி, குடியின் பலனுய்க் கோர்டுகளுக்கு முன்னால் கொண்டுவரப்படக் காண்கிறோம். ஆதியில் ஒரு வரு ஷத்துக்கு இவ்வளவில்லை. இவ்வளவுக்கும் இப்போது அதிக நாகரிகமும் போலீஸ் சம்ரக்ஷணையும் இருக் கின்றது. பாம்பேயில் பிரசுரமாகும் ஒரு மாகஸீனில் ஒரு வியாசத்தில் அந்த வூர் சீப் பிரசிடென்ஸி மாஜிஸ் டிரேட் எழுதினதாவது:—"மாஜிஸ்டிரேட் முன்பாக, ஒழுங்கீனரா யிருந்தார்களென்று வருஷத்துக்கு 3300 பேர் அல்லது மாசம் 270 பேர் கொண்டுவரப்படுகிற தைப் பார்த்தால், குடிவிலக்கு வேலைக்கு அதிக இட மிருக்கிறதென்று விளங்குகிறது. பஞ்சாலைகளில் வேலை செய்கிறவர்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்கிற

வர்களும் வலையில் வரவா அதிகமாக அகப்பட்டுக் கொள்கிறார்களென்று பொதுவாய் ஒப்புக்கொள்ளப் படுகிறது. இதனாலும் இதனாலுண்டாகும் இழி குணத் தாலும் போலீஸ் கோர்டுகள் முன்பாக அதிகக் குடி வெறியர்களைப் போலீஸார் கொண்டு வருதற்குக் காரணமாகிறது.

இப்போது குமாஸ்தாக்களும் ஆபீஸ் உத்தியோகஸ்தர்களுமாகிய மத்திய வகுப்பாரைக் கவனிப்போமானால், பாம்பே முனிசிபல் கார்பரேஷனுடைய பிரசிடெண்டானவர் முனிசிபாலிடியின் வேண்டுகோளின் பேரில், பாம்பே கவர்ன்மெண்டுக்கு எழுதினதில் பின் வருமாறு சொல்லுகிறார்:—

"போர்ட் வார்டானது (Fort ward) நகரத்தின் ஆபீஸ்களில் பெரும்பான்மையும் இருக்கிற இடமாயிருந்தபோதிலும், அங்கே 19 கடைகள்தானிருக்கின்றன. இருந்தும் அங்கேயே குடி யதிகமாக இருப்பதாகக் காண்கிறது. ஒரு ஷாப்பில் வருஷம் செலவாகும் கள்ளு 1866 காலனாயிருக்க, இந்த வார்டில் ஒரு ஷாப்பில் 26'8 காலன் செலவாகிறதைப் பார்க்க ஆச்சரியமாயிருக்கின்றது. இன்னொரு ஆச்சரியப்படத் தக்க சங்கதி என்னவென்றால் $\frac{1}{8}$ மைல் அல்லது 220 கஜம் குறுக்களவில் 5 கடைகள் இருக்கின்றன."

ஒரு நாளில் சில மணி நேரத்துக்குள்ளாக வேலைக்காக ஜனங்கள் இங்கு வந்து குவிகிறார்களென்று எக்ஸைஸ் அதிகாரிகள் வாதம் சொல்லக்கூடும். ஆனாலும், ஜனங்கள் ஒரு கெட்ட வழக்கத்தை அனுசரிக்க விசேஷ வசதிகள் பெறும்படி செய்தல் நியாயமாகுமா?

இவைகள் பம்பாய் நகரத்தின் நிலைமையாக மட்டு மாகும். மற்ற நகரங்களிலும் நிலைமை இப்படித்திரித் தான் இருக்கிறதென்பது கவர்ன்மெண்ட் ரெவினியூ கணக்கைப் பார்த்தால் தெரியும்:—

1874	பவுன்	15,61,000
1884	,,	25,38,000
1894	,,	36,20,000
1904	,,	52,95,000
1909	,,	67,17,000

இந்தக் கணக்குகளைப் பார்த்தால் 1874-ம் வருஷத்தில் அப்காரி ரெவினியூ இருந்ததைவிட 4 - பங்கு ஜாஸ்தியாக அதிகமாயும் பயங்கரமாயும் விர்த்தியடைந்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தப் பயங்கரமான சங்கதிகளை வைத்துக் கொண்டு கவர்ன்மெண்டானது வரும்படியை விட்டு விட்டு, ஜனங்களின் ஒழுக்கத்தை யுத்தேசித்து, முழு நிலைமையையும் சோதித்துப் பார்த்தல் அவசிய மல்லவா ?

இப்போது எடுத்துக் காட்டின கணக்குகளினால் ராஜாங்க முறை இப்படி யிருக்கிறதென்று துக்கத்தை யுண்டுபண்ணவேண்டாமா! மேல்நாடுகளிலும், மற்றத் தேசங்களிலும் உத்தம புருஷர்கள் தங்கள் ஜாதி ஜனங்களை இந்தப் பிசாசினின்றும் விடுவிக்கப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்க, இந்தியாவிலோ இந்தத் தீங்கைச் சாதாரணமாய்க் குடிக்கும் வழக்கமில்லாத ஜனங்கள் மீது சுமத்த அல்லது அவர்களுக்குள் பரவச் செய்ய ராஜ்ய முறை இடங்கொடுக்கிறது.

கவர்ன்மெண்டின் பிரசுரம்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியைப்பற்றிப் புகழ்வதில் நான் ஒருவனுக்கும் பின்னடைந்தவ னல்ல. இங்கிலாந்து இந்தியாவில் செய்திருப்பதுபோல் வேறெத் தேசமும் அவ்வளவு வியக்கத் தக்கதாய் அந்த ஆட்சியை நடத்தி யிருக்குமோ அறியோம்? ஆனாலும் நம்முடைய நிர்வாக முறையில் சில குறைகள் இருக்கிறபடியால் அவைகளை நீக்கிவிடவேண்டும். இந்தக் குறைகளில் இந்திய ஜனங்களுக்குள் கள்ளுண்ணலை அதிகப்படுத்துவது ஒன்று. மற்றொரு தீங்கு என்னவென்றால், சைனா மீது அபினியைச் சுமத்துவது. இவைகளில் முதலாவது சொன்னதைப்பற்றிக் கவர்ன்மெண்டார் தாங்கள் பகிரங்கமாய்ச் சொன்ன முறைகளை எக்ஸைஸ் டிபார்ட்மெண்டின் உத்தியோகஸ்தர்கள் முழுக்க அனுஷ்டிக்கிறார்களா வென்று பார்க்கவேண்டியது. இந்த முறைகளிற் சில பின் வருமாறு:—

கவர்ன்மெண்ட் தங்கள் அப்காரி நிர்வாகத்தில் மனதில் வைக்கவேண்டிய விதியானது குடியை அடக்குவது.

எங்கே ஜனங்கள் குடியை வேண்டுகிறார்களோ அங்கே ஷாப்புகள் வைக்கவும், ஜனங்கள் குடித்து வழக்கப்படாமலிருக்கும் இடங்களில் அந்த வழக்கம் உண்டாகாமலிருக்க ஷாப்புகள் வைக்காமலிருக்கவும், கவலை எடுத்துக்கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டார் குடிவிலக்குக்குச் சாதகமாயிருக்கிறார்களென்று தெளிவாய்க் காட்டவேண்டும்.

"ஒரு புதிய கடையை வைக்க அனுமதிபெறக் கூடாத இடத்தில் ஒரு பழைய கடை இருக்கும்படி செய்தல் சரியல்ல.

இந்த விஷயம் ஜனங்களுடைய க்ஷேமத்துக்கு அவசியமென்று இந்தியாக் கவர்ன்மெண்டார் நினைக்கிறார்கள். குடிவழக்கத்தை அதைரியப்படுத்துவதும், வெறியினு லுண்டாகும் இழிவான மிருகத் தன்மைக் கொப்பான குணங்கள் ஜனங்களுக்குள் உண்டாகாதபடித் தடுப்பதும், இந்தியாக் கவர்ன்மெண்டின் முறையென்று எக்ஸைஸ் இலாகாவின் நிர்வாக உத்தியோகஸ்தர்களின் மனதில் படும்படி செய்யவேண்டும்." (இந்தியாக் கவர்ன்மெண்டிடமிருந்து பம்பாய்க் கவர்ன்மெண்டுக்கு அனுப்பின 1904-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 21-ந்தேதி 2455-ம் "நெம்பர் நிருபம்.)

அப்காரி உத்தியோகஸ்தர்கள் கள்ளு சாப்பிடுவது அதிகமாகும்படிச் செய்வார்களானுல், கவர்ன்மெண்டாரின் அசம்மதத்திற்குப் பாத்திரமாவார்களென்று அறிந்தால், அவர்கள் இந்த விஷயமாய்க் கவர்ன்மெண்டார் செய்த தீர்மானங்களை, மற்ற இலாகாக்களின் செய்யப்படும் தீர்மானங்கள் மதிக்கப்படுவது போல், மதிப்பார்கள்.

அப்காரி ரெவினியூ அதிகமாவது கள்ளத்தனமாய்க் கள்ளு விற்பனையாவதைத் தடுப்பதா லென்று சொல்லுவதை ஒரு புத்தி மானும் ஏற்கமாட்டான். அப்படிச் சொல்லுவது இப்போதிருக்கும் உத்தியோகஸ்தர்களுடைய வேலையின் பேரிலும் அவர்களுக்கு

முந்தியிருந்தவர்களுடைய வேலையின் பேரிலும் வீண் அபவாதமாகும்.

லாபமும் நஷ்டமும்.

1908 - 1909 - வது வருஷத்துக்கு இந்தியன் ரெவினியூ 6,97,60,000 பவுன் என்று தெரிகிறது. அதில் நாட்டு வெறி வஸ்துக்களிலிருந்து எக்ஸைஸ் ரெவினியூவானது.

நாட்டுச் சாராயம்	33,73,062
கள்ளு	10,27,493

ஆகமொத்தம் 44,00,555, ஆகிறது. அதாவது, மொத்த ரெவினியூவில் நூற்றுக்கு 6½ விழுக்காடாகிறது.

நிச்சயமாய் 30 கோடி ஜனங்களடங்கிய ஒரு ஏகாதிபத்தியத்துக்குப் பொறுப்புப் பெற்ற கவர்ன்மெண்டும் திறமைசாலிகளான உத்தியோகஸ்தர்களும் ரெவினியூவில் நூற்றுக்கு 6½ க்கு ஈடு செய்ய வல்லவர்களாவார்கள். இந்தப் பீடை தேசத்தில் பரவ இடமிருக்கக் கூடாது. மற்றத் தேசங்களுடைய கவர்ன்மெண்டுகளுக்கு இந்தத் தீங்கு முதிர்ந்து போன காலத்தில் அதை நீக்க அதனால் கிடைத்த வரும்படியை விட அதிகச் செலவாயிருக்கிறது.

மேலும், இந்தக் கள்ளு உண்கிறவர்கள் ஏழை ஜனங்களாயிருக்க, அவர்கள் ஒரு வருஷத்துக்கு 606 லக்ஷம் ரூபாய் எக்ஸைஸ் ரெவினியூ கொடுத்தார்களானால், அவர்களுடைய குடும்பங்கள் எப்படி வருந்தாமலிருக்கும்? இந்த ரெவினியூவானது இந்தியா

வின் ஜனத்தொகையின் ஒரு பாகத்திலிருந்து வருகிற தென்று நம்புகிறேன்.

கவர்ன்மெண்டின் மொத்த வரும்படியில் நூற்றுக்கு 6½-க்கு அதிகப்படாமலிருக்கும் இந்த வரும்படியைக் கொடுக்கும் இந்தப் பெருந்தீங்கைப் பரவவிடுவதுமல்லாமல், அதை ஆதரிப்பதும் அந்த கவர்ன்மெண்டினுடைய உத்தியோகஸ்தர்களுக்குள்ள குருட்டுவழியைக் காட்டவில்லையா ?

இந்த சொற்ப வரும்படியை இழந்து குடியை நீக்குவதால் கவர்ன்மெண்டுக்குண்டாகும் நஷ்டமானது மற்ற இலாகாக்களில், அதாவது, போலீஸ் இலாகாவிலும், சட்டக்கோர்ட்டுகளிலும், ஜெயில்களிலும் தர்மஸ்தாபனங்களிலும், குறைந்த செலவால் ஈடுபெறும்.

பின் வருகிற குறிப்புகள் ஒரு ஆதாரமுள்ள ரிப்போர்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றன:—ஐரோப்பாவைவிட இந்தியாவில் பைத்தியகாரர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள பைத்தியக்காரச் சாலைகளில் 7500 பைத்தியகாரர் இருக்கிறார்கள். பைத்தியத்திற்கு ஆதாரம் முக்கியமாய்ச் சாக்குகளை உபயோகப்படுத்தல் என்று நம்பப்படுகிறது. இரண்டு வாக்கியங்களும் விசேஷப் பொருள்கள் உள்ளவைகளாயிருந்து, நம்முடைய உத்தியோக நிர்வாகிகளின் கவலைக்கும் கவனத்துக்கும் பாத்தியமுள்ளவைகளாயிருக்கின்றன.

குடிக்காமலிருப்பதால் ஒவ்வொரு தனியான மனுஷனுடைய க்ஷேமமானது அதிகப்படுகிறதென்று

எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். க்ஷேமம் அதிகப்பட்டால் வரி கொடுக்கிற மற்றச் சரக்குகளை வாங்கும் சக்தி அதிகமாகின்றது.

ராஜாங்கத்தார் பிரஜைகளினுடைய எப்பாகத்தினராவது, முக்கியமாய் ஏழைகள், அழிந்து போவதால் ரெவினியூ அடையும் எண்ணத்தைக் கைவிடவேண்டும்.

கடவுள் துணை.

கிறிஸ்து வேதங்களில் சொல்லப்பட்டிருந்து மற்ற மதங்களிலும் சொல்லுவதால் ஆதரிக்கப்படும் வசனங்கள் இந்த சந்தர்ப்பத்தில் அதிகப் பொருள் உள்ளன. கடவுள் சொல்லுவதாவது, "என்னைக் கனப்படுத்துகிறவர்களை நான் கனப்படுத்துவேன்" ஒவ்வொருவனுடைய க்ஷேமம் எப்படியோ, அப்படியே ஒரு ஜாதியினுடைய க்ஷேமத்தையும் அளவிடுவதில் கடவுளுடைய தயவோ அல்லது தயவின்மையோ நாம் கருதவேண்டிய வெகு முக்கியமான அமிசமென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். ஒரு ஜாதி கடவுளைக் கனப்படுத்துவார்களானல் கடவுள் அந்த ஜாதியைக் கனப்படுத்துவார். லௌகிகப் பிரவர்த்தியே முக்கியமான இந்த யுகத்தில் எல்லாக் கவர்ன்மெண்டுகளுடைய கவனத்துக்கும் இதைக் கொண்டுவரவேண்டிய அவசியம்

ஒரு பயங்கரமான ஆபத்து.

ஐரோப்பா தேசத்தில் சட்டத்துக் கடங்காமலும் குற்றஞ் செய்வோருமான வகுப்பாருக்கு ஆதாரமாயிருப்பது குடியே என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். இந்தியாவிலும் எந்தக் காரியத்துக்கு எது

காரணமோ அந்தக் காரியத்தையே அந்தக் காரணம் கொண்டு வருமென்பதை யறியாத ராஜீய முறை குருட்டுத்தனமான முறையேயாகும். சென்ற சில வருஷக் காலங்களாக குடிக்கிற வழக்கத்தை நாம் ஆதரித்து வந்தது போல், இனியும் ஆதரித்து வருவோமானால், எற்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியானது சாஸ்வதமாயிருப்பதற்குப் பெரும் ஆபத்தாய் முடியும். அப்போது பத்து லக்ஷக் கணக்கான அனேக ஜனங்கள் லாகிரி வஸ்துவின் கெட்ட பலன்களால் மனச் சாட்சியின் எச்சரிப்புக்கும், உண்மையான நாகரிக வாசத்துக்கும், சம்ஸார பந்தந்துக்கும், சொந்த உரிமைக்குங் கூட இறந்தவர்களாய் விடுவார்கள். மற்றத் தேசங்களில் லாகிரி வஸ்துவை அதிகமாய் உபயோகப்படுத்துவதால் தாழ்த்தப்பட்டு, வரப்போவதைக் கவனிக்காமலிருக்கும் முழுகிப்போன குடிகாரர்களுடைய குற்றச் செயல்களையும் சுபாவத்தையும் இத்தேசத்து ஜனங்கள் மனதில் உண்டுபண்ணும்.

இந்தியா ஜனங்களுடைய சாந்தமானதும் பணிவுள்ளதுமான சுபாவத்தினால் இந்தியாவில் பிரிட்டிஷாட்சியானது எளிதாக்கப்பட்டிருக்கிறது. இந்த சுபாவமானது லாகிரி வஸ்துவின் இழிகுணங்களால் மாற்றப்படுமானால் இங்கிலாந்துக்கு துக்ககரமான நாளாய் முடியும். ஒருவனுக்கு லாகிரி வஸ்துவினால் ஆத்திரம் பொங்கும்போது, அவன் மற்றவனிடத்தில் சண்டை செய்பவனும், வரப்போவதைக் கவனிக்காதவனும், ஆகி விடுவதை இங்கிருக்கும் அனைவர்களும் கவனித்திருப்பார்கள்.

மதங்கள் சொல்லுகின்றவை.

இந்தப் பெரிய ஏகாதிபத்தியத்தில் பல மதங்களும் கள்ளுக் குடியைத் தோஷமென்று கண்டிப்பது நாம் இந்த விஷயத்தில் கவனிக்கவேண்டிய இன்னொரு முக்கியமான சங்கதியாகும். மத சம்பந்தமான இந்த இயற்கை யறிவில் பிரவேசிப்பதும், குடிவிலக்கினால் வரும் ஒழுக்க சகாயத்தையும் சமூக நிர்ப்பந்தங்களையும் ஒரு விதமானமீட்சி ஹேதுவுமில்லாத ஒரு பொல்லாத வழக்கமானது கவிழ்த்துவிடப் பார்ப்பதும், விவேகமான முறையா?

இந்தியாவில் ஒற்றுணர்ச்சியே நிர்வாகம் நிறைவேறுதற்கு முக்கிய ஆதாரம் ஆகையால், உள்நாட்டுக் கள்ளு விஷயமாய் ஜனங்களுடைய மிதமான குணத்தோடு ஒற்றுணர்ச்சி காட்டி, சிறிது சிறிதாய் அது பத்து வருஷத்துக்குள்ளாக முழுதும் நின்றுபோகும்படியாய்க் குறைத்துக்கொண்டு வரவேண்டும். அயல்நாட்டுச் சாராயங்களையும் தேசத்தில் அதிகமாய் வரவிடக்கூடாது.

அன்னியச் சாராயத்தின் செலவு.

அன்னியச் சாராயங்களைக் குடிக்கும் வழக்கமானது அதிகமாகி வருவது விசனகரமானது. இது இப்படியே அதிகப்பட்டுக்கொண்டு வருமானால், உள்நாட்டுக் கள்ளைவிட அதிகத் தீங்கு செய்யும். சென்ற பத்து வருஷத்துப் பின்பாதியில், பம்பாய் பட்டினத்தில் மட்டும் உள்நாட்டுக் கள்ளுண்ணல் நூற்றுக்கு 13 அதிகமாயிருக்க, அயல்நாட்டுச் சாராயங்களிற் சில

உண்ணப்படுவது நூற்றுக்கு 35 ஆயிருக்கிறது கவனிக்கத்தக்கது.

பின்னால் வருகிற குறிப்புகள், 1908-ம் வருஷத்தில் பம்பாய்க் கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட அயல்நாட்டுச் சாராயக் கமிட்டியின் ரிப்போர்டிலிருந்து எடுக்கப்பட்டன:—

"அயல்நாட்டுச் சாராயம் உள்நாட்டுக் கள்ளைவிட மனதைக் கவரக்கூடியதாய், அதனால் அதிகமாய்க் குடிக்க ஹேதுவானதாயிருக்கிறதென்று, கமிட்டி நினைக்கிறார்கள். மனதைக் கவரும்படியான அன்னியச் சாராயத்தின் இயல்பானது, அது அயல் சாமானாயிருக்கிறதென்கிறதிலும் புட்டிகளின் ஆக்கிரதையிலும் லேபில்களிலும் சரக்கின் வர்ணத்திலும் வாசனையில்லாதிருத்தலிலும் நல்ல ருசியிலும் இருக்கின்றது. ஒரு தடவை குடித்து ருசிகண்டால் ஆசை மென்மேலும் வளர்ந்துபோகிறது. அயல்நாட்டுச் சாராயத்திலேயே தவிர உள்நாட்டுக் கள்ளில் அவ்வளவு ஆசையுண்டாவது இல்லையென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தக் காரணங்களினால் அன்னியச் சாராயம் அதிக அபாயகரமானதென்று அதைக் கவர்ன்மெண்டார் தடுக்க வேண்டும்.

கள்ளுக்குடி இந்த தேசத்தில் அதிகமாகிறதற்குத் தகுந்தாற்போல், கள்ளுக்குடியர் எவ்வளவுக்கெவ்வளவு அதைத் தடுப்பதில் மும்முரமாயிருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு இந்த நாசகாரமான சத்துரு உள்ளே புகுந்து சூறையாடி விடாமல் ஊக்கத்தோடும் விடா முயற்சியோடும் காக்கக் காலம் வந்துவிட்டது.

எடுத்துச் சொல்லவேண்டிய அமிசங்கள்.

ரெவினியூ அதிகாரிகளையும் லைசென்ஸ் (License) கொடுக்கும் அதிகாரிகளையும் பிரித்துவிட வேண்டுமென்று நாம் முதலாவது எடுத்துச் சொல்லவேண்டும். ஒவ்வொரு பட்டினத்திலும் கிராமத்திலும் விற்கப்படக்கூடிய கள்ளு இவ்வளவுக்கு அதிகமாகக் கூடாதென்றும் எடுத்துக் காட்டவேண்டும். லைசென்ஸ் புதுப்பிக்கிற போதெல்லாம் இந்த அளவைக் குறைக்கவேண்டும்.

கள்ளுக் கடைகளைத் திறந்து வைக்கிற காலத்தைக் குறுக்கவேண்டுமென்றும் சொல்லவேண்டும்.

ஞாயிற்றுக் கிழமையிலும் மற்றப் பொதுவான விடுமுறை காலங்களிலும் கடைகளை மூடி வைக்கும்படிச் சொல்லவேண்டும். ஏனெனில், அக்காலங்களில் நாசத்தையும் வறுமையையும் கொண்டுவரும் இந்த வழியில் ஏழைகள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்ததைச் செலவு செய்யத்தூண்டுதல்கள் உண்டாகின்றன. இந்தக் குடிவழியில் நான் முன்னமே சொன்னபடி வேறு மீளும்வகை இல்லை.

ஒரு முக்கியமான அபிப்பிராயம்.

குடிக்குச் சாதகமாகச் சிலர் பேசும்போது அது உஷ்ணத்தையுண்டாக்கும் குணமுள்ளதென்று சொல்லுகிறார்கள். இதற்குப்பதில் நான் ஸர் எர்னஸ்ட் ஷாகில்டன் சொன்னதைச் சொல்லுவேன். ஸர் E. ஷாகில்டன் தென்துருவ யாத்திரையினின்று என்னுடன் கூட இங்கிலாந்துக்கு ஒரே கப்பலில் போய்க்கொண்டிருந்தார். இந்தப் பேர்போன யாத்திரியான

வர் ஒரு லாந்தல் பிரசங்கத்தில் எங்களை உற்சாகப் படுத்தி, அதில் அவர் சொன்னதாவது:—"பனிக்கட்டியின் மீது நூற்றுக் கணக்கான மைல்கள் தூரம் செய்த விசாலமான யாத்திரையில் நாங்கள் ஒரு நாள்கூட சாராயம் குடித்ததில்லை. நான் பிறந்த நாள் மட்டும் ஷாம்பேன் சிறிது குடித்தோம்." இன்னும் அவர் சொன்னதாவது:— " துருவ யாத்திரைகளில் மனுஷ உயிர்ச்சேத மில்லாத ஒரு பெரிய யாத்திரை நான் அறிந்தவரை இதுதா னென்று சொன்னார்." உஷ்ணத்துக்காகச் சாராயம் குடிப்பது பொருந்துமென்று சொல்லுவோர் இவர் இப்படிச் சொன்ன அபிப்பிராயத்தைக் கவனிக்கவேண்டும். இவர் முற்றிலும் குடியை விலக்கினவ ரல்ல.

எக்ஸைஸ் இலாகா.

எக்ஸைஸ் இலாகா செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் நாம் ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். இதுவரையில் கவர்ன்மெண்டார் செய்த தீர்மானங்களும் இனிமேற் செய்யும் தீர்மானங்களும் அவைகளுடைய வாசகப்படியல்லாமல் கருத்தின்படி இந்த இலாகாவினால் நிறைவேற்றப் படுகின்றனவாவென்று நாம் பார்க்கவேண்டும்.

லைசென்ஸ்களை ஏலம்போடுகிற வழக்கத்தை முற்றிலும் நிறுத்திவிடவேண்டும். ஏனெனில், கள்ளு விற்கிறவன் தன்னுடைய லைசென்ஸுக்காகக் கவர்ன்மெண்டுக்கு அதிகப் பணம் கொடுக்கவேண்டியிருக்கும்போது, அவன் தன்னாலியன்றமட்டும் தன்னிடத்

தில் கள்ளு வாங்குவோரை அதிகப்படுத்தி, ஒவ்வொரு வனையும் எவ்வளவு அதிகம் குடிக்கமுடியுமோ அவ்வளவு அதிகம் குடிக்கச் சொல்லித் தூண்டுவான். மேலும், அவனும் அவனுடைய குடும்பமும் ஜனத்தின் க்ஷேமத்திற்குக் காரணங்களில் ஒன்றாயிருந்தும், அவர்கள் மீது செலுத்தும் தீங்கைக் கவனிக்காம லிருத்தலும் அந்தக் கள்ளு விற்போனுக்கு சகஜம்.

ஒரு வெட்கங்கெட்ட வியாபாரம்.

குடி வியாபாரத்தாலுண்டாகும் நாசத்தைக் கவனித்தல் மனச்சங்கடத்துக்கு இடமுண்டாக்குகிறது. வேறெந்த வியாபாரத்தி லிருந்தாவது தொழிலிலிருந்தாவது அத்தகைய நாசமுண்டாகுமானால், உலகம் அதனால் கோபமுண்டு, சாபத்துக்குத் தகுந்த அந்தக் காரணத்தை அழிக்கமுயலும். நான் சில குடும்பங்களுடைய பிள்ளைகள் தெருவில் இரப்பவர்களாய்த் திரிவதைப் பார்த்திருக்கிறேன். குடிப்பதில் அவர்களுக்கிருந்த ஆசையினால் அந்த வழக்கத்தை அந்தக் குடும்பங்களின் தலைவர்கள் ஆதரித்துவந்தார்கள். வேறொரு பிசாசானால் ஒரு நொடிப் பொழுதாவது ஆலோசிக்காமல் அதை அகற்றியிருக்கமாட்டார்களா?

குடியைப் பரவச் செய்யும் வழிகள்.

கள்ளு விற்போர் தங்கள் வியாபாரத்தை விசாலப் படுத்துவதில் கடைகளை அதிகமாக்குவதுந் தவிர அச்சை உபயோகப்படுத்துகிறார்கள்; தினப்பதிப்புப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் போடுகிறார்கள்; தபால் மூலமாய்ச் சுற்றுக் கடிதங்கள் அனுப்புகிறார்கள்; சுவர்

களில் பெரிய காயிதங்களில் எழுதிபோட்டுகிறார்கள்; ரயில்வே ஸ்டேஷன்களில் இனமல் செய்த தகடுகளை அடிக்கிறார்கள்; பகட்டாய்த் தயார் செய்த அல்மனுக் களும் (Almanacs) காலண்டர்களும் பிரசுரிக்கிறார்கள். இவைகள் குடி வியாபாரத்திற் செய்யப்படும் செலவு கள். இந்த வியாபாரத்தை நடத்துவோர் இம்மாதிரிச் செய்யப்படும் விளம்பரங்களை ஜனங்கள் மீது இடைவிடாது சுமத்தி, குடிகாரர்களாகிய இவர் களைப் பத்திரப் படுத்திக் கொண்டார்களானல், அவர் களுடைய பிற்காலத்து வியாபாரம் பத்திரமென்று அவர்களுக்குத் தெரியும். ஏனெனில், குடித்து வழக்கப் பட்டவன் தன் உடம்பிலிருக்கும் கோட்டை விற்று மறுபடியும் தான் குடிக்கவேண்டுமானல், அவன் அப்ப டிக் குடிக்காம லிருக்கமாட்டான். இப்படி யிருந்தும் இந்த நாசகரமான வியாபாரத்தைப் பற்றிப் பேசும் போது, நம்மை வெறியோர்கள் என்று சொல்லுகிற வர்கள் இருக்கிறார்கள்.

குடிவிலக்கில் உடன் வேலை செய்யும் நண்பர்களே இந்த ஆபத்தானது இந்தியாவில் லக்ஷக்கணக்கான குடும்பங்களைப் பிடிக்காம லிருப்பதில் நாம் கடவு ளுடைய கருவிகளாக ஆவோமானல், இவர்களால் நாம் திட்டப்படுதல் நம்மால் முடியும். இந்த அபாய கரமான பெருவாரி நோயினல் லக்ஷக் கணக்கான குடும்பங்கள் அழிபட்டுப் போனது மன்றி, அதனுடைய இரக்கமற்ற கைகளினல் இன்னும் எவ்வளவோ லக்ஷக் கணக்கான குடும்பங்கள பயமுறுத்தப்படுகின்றன.

இவ்வளவு கொடுமையையும் வருத்தத்தையும் உண்டுபண்ணின இந்த வழக்கத்தைப் பற்றி நாம் கடுமையாய்ப் பேசும்போது, நம்மை அடக்கமற்ற வெறியர்களென்று ஒருவரும் சொல்லமுடியாது.

பிரசிடெண்டு ரூஸவெல்டிடன் அபிப்பிராயம்.

பிரசிடென்ட் ரூஸ்வெல்ட்டை அரசர்கள் விருந்துக் கழைப்பதைக் கௌரவமாகக் கொண்டிருந்தார்கள். தப்பு செய்கிறவர்கள் மேரில் அவருடைய கண்டிப்பான வார்த்தைகள் சம்மட்டியடி போல் விழுந்தன. அப்படிப்பட்டவர் குடி வழக்கத்தைப் பற்றிச் சொன்னதாவது:— "ஜனங்களுக்குள் இந்தக் குடி வழக்கமானது குற்றஞ் செய்யும் சுபாவத்தை அதிகப்படுத்துகிறது. குடிக்கிறவர்கள் இஷ்டப்படி செய்ய விடப்படும் பட்சத்தில், தங்கள் சரீரத்தை மாத்திரமல்ல சமூகத்தையும் தாழ்மைப் படுத்துகிறார்கள்."

குடி விற்பனையை நாம் அடக்காவிட்டால் ஜாதியையே அது தொண்டையை நெருக்கிக்கொன்று விடுமென்று, ஒரு பேர்போன ஆங்கிலேய அரசு வல்லோர் சமீபத்திற் சொன்னார்.

குடிக்கிறவர்கள் மற்றெவரையும் கருத்துடன் நடத்துகிறதில்லை. தங்களுக்குக் கிடைக்கவேண்டியது கிடைக்குமானால் உலகம் எக்கேடு கெட்டாலும் கவனிக்கிறதில்லை. அப்படிப்பட்டவர்களை நாம் இலகுவாய்க் கருதவேண்டாம்.

குடிகாரனாக இறந்துபோகும் ஒருவனாவது அப்படி இறந்துபோவோமென்கிற எண்ணத்துடன் ஆரம்பிக்கிறதில்லை. அப்படி வெகு நிதானமாய்க் குடிக்க வேண்டுமென்ற உறுதியுடன் ஆரம்பிக்கிறவன் குடிகாரனாய்த் தன்னை முடிவுசெய்து கொள்ளாமலிருப்பது நிச்சயமல்ல. இந்தியா முழுமையும் ஜனங்கள் என்ன ஜீவனம் செய்கிறவர்களா யிருந்தாலும், அவர்களில் பயங்கரமான பலன்களை விளைக்கும் இந்த வியாபாரத்தைக் கவர்ன்மெண்டும் ஜனங்களும் ஆதரிக்கவேண்டுமா ?

நான் சம்பந்தப்பட்ட மட்டில், இதுவரையில் இந்தக் குடிவழக்கத்தை ஒரு பெரிதான தீங்காக நினைக்காமலிருந்து விட்டோமென்று நினைக்கிறேன். இந்தப் பயங்கரமான கொள்ளை நோயை எப்படி வெளிப்படுத்தியிருக்கவேண்டுமோ அப்படி வெளிப்படுத்தியிருக்கவில்லை. பொது ஜனங்களை எச்சரித்து, முக்கியமாய்ச் சிறுவர்களுக்கு இந்தக் குடிவழக்கத்தின் தீங்கிழைக்கும் பலன்களை எடுத்துக்காட்ட, நாம் தபாலாபீஸையும் அச்சையும் போதுமானவளவு உபயோகப்படுத்தவில்லை. நம்முடைய கடமை பெரிது. ஆனால், அதை ஆண்மையோடும் தன்மறுப்போடும் மேற்கொள்ளக்கடவோம். அதற்காகக் காலத்தையும் சிந்தையையும் பணத்தையும் செலவு செய்வோம்.

இந்தியாவில் வாசிக்கத் தெரிந்தவன் எவனாயினும் "எவரும் எச்சரிக்கவில்லையே" என்று சொல்லாதிருக்கும் வண்ணம், தபாலையும் அச்சையும் நாம் உபயோகப்படுத்துவோம்.

ஒன்றுபடைக்தும் பிரேரணை.

இந்தக் கான்பரென்ஸில் நாம் "எல்லா இந்திய குடிவிலக்கு ஐக்கியம்" என்று ஒரு மத்திய சபையும் அதற்கு மற்றப் பட்டினங்களில் கிளைகளும் ஸ்தாபித்து, இந்தப் பெரிய ஏகாதிபத்தியம் முழுவதும் அவைகளுடைய நல்ல பலனைப் பரப்பவேண்டும். இப்போது அங்கங்கேயுள்ள மதுவிலக்குச் சங்கங்களின் மெம்பர்கள் இந்த ஐக்கியத்தின் மெம்பர்களா யிருப்பார்கள். அப்படிச் செய்வோமானால், இந்த வருஷத்தில் அதிகக் காரியம் செய்யலா மென்று நினைக்கிறேன். இந்த தேசத்தில் அங்கங்கே யுள்ள ஒவ்வொரு மதுவிலக்குச் சங்கமும் இந்த ஐக்கியத்தினால் பலம் பெறுமென்றும் நம்புகிறேன். மதுவிலக்குச் சங்கம் இருக்கும் ஒவ்வொரு இடத்திலும் சிலர் மற்றவர்களை விடத் தங்களுடைய தருணங்களையும் பொறுப்புகளையும் கூர்மையாய் உணருகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மற்றவர்களுடன் ஒரு ஐக்கிய சங்கத்திற் சேருவார்களானால் அவர்கள் தங்களுடைய சொந்த ஊக்கத்தையும் அர்ப்பண புத்தியையும் பிறருக்கு ஊட்டி, முழு விஷயத்தையும்முன் செல்லச் செய்வார்கள். இப்படிப்பட்ட ஐக்கிய சங்கம் ஒன்றாய்ச் சேர்ந்து செய்யும் செய்கையினால் அது அதிக கவனம் பெற்று, இனி நாம் கவர்ன்மெண்டுக்குச் செய்யும் விண்ணப்பங்களும் அதிக கவனத்தைப் பெறும்.

இந்த ஐக்கிய சங்கத்தின் முயற்சியினால் சிறுவர்கள் மதுவிலக்கு முயற்சியில் அதிகச் சுருசுருப்பைக் காட்டக்கூடும்.

ஆலைகளும் தொழிற்சாலைகளும் ஸ்கூல்களும் இருக்குமிடங்களுக்கு அருகில் மதுவிலக்குச் சம்பந்தமாய்ப் பிரசங்கங்கள் செய்ய வசதியுண்டாகும். இந்தப் பிரசங்கங்களில் குடிவழக்கத்தால் மனிதனுடைய சரீரம் எப்படிக் கெட்டுப்போகிறதென்று படங்கள் மூலமாய்க் காட்டப்படவேண்டும்.

கள்ளு விற்கிறவர்கள் மனிதவர்க்கத்தை யழிக்கப் பாடுபடுகிறதுபோல் நாம் அந்த வர்க்கத்தை மீட்கப் பாடுபடுவோம்.

ஒரு விசேஷ நிதி.

குடியினுடைய தீங்கைப் பற்றியும் குடிக்காம விருப்பதினுடைய நன்மையைப்பற்றியுமுள்ள புஸ்தகங்களையும் படங்களையும் அச்சிட்டுப் பிரசுரம் செய்ய வேண்டிய செலவுகளுக்கு இந்தக் கூட்டத்தில் ஒரு விசேஷ நிதி சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதியில் ஒரு பாகம் பெரும்பான்மையான ஜனங்களின் உபயோகத்துக்காக அங்கங்கே ஆகார விடுதிகள் ஸ்தாபித்து, அந்த விடுதிகளில் வெறியில்லாத பானங்கள் கிடைக்கும்படிச் செய்யலாம். இந்த விடுதிகள் சம்பந்தமாய், முக்கியமாய் விடுமுறை நாட்களில், ஆட்டங்களும் ராட்டினங்களும் மாஜிக்லாந்தற் காட்சிகளும் சங்கீதக் கச்சேரிகளும் பின்னும் பலவகையான பொழுதுபோக்குகளும் அமைக்கப்படலாம். இவைகள் ஒவ்வொன்றும் குடியில் பணத்தைப்போடுவதைவிட அதிக சந்தோஷத்தையும் செலவுக்குத் தகுந்த பிரதிபலனையும் கொடுக்கக்கூடியது.

நாம் பிரேரணை செய்த ஐக்கிய சங்கமானது ஜனங்கள் முன்பாகவும் சமஸ்தானாதிபதிகள் முன்பாக வும் தனவான்கள் முன்பாகவும் கொண்டுவரப்படும் பட்சத்தில், அடுத்த வருஷத்தில் ஒரு லக்ஷ ரூபாய் சேர்ப்பது பெரிதல்ல. அவர்களில் பல பேருக்குத் தங் கள் உடன் தேச வாசிகளில் பெரும்பான்மையோரைச் சம்ரட்சித்துச் சந்தோஷப்படுத்துதலே உத்தேசமாகக் கொண்ட இந்த விஷயத்துக்கு உதவி செய்தல் தங்க ளுக்குக் கௌரவமென்று ஒருக்கால் நினைக்கக்கூடும்.

இந்த முயற்சியை ஆதரிப்பதற்காக நாம் பணச் செலவு செய்ய உடன்படுவதினால் இந்த முயற்சியில் நமக்குள்ள சிரத்தையையும் அர்ப்பண புத்தியையும் காட்டுவோம்.

சொஸ்தப்படுத்துவதைவிடத் தடுப்பதே நல மாகையால், நமது பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக் குச் சொல்லிவைக்கும் பாடங்களில் குடி விலக்கின் நன் மையைப்பற்றியும் சொல்லிவைக்க நம்மாலானமட்டும் பிரயத்தனப்படுவோம்.

இந்த வழியில் நம்முடைய முயற்சிகளுக்காக கவர்ன்மெண்டாரும் வித்தை இலாகா அதிகாரிகளும் ஒத்துழைப்பார்களென்று நாம் அநேகமாய் நம்பியிருக்க லாம். ஸ்கூல்களுக்கு உபயோகமான குடி விலக்குப் புஸ் தகங்களைச் சம்பாதித்து, இந்திய ஸ்கூல்களுக்கு அவை கள் உபயோகமாகும்படி மாற்றுவதில் அதிகாரிகளு க்கு நாம் ஒத்தாசை செய்யவேண்டும்.

இந்தச் சமயத்தில் இங்கே கூடியிருக்கும் குடி விலக்குச் சங்கங்களுக்கும் இங்கே கூட முடியாம

விரும்பவர்களுக்கும் பிரதிநிதியாக, நான் இந்தக் குடி விலக்கில் போன வருஷம் நம்முடன் கூட உழைத்தவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். முக்கியமாய்க் குடி விலக்குப் பத்திரிகைக்கும் "ஆப்காரி" என்ற பத்திரிகைக்கும் வந்தனம் செலுத்துகிறேன்.

ஆங்கிலோ இந்தியன் டெம்பரன்ஸ் அசோஸியேஷனுக்கும் இந்தியாவில் குடி அதிகமாகாமல் தடுக்க முயன்று வரும் விஷயத்தில் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

முடிவில், உங்களுக்கு நான் இந்த வார்த்தைகளைச் சொல்லும்படி எனக்குத் தருணம் கொடுத்தற்காக உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். இந்தக் கான்பரென்ஸுடைய பலன்கள் நெடுந்தூரம் நன்மை செய்யுமென்று நம்புகிறேன். இந்தக் கான்பரென்ஸை விட்டு நான் வீட்டுக்குத் திரும்பும்போது, இதுவரையில் இந்த குடிவிலக்குக்காக நாம் செய்திராத மாதிரியாய் காலம் புத்தி பணம் இவைகளைக் கடவுள் கிருபையால் அதிகமாய்ச் செலவு செய்யும்படியான நிச்சயத்துடன் திரும்பிப் போவோம்.

கடைசியாக, எல்லா வீலர் வில்காக்ஸ் என்ற கவியரசியின் வார்த்தைகளைச் சொல்லி அதை முடிக்கிறேன்.

சத்துரு ஜயித்ததாகத் தோன்றினும், தோற்றுப் போனவர்கள் தைரியத்தைக் கைவிடாதிருக்கட்டும்;

அவனுடைய சைனியம் பெரிதா யிருந்தாலும், அவன் தப்பு செய்வானானல், சண்டை முடிய வில்லை;

ஏனெனில், எப்படி இரவின் இருண்ட நேரத்துக்குப் பிறகு வெளிச்சம் நிச்சயமோ, அப்படிச் சண்டை சரியாய் முடிகிறவரையில் அது முடிந்த சண்டையல்ல.

ஆசாரத்திருத்தக் கான்பரென்ஸ்

ராஜா ராம்பால்ஸிங் பேசினது.

29-12-1910.

இந்த உன்னதமான சங்கத்தின் நடவடிக்கைகளுக்குப் பிரசிடெண்டாக என்னை நீங்கள் தெரிந்தெடுத்த கௌரவத்தை நம்பிக்கையுடன் ஏற்காவிட்டாலும் உண்மையான நன்றியுடன் அங்கீகரிக்கிறேன். இந்தச் சபை நம்முடைய தாய்ப் பூமியாகிய இந்த விசாலமான தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் வசிக்கும் எல்லா மதத்தினரையும் எல்லா ஜாதியாரையும் சேர்ந்த சிறந்த மனிதர்கள் அடங்கிய சபை. நாம் முன் செல்லுவதற்குத் தடங்கலா யிருக்கும் நமது சமூகம் ஒழுக்கம், ராஜாங்கம், இவைகள் சம்பந்தமான தீங்குகளை யொழிக்க நாமெல்லோரும் கடமைப்பட் டிருக்கிறோம். இதற்கு முன்னால் இந்தச் சங்கத்தின் தலைமை ராஜா ஸர் T. மாதவராவ், மிஸ்டர் ஜஸ்டிஸ் டிலங், டாக்டர் பந்தர்க்கர் முதலியவர்களால் வகிக்கப்பட் டிருக்கிறது. இவர்கள் ஆசாரத் திருத்த நிகழ்ச்சிக்கு வழி செலுத்துவோராய் உயர்ந்து தோன்றினவர்கள். இப்படிப்பட்டவர்கள் வீற்றிருந்த இந்த ஸ்தானத்தை நான் வகிப்பதற்கு எவ்வளவு அனருகனென்று உணர்ந்திருக்கிறேன். சீமாட்டிகளே! சீமான்

களே! என்னுடைய தேசத்துக்கும் என்னுடைய தேச வாசிகளுக்கும் நான் செலுத்தவேண்டிய கடமையை நான் உணர்ந்திரா விட்டாலும், பாரத பூமியில் பொறுக்கி யெடுத்த இரத்தினங்களாகிய உங்கள் பக்கத்தில் நான் நிற்கிறேன் என்கிற பெருமை இல்லாவிட்டாலும், நீங்கள் பட்சமாய்க் கொடுத்த இந்த கௌரவத்தை நான் ஒப்புக்கொள்ளத் துணியமாட்டேன்.

உங்களால் கொடுக்கப்பட்ட இந்தப் பெரிய கௌரவத்திற்குத் தகுந்தவனாகும் பொருட்டு ஆசாரத்திருத்தக்கார ரென்கிற பெரும் பெயருக்கு உரியது எதையும் செய்ததில்லை யென்கிற பளு என்னை இறுத்துகின்றது. இக்காலத்து ஊக்கமும் சிறிய பிராயமுமுள்ள சிலர் தேசத்தின் முன்னேற்றத்துக்கு இடைஞ்சலாய் நினைக்கும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவன். நீங்கள் எதிர் பார்ப்பதில் ஏமாந்து போகாம லிருக்கும்படியாக நான் ஆரம்பத்திலேயே உங்களுக்குச் சொல்லுதல் என் கடமையாக நினைக்கிறேன். என்னவெனில், நாம் பிறந்து வளர்ந்த பழைய காலக் கொள்கைகளை முற்றிலும் விட்டு விடுவது நான் பெற்றிருக்கும் சொற்பப் படிப்புக்குச் சாத்தியமில்லை. நான் சொல்லப் போகும் கருத்துகளில் அந்தக் கொள்கைகள் அங்குமிங்கும் கலந்திருக்கப் பார்ப்பீர்க ளானால், அவைகளை நீங்கள் சரியென்று ஒத்துக்கொள்ளாமற் போனாலும், அவைகள் என்னுடைய ஒரு குறையாக நீங்கள் மன்னிப்பீர்க ளென்று நம்புகிறேன். தாராளக் கொள்கையும் (Liberalism) பழைய காலக் கொள்கை

யும் (Conservatism) மனித சுபாவத்தின் இரண்டு அமிசங்கள். மனிதனுடைய சுபாவம் இப்போதிருக்கிறது போலவே இருக்குங்காலம் வரையில், இரண்டுக்கும் யுத்தம் உண்டாகி ஒன்று தோற்பதும் ஒன்று ஜெலிப்பதுமா யிருக்கும். ஒன்றை யடக்கவுங் கூடாது மற்றொன்றைக் கொல்லவுங்கூடாது. உண்மையில், ஒன்றைப்பற்றி நினைக்காமல் இன்னொன்றை மனசில் பாவிப்பதே கஷ்டம். முதல் சொன்னது தடையின்மையைக் கூற, பின் சொல்லியது அவசியமான தடை வேண்டுமென்கின்றது. தாராளக் கொள்கையானது ஒரு சிறு கன்னிகையைப்போல் அவளை எல்லோரும் மணம் புரிய விரும்புவார்கள். தடையென்பது ஒரு கோடியோனுடைய சுபாவத்தை உடைத்தாய் அதை எல்லோரும் ஒதுக்கிவைக்கப் பார்ப்பார்கள். சமூகம் அல்லது ஒழுக்கத்தைப் பற்றின அவசியமான தடை இல்லாவிட்டால், தாராளமானது குழப்பத்தைக் கொண்டுவிடும். அது நாமெல்லோரும் இப்போது விசனப்படுகிற நிலைமையைவிடக்கெட்ட நிலைமையாயிருக்கும். 'சாமானிய மனிதன் தத்துவம் அறிந்தவனைவிடப் பலவான்' என்பது உண்மையானால், எந்த சமூகமானாலும் அது ஒருவனுக்கு சமூகம் அல்லது ஒழுக்கத்தைப் பற்றின சட்டத்தை, எழுத்திலிருந்தாலும் எழுத்திலில்லா விட்டாலும், விதிக்காமல் தடையின்றி நடக்கச் சுதந்திரம் கொடுக்கிறதோ, அந்த சமூகமானது அமிதவாதிகளையே யுண்டுபண்ணும். சமூகக் கொள்கைகளைப்பற்றின அமிதவாதிகளை யுண்டாக்குமே யன்றி ராஜீயக் கொள்கைகளைப்பற்றின அமிதவாதிகளை யுண்டாக்குமென்று நான் சொல்ல

வில்லை. இந்த அமிதவாதிகள் சமூகத் திருத்தம் என்ற பேரை வைத்துக்கொண்டு, உலகத்தில் எது கெட்ட நடத்தையில் கொண்டுவிடுமோ அதற்கு இரையாகி, சமூகத்துக்கே நாசத்தையுண்டுபண்ணி, பாழாக்கி விடுவார்கள். ஆகையால், பழைய கொள்கைகள் எவ்வளவு கெடுதலாயிருந்தபோதிலும், தாராளமானது அதே மாதிரியாய் கெடுதலையுண்டுபண்ணக்கூடியது. நான் சொல்லுவதைப் பிசகாய் கிரகிக்காமலிருக்கும் பொருட்டு, எந்தத் திருத்தமானாலும் அதற்கு விரோதமாய் நான் பேச வரவில்லை. நான் சொல்லுவது என்னவென்றால், தன்னையே தான் மெச்சுவதாய் தடையில்லாமல் சஞ்சரிக்கும் சுதந்திரமும் சமூக விவகாரத்தில் அமிதவாதமுந் தான் கூடாதென்று சொல்லுகிறேன்.

ஆசாரத் திருத்தமானது ஹிந்துக்களையே அதிகமாய்ப் பாதிக்கிறது. ஏனென்றால், ஆசாரங்களிலிருக்கும் கேடுகளால் அவர்களை வருந்துகிறவர்கள். ஆகையால், அவர்களைப்பற்றி நான் அதிகமாய்ச் சொல்லும்படி நேரிட்டால், நான் தவறிச் சொல்லிவிட்டதாக நீங்கள் நினைக்கக்கூடாது.

நமது சமூகக் கட்டிடமானது வேறு சந்தர்ப்பங்களிலும் வேறு நோக்கங்களோடும் கட்டப்பட்டபடியால், அது இக்காலத்துத் தேவைகளுக்கு உற்றதாயிருக்கவில்லை. சென்ற காலத்தில் அது அநேக புசல்களுக்குத் தப்பி நின்றது அதன் பலத்தைக்காட்டுகின்றது. ஆனால், அது இப்போது மேற்றிசை நாகரிகத்தின்

காரியமாகிய இடைவிடாத பலமான நீரோட்டத்தினால் இப்போது பாதிக்கப்படுகிறபடியினால், அதன் உறுதி தளர்ந்துபோயிருக்கிறது. அதைச்சுற்றிப் பல திங்குகள் மேலிட்டிருப்பதாலும் அவைகள் அதன் அஸ்திவாரத்தைப் புறட்டிக்கொண்டிருப்பதாலும், அது விழுந்து அதனடியில் நாம் புதைபட்டுப் போவோம்போ லிருக்கின்றது. இப்போது பிரசினை என்னவென்றால், நாம் இன்னொரு இடத்திற்போய்க் குடிகொண்டு நம்மைக் காத்துக்கொள்வோமா? அல்லது, அதனுடைய இயற்கையான அழகை மாற்றாமல், இங்கே கொஞ்சம் சேர்த்தும் அங்கே கொஞ்சம் மாற்றியும், நமது தேவைகளுக்குத் தகுந்தபடி, நமது சமூகத்தை நாம் புதிதாக அமைத்துக்கொள்ளலாமா? முன் சொன்னதை அனுஷ்டிப்போமானால், நாம் எல்லாவற்றையும் அழித்துவிட்டு, நமக்குப் பெருமையாக நாம் கொள்ளும் ஜாதியையே இழந்துவிடவேண்டும். பின்னாற் சொன்னதை அனுஷ்டித்தால், சில உபயோகமில்லாத பாகம்மட்டும் நீக்கவேண்டி, மற்றவைகளை அப்படியே வைத்துக்கொள்ளும்படி நேரிடும். அநேக புத்திமான்கள் பின்னாற் சொன்னதையே அனுஷ்டிக்கவேண்டுமென்று நினைத்து, நம்முடைய நிலைமையைப் பலப்படுத்திக்கொள்வதற்காக அனுபோகத்தில் வேண்டியதைச் செய்து கொள்ளக்கடவோ மென்பார்கள். இப்படிச் செய்வது கஷ்டமான கடமையாகும். ஏனெனில், நமது சமூகத்தில் பொத்துவேலை கூடாது. கிளைகள் அங்கங்கு அதிகமாய் வேரூன்றிப் போனபடியால், அவைகளை மண்வெட்டியால் வெட்டி எறியவேண்டும். நாம்

பழைய வழக்கங்களாலும் சாம்பிரதாயங்களாலும் ஆளப்படுகிறபடியால், இப்போது நம்மைச் சுற்றியுள்ளவைகளைப்பற்றி நமக்கு அரை ஞானமாவது உண்டாகும்படி செய்யக்கூடியது எதுவுமில்லை. நாம் வெகு காலமாய்த் தீங்குகளுக்கு இடங்கொடுத்து விட்டோம். இவைகள் நம்முன்னேற்றத்துக்குக் குறுக்கு நிற்கிறவைகள். இதுவரையில் நாம் காட்டிவந்த அசட்டைக்காகத் தண்டனை இறுத்துவிட்டோம். அநேக நூற்றாண்டுகளாக நமக்கும் நமது குழந்தைகளுக்கும் நாம் செலுத்தவேண்டிய கடமைகளின் வழியினின்றும் தவறிப்போய் விட்டோம். நாம் மற்றத் தேசத்தாரினின்றும் பிரிவுபட்டிருந்த காலம் வரையிலும், நம்முடைய சீர்கேட்டின் பலம் வெளிப்படவில்லை. ஆனால், இப்போது மேற்தேசங்களோடு நமக்குச் சகவாசம் ஏற்பட்டபடியால், நம்முடைய வீழ்வு எவ்வளவு ஆழமாயும் செங்குத்தாயு மிருக்கிறதென்று நமக்கு வருத்தமுண்டாகும்படி காட்டிவிட்டது. நம்முடைய கீழ்நோக்கை நாம் அறியாதிருந்த வரையில், நம்முடைய வீழ்வுக்குக் காரணமா யிருந்த நம் குறைகளை நாம் அறியாதிருந்த வரையில், நம்முடைய அசட்டைக்காகவும் சுறுசுறுப்பின்மைக்காகவும் நாம் மன்னிக்கப்படலாம். ஆனால் இப்போதைய நிலைமை எவ்வளவு அபாயகரமா யிருக்கிற தென்பதையும் அதற்குக் காரணங்கள் எவையென்பதையும் பற்றி நாம் நன்றாய்த் தெரிந்து கொண்ட பிறகு, நாம் இன்னும் அசிரத்தையா யிருப்போமானால், மன்னிக்க வொண்ணாத குற்றத்தைச் செய்தவர்க ளாவோம். எந்த சமூகக் கூறானது

அதன் தனியான அவயவிகளுக்கு நியாயமான காரிய சுதந்திரம் கொடுக்கவில்லையோ, அல்லது தன்னுடைய மொத்த பலத்துக்கு விரோதமாய் அதன் தனியான பாகங்களை தளர்ச்சி யடைய விடுகின்றதோ, அத னுடைய பிரிவு பட்ட அமிசங்களை ஒன்று சேர்த்துக் கட்ட எதற்குச் சாமர்த்தியமில்லையோ, அது அதன் கீழ் வசிக்கும் ஜனங்களுடைய முழுப் பரிணமத்துக்கும் தகுந்ததாகாது. எந்த சமூகத்தின் கீழுள்ள ஜனங்கள் எல்லாருடைய மொத்த நன்மைக்காகச் சேர்ந்து உழைக் கும் பொருட்டு, ஒன்றாய்ச் சேரச் சுதந்திரம் பெற் றிருக்கவில்லையோ, அந்த சமூகம் நாகரிகத்தில் உயரு தல் சாத்தியமல்ல. நம்மை ஜாதிகளாகவும் ஜாதி உட் பிரிவுகளாகவும் பிரித்து, அதற்குத் தகுந்த அந்தஸ் தைக் கற்பித்திருக்கிற ஒரு ஏற்பாட்டை வளர்த்து வந்திருக்கிறோம். இந்த ஜாதியினுடையவும் இந்த ஜாதி உட்பிரிவினுடையவும் அவயவிகள் ஒருவருக் கொரு வர் விவாகம் செய்து கொள்ளவாவது சமபோஜனம் செய்யவாவது இடம் பெற்றிருக்கவில்லை. பின்னும், இந்தப் பிரிவினையை முற்றுப்படுத்துவதற்காக அவை கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு குறித்த தொழில் ஏற்பட் டிருக்கின்றது. அதனால் அதைச் சேர்ந்தவர்களில் விசேஷ ஆசை கொண்ட எவனும் உயர்ந்த லக்ஷியத் தைப் பின்பற்றச் சமர்த்தனில்லாதவ னாகிறான். முன் னேற்றத்திற்குத் தடையாக மனுஷனுடைய யுக்தி இதைவிட வேறொன்றைச் சிருஷ்டித்திருக்குமா ? ஒரு ஜாதியினுடைய சரீரத்தை இன்னும் இதைவிட அதிக மாய் அறுத்துச் சோதித்திருக்கக் கூடுமா ? இந்தக்

குரூரமான செய்கைக்கு இவ்வளவு காலம் நாம் சம்மதித்திருப்பது ஆச்சரியமாயிருக்கின்றது. பாரத வருஷமாகிய இத்தேசத்தைவிட வேறெத் தேசத்திலும் 'பலந்தான் நியாயம்' என்ற பிரமாணம் உறுதி பெறவில்லை. ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும சமத்துவம் வேண்டுமென்று போதிக்கிறோம். நம்முடைய ராஜீயத் தர்க்கத்திலெல்லாம் சமானமான சுதந்திரத்தையும் பாத்தியத்தையும் கேட்கிறோம். ஆனால், நம்முடைய வீட்டில் நம்முடைய ஸ்திரீகளைச் சூறநியிருக்கும் அடிமைத்தன்மையை நீக்க நமக்குச் சக்தி இல்லை. நம்முடைய சமூகத்தில் தாழ்ந்த வகுப்பாரென்று சொல்லப் படுவோரை மனிதரென்று கருதி நடத்த நமக்கு இஷ்டமில்லை. தண்டனை இங்கேதா னிருக்கின்றது. வருகிற சென்ஸஸில் நம்முடைய தாழ்ந்த சகோதரராகிய இவர்களை ஹிந்துக்களோடு சேர்க்கக்கூடாதென்பதற்கு நியாயமாக, இந்தத் தகாத வித்தியாசத்தைச் சிலர் எடுத்துக் காட்டுவது ஆச்சரியமல்ல. இந்தப் பிரேரணையை நான் பலமாய் ஆட்சேபிக்கிறேன். இந்தத் தாழ்ந்த வகுப்பாரென்று சொல்லப்படுவோர்கள் நமது ஜாதியில் ஒரு பாகம். இவர்களை நம் சகோதரர்களாகத் தழுவிக்கொள்ள நமக்குச் சமுசயம் இருக்கக்கூடாது. முக்கியமாய், நம் மதத்திலிருந்து அன்னிய மதத்தைத் தழுவி, அங்கு தனியாய் வசித்து, மனம் சலித்துப் போனவர்களை நமது மார்பில் தழுவி, மறுபடியும் ஏற்றுக்கொள்ளும் புனிதமான கடமையை நாம் அங்கீகரித்துக்கொண்டுவிட்டபடியால், இந்தத் தாழ்ந்த வகுப்பாரை நம் சகோதரர் போல் அங்கீகரிப்பது அவசியம்.

இன்னும் அநேக தீங்குகளோடு நாம் போராட வேண்டியிருக்கின்றன. அவைகளை ஒவ்வொன்றாய்ச் சொல்லிக்கொண்டு போவதென்றால் உங்களுடைய பொறுமைக்குப் பளுவாயிருக்கும். இந்த விஷயமாய் உன்னத ஸ்தானத்திலுள்ள இந்தியர்கள் எழுதின பல நூல்கள் இருக்கின்றன. இன்னும் நமது சகோதரர் மனதில் அவநம்பிக்கை இருக்குமானால், நான் இங்கே எவ்வளவு சொன்னாலும் அது தீராது. ஆசாரத் திருத்தத்தைப்பற்றிச் சமுசயங்கொள்வது இக்காலத்தில் விநோதமாயிருக்கும். அந்தச் சமுசயம் இன்னும் எங்கேயாவது இருக்குமானால் அதை நான் பிடிவாதமென்று சொல்லுவேன். "புதிதாய்க் கண்டுபிடிக்கும் சாமர்த்தியம் செலவாகிவிட்டது; நியாயம் தளர்ந்து போயிற்று; அனுபோகம் தீர்ப்புச்சொல்லி விட்டது; ஆனால், பிடிவாதமோ வெல்லப்படவில்லை." என்று எட்மன்ட்பர்க் சொன்னது இம்மாதிரி விவகாரத்துக்குச் சரியாய் ஒக்கும்.

சீமாட்டிகளே! சீமான்களே! நமக்கு முன்னேயிருக்கும் பிரசினையானது நாம் இனி எந்த வழிச் செல்வது என்பது. நாம் எதைப் பார்த்து எதைச் செய்கிறோமோ அதிலே திருப்திகொண் டிருப்பதா? அல்லது புது ஆயுதங்கள் தயார் செய்து, புது வழிகளை யனுஷ்டித்துப் புதுத் தந்திரத்தைப் பின் தொடர்வதா? இது வரையில் நாம் செய்து வந்த சண்டையானது வியர்த்தமாகப் போகவில்லை. நாம் பெரும் வெற்றி யடைந்திருக்கிறோம். அதைப் பற்றி நாம் ஏன் பெருமை யடையக்கூடா தென்பதற்குச் சிறிதேனும் நியாய

மில்லை. தேசத்தில் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஊக்கமும் சலனமும் இருக்கின்றன. தேகந் தெரியாமல் தூங்குகிறவனுங் கூடத் தலையணையில் தலையைப் புரட்டுகிறான். சப்தமும் அசைவும் எலும்புகள் ஒன்றாய்ச் சேருதலும் உண்டாகின்றன. ஆனால், இன்னும் உயிர் உண்டாகவில்லை. “நான்கு திக்குகளிலிருந்தும் காற்றினின்றும் வரும் சுவாசம் இந்த இறந்து போனவர்களின் மீது பட்டு, அவர்கள் உயிர்த் தெழட்டும்” என்ற வார்த்தையானது சொல்லப்பட்டுப் போயிற்று. நம்முடைய குரலானது இந்தப் பந்தலிற்குள்ளே இராமல் இந்தத் தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் இதுவரையிலில்லாத அதிகாரம் பெற்றுத் தொனித்துப் பிரதித்தொனியும் செய்கின்றது. அநேக ஜாதி சபைகள் கூடப்பட்டு, அவைகள் வகுப்பு பேதத்தை வற்புறுத்துகின்றனவாய் இகழ்ச்சிக்கு ஏதுவாயிருந்தாலும், நம்முடைய காரியஸ்தர்கள் போல உண்மையானதும் சொல்லத் தகுந்ததுமான வேலையை நடக்காகச் செய்து வருகின்றன. நாம் உதட்டுத் திருத்தக்காரர்களென்று சொல்லத்திருக்கும்படி உதாரணங்கள் இல்லாமற் போகவில்லை. வெங்காளிக் கனவானாயிருக்கும் உயர்ந்த அந்தஸ்துள்ள குலீன பிராமணனொருவன் தன்னுடைய குமாரன் விவாகத்துக்காக வரதக்ஷிணை வாங்குவதை யொழித்து விட்டு, உயர்ந்த மாதிரியாய் நடந்துகொண்டான். அதற்காக அவனிடத்தில் நான் அதிக வியப்புறுகிறேன். வரதக்ஷிணையை அதிகமாகக் கேட்காமல் விவாகப் பெண்ணினுடைய தகப்பனிடத்திலிருந்து ஒரு வாக்குறுதி வாங்கினான்.

ஆகாவது அவன் பிள்ளைக்கு விவாகமாகும்போது, விவாகத்தினுடைய கம்பீரத்தைப் பண ஆசையானது கெடுக்கக் கூடாதென்றும், எதிர்த்த கட்சியிலும் அதே மாதிரி கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டுமென்றும், அதேமாதிரி அந்த ஒழுங்கு மேலும் மேலும் அனுஷ்டிக்கப்பட்டு வரவேண்டு மென்றும்,வாக்குறுதி செய்து கொண்டான். ஆசாரத் திருத்தத்தை முற்படுத்துவதற்காக இது தன் சொந்த நன்மையை மறுத்ததாகும். வெங்காளக் கனவான் தன் சொந்தக் காரியத்திற் செய்த இந்த உதாரணத்தை இந்தப் பந்தலி லிருக்கும் நாமெல்லோரும் பின்பற்றி நம்மில் பெண்பிள்ளை பிறந்ததா லுண்டாகும் துக்கத்தை நிவர்த்தி பண்ணிக் கொள்வோமாக.

நல்ல வேளையாய் ஜனங்கள் இப்போது ஸ்திரீகளின் கல்வி விஷயத்தில் அசிரத்தை காட்டுகிறவர்களா யில்லை. அந்த வழியில் நாம் எவ்வளவு செய்து வந்தபோதிலும் அது இன்னும் திருப்திகரமாய் முடியவில்லை. இந்த வழியில் நாம் செய்து வரும் காரியங்களை கூடுவதைப் பற்றினதாய் நம்முடைய தேசத்தின் மறு பிறப்பு இருக்குமென்பதை நாம் மனதில் வைக்க வேண்டும். நாம் இது வரையில் செய்ததைவிட நமது ஸ்திரீகளைப் படிக்க வைப்பதில் நாம் இன்னும் அதிகமான தீவிரத்தையும் அக்கரையையும் காட்டக் கடவோம். நம்முடைய மற்றப் பாலாருக்குள் படிப்பு விர்த்தியாய் அறிவு பரவுவதை விட, ஆசாரத்திருத்தத்துக்குள்ள பல சக்திகளைப் பலப்படுத்தத் தக்கது ஒன்றுமில்லை. உண்மையில், அதுதான் திருத்தப் பிரசினைக்கு

முடிவாகவும் முன்னேற்றம் அனைத்திற்கும் ஆதாரமாக வும் இருக்கின்றது. நம்முடைய ஸ்திரீகள் முகத்தில் தொங்கும் திரையை அறிவாகிய ஒளியானது ஊடுருவிச் செல்லக்கூடும். நம்முடைய தேசத்தின் பிராண உதிரத்தையே பருகிவரும் தீங்குகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்.

ஸ்ரீ காசியில் நாம் எதிர் பார்த்திராதபடி வைதிக கோஷ்டியி லிருந்து சமுத்திர யாத்திரை செய்வது சரியென்று ஒப்புக்கொள்ளப்பட் டிருப்பதை நான் இங்கே தெரிவிக்கிறேன். அதற்குத் தலைவர் சுதாகர் துவிவேதி. அவர் இறந்துபோனதைப்பற்றி நாம் எல்லோரும் துக்கிக்கிறோம். கொஞ்ச நாள் முன்னால் அங்கு நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பண்டித சுதாகர் அன்னிய யாத்திரை செய்யலாமென்று வியக்தமாய்ச் சொன்னார். இந்த ஆசாரத்திருத்த நிகழ்ச்சியானது பிறந்த பிறகு, அது செய்திருக்கும் முன்னேற்றத்துக்கு இந்த சாக்ஷி போதாதா? அது வேகமாயில்லை யென்று நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், முன்னேற்றமானது எங்கு ஸ்திரமா யிருக்கிறதோ அங்கு மெதுவாய்த்தா னிருக்கவேண்டும். நம்மவரில் சிலர், ஒரு நூற்றாண்டில் ஆகவேண்டிய வேலையைப் பத்து வருஷத்தில் ஆகவேண்டுமென்று அவசரப்பட்டு, இந்த வேலையைச் சுருக்க ஆத்திரப்படுகிறார்கள். அது நல்ல எண்ணத்தாற் செய்யப்படுகிற தென்பதில் ஆட்சேபமில்லை. ஆனால், ஒரே குதிப்பாய் பெரும்பான்மையான ஜனங்களிடத்தி லிருந்தும் முந்திய காலச் சரித்திரத்திலிருந்தும் எல்லாச் சம்பந்

த்தையும் அறுத்துக்கொள்வது, ஒன்றும் செய்யாமல் சும்மாயிருக்கவேண்டுமென்று சொல்லுகிற வைதிகக் கட்சியைப்போல, ஆசாரத் திருத்தத்துக்கு விரோதமாயிருக்கும். இந்த வைதிகச் கட்சியானது வரவரக் குறைந்து வருகிறது. திருத்த நிகழ்ச்சிக்கு நாம் இதற்காக நன்றி செலுத்தவேண்டும். வழக்கங்கள் உணர்ச்சிகள் ஸ்தாபனங்கள் முதலியவைகள் நீண்ட சரித்திரத்தின் பலன்கள். இவைகளை ஒரு நாளில் மாற்றுவது சாத்தியமல்ல. இங்குமங்கும் ஒவ்வொருவர் நுகத்தைத் தள்ளிவிடக்கூடும். ஆனால், அவர்கள் செய்கையானது தன்னலம் பேணுவதாயிருக்குமேயல்லாமல், தேசாபிமானத்தைக் காட்டக்கூடியதல்ல. மூட பக்தியில் உழலும் பாமர ஜனங்களைத் தூக்கி விடாமல் சமூக வாழ்க்கையில் சுகமாய் வாழ்ந்து வருவது தன்னலம் பேணுவதாகாதா ? உன்னதமா யிருக்கத்தக்க விருப்பங்களும் மேன்மையான லக்ஷியங்களும் யோக்கியமான ஆசைகளும் அவைகளை நிறைவேற்றும்போது, என்ன சந்தர்ப்பங்கள் தோன்றுகின்றனவோ அவைகளுக்குத் தக்கபடி அடக்கப்படவேண்டும். மெதுவாய் மாறிக்கொண்டு போவதேயன்றிப் புரட்சி செய்வது நமது வழியல்ல.

சீமாட்டிகளே ! சீமான்களே ! நம் மத்தியில் சேர்ந்துபோன தீங்குகளின் குவியல்களைப்பற்றிக் கவனிக்க மாத்திரமல்லாமல், சிருஷ்டியின் மாற்றவொண்ணாத பிரமாணங்களுக்கு விரோதமாக நாம் தினப்படி செய்யும் பாவங்களை ஒப்புக்கொண்டு, மன்னிப்புப் பெறுவதற்காகவும் 'தீர்த்த ராஜா' என்ற இந்த யமுனையும்

கங்கையும் கூடிச் சங்கமமாகிய புண்ணிய ஸ்தலத்தில் கூடி யிருக்கிறோம். ஆனால், நாம் இன்றைக்குப் போதிக்கப் போகும் உண்மைகளைக் கண்டிப்பாய் நாமே அனுஷ்டித்தா லன்றி, நாம் நம் பாவங்களை ஒப்புக் கொள்கிறதும் இந்தப் புண்ணிய நதியில் மூழ்கிறதும் நாம் விதைத்ததின் பயிராகிய கசப்பும் விஷமுமான பலன்களி னின்றும் நம்மை மீட்க. நமக்குப் பலமான விரோதிகளோடு சண்டை செய்ய வேண்டி யிருக்கிறது. சண்டை செய்தே தீரவேண்டும். சண்டை பலமா யிருந்தாலும் வெற்றி பெருமை தருவதாகும்.

இந்தக் கடமையை மேற் பூணும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கடமை நமது தேசத்துக்கு ஒழுக்கத்தில் மறு பிறப்பு வேண்டுமென்கிற கடமை. அது நம்முடைய பெரிய விருப்பங்களுக்குப் பொருந்தியது. இப்படி நான் வேண்டிக் கொள்வதற்கு மனப்பூர்வமான பதில் கிடைக்காவிட்டால் என்னைக் கேட்டுக்கொண் டிருக்கும் உங்களுடைய குணத்தையும் என் தேசத்தாருடைய குணத்தையும் தப்பாகக் கிரகித்தவனாவேன். இந்த வேலையை நீங்கள் செய்து முடிப்பீர்களானால், சரித்திரத்தின் அழியாத பக்கங்களில் பொன்னெழுத்துக்களால் அலங்கரித்து எழுதப்படுவது மன்றி, இன்னும் பிறந்திருக்காத தலை முறைகள் உங்களை வாழ்த்தும்படியாகப் பிற்காலத்திலும் உங்களுடைய பெயர் நிலை நிற்கும்.

பாரத ஸ்திரீ மகாமண்டலம்.

மிஸஸ் சாரளதேவி சௌதரணியின் பிரசங்கம்.

சென்ற 1910 - ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 30 - ஆம் தேதி அலகாபாத்தில் எல்லா இந்தியா ஸ்திரீ சங்கத்தின் முன்பாக மிஸஸ் சாரள தேவி சௌதாணி B. A. செய்த உபந்நியாசம் பின் வருமாறு:—

" தொட்டி லாட்டுங் கரமே தரணியாளுங்கை " நீங்கள் விரும்பினாலும் சரியே, விரும்பாவிட்டாலும் சரியே ; நாமே (ஸ்திரீகள்) ஆளுவோம். தகுதியோடும் திறமையோடும் ஆளுபவர்களாக நம்மை நாம் செய்துகொள்ளும் பொருட்டே, தகுந்த ஆளுபவர்களை நாம் சேகரித்துக் கொள்ளும் பொருட்டே, இந்திய ஜனசார (Sccial) பிரபஞ்சம் இன்னும் நன்றாய்ப் பரிபாலனம் செயயப்படுவதின் பொருட்டே, " பாரத **ஸ்திரீ மஹா மண்டலம்** " ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

எப்படிப்பட்ட தேசமா யிருந்தபோதிலும் சரியே ; அது அதனுடைய ஸ்திரீகளின் பிராபல்யத்திற்கு மேற்பட்டு நிற்கமுடியாது. அந்தப் பிராபல்யம் தூங்கிக்கொண்டே இருக்குமானால் தேசம் ஒருக்காலும்

பூரண விழிப்புடன் இருக்கவே முடியாது. ஆகையினால், முதல் முதல் இந்திய ஸ்திரீகளுக்கு வேண்டப்படுவன யாவை யெனில் 'நான் இருக்கிறேன்' என்னும் தன்னுணர்ச்சியும், 'நாம் இருக்கிறோம்' என்னும் தொகுதி யுணர்ச்சியுமே யாம். பரமன் உறக்கங் கொண் டிருக்கிற வரையில் சிருஷ்டித் தொழில் நடைபெறாமல் நின்றுபோ யிருக்கும், இந்திய ஸ்திரீகளுக்குள்ளிருக்கும் சிருஷ்டி கர்த்தா ஆசாரத் திருத்த முயற்சிகள் ஆரம்பமாகு முன்னரே, எழுந்து கண் விழித்துக் கொள்ளவேண்டும்.

பெரிய மகானாகிய பதஞ்சலி முனிவர், "வார்த்தைகளுக்கு இயற்கையாகவே சக்தி யிருக்கின்றது" என்று தம்முடைய யோக சூத்திர மொன்றில் கூறுகிறார். சரியான வார்த்தைகளைத் தெரிந்தெடுத்து அவைகளைச் சரியான வழியில் உபயோகித்தால், சரியான நோக்கம் சித்திபெறுகிற விஷயத்தில் அவைகள் மிகவும் உதவி புரிகின்றன. உதாரணமாக 'அச்சம்' என்கிற வார்த்தையை எடுத்துக்கொள்ளுவோம். அந்த வார்த்தையைச் சாதாரணமாய்ச் சொன்னவுடனேயே, அது கேட்போர் மனதில் ஒரு விதமான உணர்ச்சியைக் கிளப்பிவிட்டு, அவர்களுக்குக் கலக்கத்தை உண்டு பண்ணுகிறது. ஆனால் 'அஞ்சாதே' என்று சொன்ன மாத்திரத்தில் முன்பு பிடித்திருந்த கலக்க உணர்ச்சி நீங்கி விடுவதோடுகூட, ஒடுங்கிப் போயிருந்த இருதயம் மறுபடியும் அகன்று விரியத் தலைப்படுகிறது. வெகு காலமாக இந்திய மாதர்கள் இவ்வுலகத்தில் தங்களைத் தாங்களே ஒரு பொருட்டாக மதிக்காமல்

இருந்து வந்தார்கள். தினப்படி நடக்கும் குடித்தன விஷயங்கள், தாங்கள் ஒன்றிலும் கணக்கில்லாத வர்க ளென்னும் எண்ணத்தை ஸ்திரீகளின் மனதில் பதியும்படி, பலவகையாலும் செய்துவிட்டன. ஒரு குடும்பத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்துவிட்டால், அந்தச் சந்தோஷ சமாச்சாரத்தை உலகத்தாருக்கு அறிவிக்க, வீட்டில் மேளவாத்தியம் முழங்குகிறது. சிநேகிதர்களுக்கும் உறவினர்களுக்கும் சர்க்கரை வழங்குகிறார்கள். இந்தச் சந்தோஷச் செய்தியை அறி விக்கும் தூதனுக்கு வெகுமதி கொடுக்கிறார்கள். இன் னும் இவைபோன்ற பல காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் ஒரு சிறு பெண் குழந்தை முதல் முதல் உலகத் தில் பிரவேசித்துத் தன்னுடைய தாயின் பக்கத்தில் பிரசவ அறையில் கிடந்தாலோ யாதொரு கேள்வி முறையுமில்லை. எல்லாம் நிசப்தமாயிருக்கிறது. வழக்கப் படியே வீட்டுக் காரியங்கள் நடைபெறுகின்றன. வீட் டில் புது சம்பவம் எதுவும் நிகழாததுபோலவே ஒவ் வொருவரும் நடந்து கொள்ளுகிறார்கள். புதிதாக எவரும் வந்து அக்குழந்தையைப் பார்க்கிறதில்லை. சுருக்கிச் சொன்னால், ஒரு ஸ்திரீ உலகத்தில் பிரவேசிப் பது கணக்கில் சேர்ந்த நல்லவென்பதைப் போலவே கருதப்படுகிறது. இப்படியே அவளுடைய ஜீவியத்தில் சம்பவிக்கிற ஒவ்வொரு விஷயமும் அலட்சியம் செய்யப் படுகிறது. ஆகவே, இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சிறு பெண்ணும், ஒரு பெரிய ஸ்திரீயாக வளர்ந்த பிறகு, "நான் தான் ஒன்றிலுஞ் சேராதவளாயிற்றே? என்னைப் போன்ற அநாமதேயர்களால் என்ன செய்யக்கூடும்?"

என்று தன்னைத் தானே தாழ்த்திக்கொள்ளுவது ஒரு ஆச்சரியமல்ல. இப்படிப்பட்ட எண்ணங்களையே இடைவிடாது நினைத்து, இப்படிப்பட்ட வார்த்தைகளையே இடைவிடாது உச்சரிப்பதால் நம்நாட்டு ஸ்திரீகள் தங்களைத் தாங்களே ஒன்றுக்கு முதவாமற் செய்து கொண்டு, அனுபவசித்தத்தில் குடித்தனத்தையோ, அல்லது சமூகத்தையோ, அல்லது தேசத்தையோ ஆளுவதில் நன்மையான காரியம் எதையுமே செய்யாமற் போய் விடுகிறார்கள்.

ஓ! என் சகோதரிகளே, விஷயங்களைப்பற்றிப் பிறழ்ந்த உணர்ச்சி எவ்வளவு அதிகமாய் இருந்து வருகிறது. தான் செய்த பிசகுகளுக்காகத் தேசம் எவ்வளவு வருந்தவேண்டியிருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒரு சிறு பெண் குழந்தை பிறப்பதைச் சிறுமையாய் நினைப்பதற்குப் பதிலாக, அலட்சியம் செய்வதற்குப் பதிலாக, ஒரு பொருட்படுத்தாமல் இருப்பதற்குப் பதிலாக, சரியான காலத்தில் உலகத்தை ஆளுவதற்காகக் கையிற் செங்கோலுடனே பிறந்திருக்கும் ஒரு சிறிய விக்டோரியா ராணி யென்று அக்குழந்தையை மதித்து, அப்படிப் பிறந்திருக்கிற உணர்ச்சி அக்குழந்தைக்கு உண்டாகும்படிச் செய்யவேண்டும். ஏனெனில், பின்னால், தான் ஆளவேண்டியதற்காக இப்போதே தன்னைப் பழக்குவித்துக்கொள்ளும் பொருட்டுத் தன்னிலும் மூத்தவர்களோடு சேர்ந்து விஷயங்களை அறிந்து கொள்ள அப்போதுதான் அக்குழந்தைக்கு ஏதுவாகும்.

ஸ்திரீகள் தங்களுடைய தற்பெருமையை உணருவதற்கும், தாங்கள் எதற்காகப் பிறந்திருக்கிறார்

கலை அந்தக் காரியத்தை நிறைவேற்றுவதற்கும் முதல்படி என்னவென்றால் "நான் இருக்கிறேன்" "நாங்கள் இருக்கிறோம்" என்கிற வார்த்தைகளை இடைவிடாது உச்சரித்துக்கொண் டிருப்பதுதான். அதன் பிறகு " எதற்காக நான் இருக்கிறேன் ? " " என்ன காரியத்துக்காக நாம் இருக்கிறோம் " என்கிற கேள்விகள் நம்முடைய மனதில் உதிக்கவேண்டும். " தனித்து நான் செய்யக்கூடிய தென்ன ? ஒன்று சேர்ந்து நாம் செய்யவேண்டிவ தென்ன ? ஸ்திரீ என்ற வகையில் நான் செய்யவேண்டிய கடமை யென்ன ? ஸ்திரீகள் என்ற வகையில் நாம் செய்யவேண்டிய கடமை யென்ன ? உலகத்தின் மற்ற பாகத்து ஸ்திரீகளை நீக்கி இந்திய ஸ்திரீகள் என்ற வகையில் நாம் செய்யவேண்டிய கடமை யென்ன ? " என்பதைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும்.

நம்முடைய வாழ்நாளின் நோக்க மென்ன ? அந்த நோக்கத்தை நிறைவேறும்படிச் செய்வதற்கு நாம் செய்யவேண்டிய காரியமென்ன ? என்கிற எண்ணம் அதன் பிறகு உதிக்கவேண்டும். இதை அறிந்து கொள்ளுவதற்கு நாம் இயற்கையை (Nature) க்கவனித்து அதை நம்முடைய தேவைக்குத் தகுந்த விதமாய்ச் செய்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நாம் நமது சரீர அமைப்பினை ஊன்றி நோக்குவோமாயின் அதில் மூன்று முக்கியமான அம்சங்கள் இருக்கின்றன என்பதை அறியலாம். அவையாவன:—(1) பஞ்சேந்திரியங்கள், (2) நரம்புக்கூட்டங்கள், (3) சதை. வெளியி லிருந்து ஏதாவது ஒரு வஸ்து

பஞ்சேந்திரியங்களுள் ஒன்றின்மேல் படுமானால், உதாரணமாக ஒரு கடின பதார்த்தம் ஒரு அவயவத்தைத் தாக்குமானால், அந்த அவயவத்தில் ஒருவிதமான மாறுபட்ட உணர்ச்சி உண்டாகி, அந்த உணர்ச்சி நரம்புக் கூட்டங்களின் வழியாய்ச் சென்று, உள்ளிருக்கும் சதையைத் தாக்க, தேகத்தின் எந்தப் பாகத்தில் அந்த வஸ்து பட்டதோ அந்தப் பாகம் சுருங்கவோ அல்லது விரியவோ காண்கிறோம். ஆகவே நரம்புக் கூட்டங்கள் ஸ்பரிச இந்திரியத்துக்கும் தசைக்கும் உணர்ச்சியை உண்டாக்கக் கூடிய ஸ்பரிச அணுக்கூட்டங்களால் ஆகியவை என்று ஏற்படுகிறது.

இந்த மண்ணுலகத்தில், வெளியிலிருந்து விஷயங்களைச் சகவாசத்தினால் கிரகித்து, இந்த சரீரத்தில் ஸ்பரிசேந்திரியத்துக்குச் சமானமானவர்கள் சிலரும், சதையைப் போலச் சிலர் இருந்து விஷயங்களைக் காரியப்படுத்தக்கூடிய மனிதர்கள் சிலரும் இருக்கிறார்கள். நரம்புக் கூட்டங்களை யொத்துச் சிலர் இருக்கிறார்கள். நம்முடைய மகாமண்டலத்தைப் போன்ற சங்கங்களும், கூட்டங்களும், ஸ்தாபனங்களுமே நரம்புக் கூட்டங்கள் செய்யும் வேலையைச் செய்யவேண்டும். அப்படிச் செய்து பலவகையான ஆலோசனைக் கூட்டங்களாக மேற்படி சங்கங்களைச் செய்து காரியப்படுத்தவேண்டும்.

இதுவரையில் ஸ்திரீகளின் மதக்கூட்டங்களும் மாகாணக்கூட்டங்களும் உண்டாயிருக்கின்றன. இவைகள், சிறு உணர்ச்சிமட்டும் உடைய மீன்களின் நரம்புக் கருவிகளை ஒத்திருக்கின்றன. ஆனால் இந்தச் சாதாரண

நரம்புக்கூட்டங்களை பெரிய மிருகங்களிடத்தில் பல வகையாகி விகாரப்படுகின்றன. அதைப் போலவே சாதாரண மாதர் சங்கங்களிலிருந்து இந்த பாரத ஸ்ரீமகா மண்டலம் பரிணமித்திருக்கிறது. எப்படி சாதாரண உணர்ச்சியிலிருந்து ஏனைய உணர்ச்சிகள் பேதமுறுகின்றனவோ, அப்படியே இந்த மண்டலமும் அநேக கிளைகளையுடையதாய் ஒவ்வொருவர் செய்வதைத் தவிர்த்துப் பலர் ஒன்றுகூடி செய்யக்கூடியதாகவேண்டும்.

ஆதலால் இந்த பாரத ஸ்ரீமகா மண்டலமும் ஸ்திரீகளுள் முன்னேற்றத்தை உத்தேசிப்பவர்களையும் உருவகப்படுத்துகிறவர்களையும் ஜாதிமத பேதமின்றி ஒன்று சேர்க்கக்கூடிய மத்திய ஸ்தானமாக இருக்க வேண்டும். நாம் இப்படிப்பட்ட மண்டலங்களை ஸ்தாபனஞ்செய்வதாலும், அடிக்கடி கூட்டங்கள்கூடிப் பேசுவதாலுமே நம்முடைய காரியத்தைச் சாதிக்க வேண்டும்.

மேலான நோக்கங்களில் எண்ணம் வைத்தல் ஒன்றே நம்மை முற்படுத்தவும் வேலை செய்பவும் சொல்லாதோ? இன்னும் பத்திரிகைகள் மூலமாகப் பல விஷயங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்த பிறகு சிறிதுகாலம் சென்ற பின் பலரும் ஒன்று கூடி, ஜன சமூகத்தின் விருத்தியை உத்தேசித்து கூடிப் பேசிக் களித்து உறவாடுவோமேயானல், மேலும் மேலும் நம்மை நன்மை செய்யும்படி அந்தக் கூட்டுறவு தூண்டாதோ? இந்தியாவின் பல பாகங்களிலுள்ள ஸ்திரீகளும் ஓரிடத்தில் ஒன்றுகூடித் தங்களுக்குள் ததும்பிக்

கொண்டிருக்கும் எண்ணங்களை வெளியிட்டும், தாங்கள் அனுபோகத்தில் கண்டறிந்த விஷயங்களைப் பகிரங்கப்படுத்தியும் பேசுவார்களானால் அப்படிப் பேசுவது ஒவ்வொருவர் அடைந்த பலனையும் நமக்கு அறிவித்து அதைப் பாராட்டும்படியாக நம்மைச் செய்து நம்முடைய இருதயத்தை விசாலப்படுத்துவதோடு ஒவ்வொருவருடைய வழியிலும் காணப்படும் கஷ்டங்களை நம்மை யறியும்படிச் செய்து நாம் அனுதாபம் பாராட்டும்படியும் செய்யாதா? இதனால் பல சங்கடங்கள் நீங்க ஏதுவாகுமன்றோ? இவ்விதமாக இந்த மகா மண்டலமானது பல பாகங்களில் சிதறுண்டு போயிருக்கும் சக்திகளை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பலனைத் தரக்கூடிய நல்ல வேலையில் பிரவர்த்திக்கும்படிச் செய்யும் இந்த மண்டலம் ஒரு மின்சாரக் களஞ்சியம்போலிருந்து நாலா பக்கத்து அனுபவங்களான சக்திகளை யிழுத்து தேசம் முழுவதும் கல்வி வெளிச்சத்தைப் பரப்பும்.

இந்தியாவின் பல ஜாதிகளும், பல பாகங்களும் மலைகளாலும், ஆறுகளாலும், வனாந்தரங்களாலும், கடலாலும், பிரிக்கப்பட்டு சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் தனியா யிருந்தன. மனிதனுடைய முயற்சியினால் கண்டு பிடிக்கப்பட்ட நீராவி யந்திரங்களும், மின்சாரமும், அப்படிப் பிரிந்திருந்த பல ஜாதிகளையும் பாகங்களையும் பாலங்களாலும், மதகுகளாலும், கால்வாய்களாலும், தந்திகளாலும், படகுகளாலும், ரயில் பாதைகளாலும் ஒன்று சேர்த்து விட்டன. இவ்விதம் இந்தப் பெரிய தேசத்தின் பல பாகங்களும் ஒன்று

சேர்க்கப்பட்டும், பல ஜாதியாரும் ஒரே அரசாட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டும் இருப்பதானது, இந்திய ஜனங்களுக்குள் ஒழுக்க ஒற்றுமையையும் உண்டாகக் கூடியது சாத்தியம் என்கிற தெய்வீக சம்மதத்தைக் காட்டுகிறது. கடவுளின் பிரதமமான பிரஜைகள் என்று இந்துக்களாகிய நாம் சொல்லிக் கொள்கிறோம். நம்முடைய வேதங்களும் புராணங்களும் கடவுளிடமிருந்தே நேரில் உற்பவித்தன என்று கூறுகிறோம். கடவுள் நம்மை ஏன் இவ்விதம் தெரிந்தெடுத்தார் என்பதை இன்னும் ஆராய்வோமானால் மற்ற ஜனங்களை ஆசீர்வதிக்கவே கடவுள் நம்மைத் தெரிந்தெடுத்தார் என்று ஏற்படும். ஆனாலும் அளவிடுவதற் கரிய இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொருவரிடத்திலுமிருந்து அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் சிலவற்றை ஒவ்வொருவரிடத்திலும் அமைத்து வைத்திருக்கிறார் என்பதை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். ஆகவே இந்த பாரத ஸ்திரீ மகாமண்டலத்தில் இந்தியர்கள் மட்டுமல்ல; இந்து ஆரியர்களும், இந்து பூர்வீகர்களும், இந்து மங்கோலியர்களும், ஆங்கிலோ இந்தியர்களும் கலக்கவேண்டும். கொள்கை, ஜாதி, மதம், இராஜீய சம்பந்தம் என்னும் பேத உணர்ச்சியை ஒழித்து, ஒருவர்க்கொருவர் நன்மையின் பொருட்டு கலந்துழைக்கும்படி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இந்த பாரத மகாமண்டலம் பல பாகங்களிலிருந்து சமுத்திரத்திற் செல்லும் நதிகளைப்போல், பல ஸ்திரீ சங்கங்களைத் தனக்கு அங்கங்களாகக்கொண் டிருக்கவேண்டும்.

முறையை அறிந்து அதன்படி நடக்கவேண்டும். அன்பும் துணையுமான மனைவியா யிருப்பதற்கு, புருஷனுக்கு ஆலோசனை சொல்லி அவனோடு ஒத்துழைப்பதற்கு, மனைவி உலக விவகார ஞானமுடையவளாயிருக்க வேண்டும்.

மனைவி புருஷனிடத்தில் மட்டும் அன்புடையவளா யிருந்தால் போதாது. புருஷனுக்கு எந்த விஷயங்கள் ஊக்கத்தைக் கொடுக்கின்றனவோ அந்த விஷயங்களில் அவளும் ஊக்கங் காட்டிப் புத்திசாலித் தனமாய் நடந்துகொள்ளவேண்டும். இவையெல்லாம் கல்வியில்லாமல் சாத்தியமாகா. மனிதன் நம்மை (இந்திய ஸ்திரீகளை) எவ்வளவு தூரம் மதித்திருக்கிறான் என்பதைக் கவனியுங்கள். எந்த விதத்திலும் இந்திய ஸ்திரீ தன்னுடைய கணவனுக்கு சிநேகியா யிருக்க முடியாதவளாய் இருக்கிறாள். அவள் படிப்பில்லாதவளாயிருக்கிறாள். தவிர, மனிதர்களைப் பற்றியும் பிறவஸ்துக்களைப் பற்றியும் அவளுக்கு அனுபவமில்லை. முக்கியமான விஷயங்களில் கணவனுக்கு புத்தி சொல்லும் சக்தியும் அவளுக்கு இல்லை. ஏனெனில், குடும்ப ஜீவியத்துக்கும் இவைகளுக்கும் ஒருவிதமான சம்பந்தமும் இல்லாமலிருக்கிறது. பழைய காலத்து இந்திய மாதர்களுக்கு இருந்த வீரமும் தைரியமும் இந்தக் காலத்து ஸ்திரீகளுக்கு இல்லை. துஷ்யந்தனைப் பார்த்து சகுந்தலை பேசின தைரியம் இக்காலத்தில் எந்த ஸ்திரீகளுக்காவது இருக்கிறதா? அவளையும் அவளுடைய குழந்தையையும் தெரியாதென்று துஷ்யந்தன் சொன்னபோது, சகுந்தலை எவ்வளவு தைரிய

மாய் வாதாடினாள்! "நீர், நான் தனியாக இருக்கிறேன் என்று நினைப்பீரேயானால், உம்முடைய மனதுக்குள் இருக்கும் மனிதன் உமக்குத் தெரியாது என்று ஏற்படுகிறது. அவனுக்கு உம்முடைய கெட்ட செய்கை தெரியும். நீர்பாவம் செய்ததாகவே அவன் கருதுவான். பாவம் செய்தவன் ஒருவருக்கும் தெரியாதென்று நினைத்த போதிலும் கடவுளுக்குத் தெரியும்" என்று சகுந்தலை சொன்னாள்.

புருஷனுடைய ஒழுக்கமும் மனைவியைப் பொறுத்தே இருக்கிறது. ஸ்திரீகளுடைய மூடத்தனமே அவர்களுடைய படித்த கணவர்கள் அவர்களைத் தங்களுக்குத் தகுந்த சிநேகிதர்கள் அல்லவென்று நினைக்கும்படிச் செய்து விடுகிறது. மனைவியினுடைய முக்கியமான கடமை யென்னவென்றால், கணவனை 'நேரான வழியில் செலுத்தி அவனைச் சிறந்த காரியங்கள் புரியும்படித் தூண்டி விடுவதே யாம். ஆனால் அவள் கல்வி யறிவில்லாதவளா யிருந்தால் தன்னுடைய முயற்சியில் தவறிவிடுவாள் என்பது நிச்சயம். குழந்தைகளை நல்ல வழியில் பழக்குவதற்கோ தாய்மார்களே பொறுப்பாளிகள். பிற்காலத்தில் கெட்டபழக்கங்களை நீக்கிவிடலாமென்பது முடியாத காரியம். கீழ்ப்படிதல், உண்மை, தன்னுதவி, தேகசுகம் பேணுதல், இவைகளெல்லாம் தாய்க்கு இருந்தாலன்றி அவள் குழந்தைகளை இவ்வழிகளில் எவ்விதம் பழக்கக்கூடும்? குழந்தைகளுக்கு நன்மையான காரியங்கள் யாவையென்று தெரியாமலே இந்திய ஸ்திரீகள் குழந்தைகளிடம் அதிக பாசமாயிருந்து வருவதுதான் எல்லாக் கெடுதி

களுக்கும் மூலகாரணம். கணவனுடைய முயற்சியில் ஊக்கங்காட்டாமல், வெறும் அன்புமட்டும் மனைவியர் கள் கொண்டிருப்பது தான் இந்திய இல்லறத்துக்கே ஒரு பெரிய சாபமா யிருக்கிறது. சுகாதார முறையை அறியாமல் குடித்தனக் காரியங்களைக் கவனிப்பது ஒரு பெரிய பாவமாய் இருக்கிறது.

பள்ளிக்கூடத்துக்குப் போகும் இந்து மகமதியப் பெண்களின் எண்ணிக்கை நூற்றில் ஒன்றுக்குமே யில்லையென்று கணக்குகளால் தெரிகின்றன. பால விவாகமும், பருவமடைந்தபின் பெண்கள் வெளியே போகக்கூடாது என்னும் ஏற்பாடுமே, பெண் கல்விக் குப் பெருந்தடையா யிருக்கின்றன. ஆதலால், இந்துக் களுக்கு ஏற்ற கல்விமுறை பெண்களுக்கு வீட்டிலேயே வித்தியாப்பியாசம் செய்வதுதான். இவ்விஷயத்தில் கிறிஸ்தவ உபாத்திச்சிமார்கள் செய்துவரும் வேலை நம்மால் பாராட்டக்கூடியது. ஆனால் இந்த முறையில் கெடுத லில்லாமலும் போகவில்லை. கிறிஸ்தவ உபாத் திச்சிமார்கள் கிறிஸ்தவ வேத புத்தகங்களையே படிக் கும்படி வீட்டில் கட்டாயப்படுத்துவதால், அவர்களை விட்டுப் பெண்களுக்குக் கல்வி போதிக்க அநேகர் சம்மதிக்கிறதில்லை. மேலும், இவர்கள் அந்நியர்களா யும், வேறு மதத்தைக் கைக்கொண்டவர்களாயும், வேறு விதமான நடையுடைபாவனை யுடையவர்களாயு மிருப்பதால், இவர்கள் இந்திய ஸ்திரீகளின் மனதை உள்ளபடி அறியச் சக்தியற்றவர்களா யிருப்பதுடன், இந்திய ஸ்திரீகளுக்கு இவர்களுடைய போதனையால் கல்வியில் விருப்பம் உண்டாகாமலும் போய் விடுகிறது.

ஆதலால் இந்தியப் பெண்களுக்குப் படித்த இந்திய ஸ்திரீகளே வீட்டில் சென்று கல்வி போதித்துவர வேண்டும்.

ஆகவே, இந்த பாரத ஸ்திரீ மகா மண்டலத்தின் முதல் வேலை யாதெனின், இந்திய ஸ்திரீகளுக்கு வீட்டில் படிப்பு சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்வது தான். நிதி சேர்த்து, இந்திய உபாத்திச்சிமார்களுக்குச் சம்பளங் கொடுத்து, வீட்டில் ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கும்படிச் செய்யவேண்டும். இந்த நிதியை மற்ற நிதியோடாவது, அல்லது வரும்படியோடாவது சேர்க்காமல் தனியாய் வைத்து இந்தக் கல்வி விஷயம் ஒன்றுக்கே உபயோகப்படுத்த வேண்டும்.

மகா மண்டலத்தின் இரண்டாவது வேலை இந்திய ஸ்திரீகளுக்குச் சுதேச பாஷைப் புஸ்தகங்கள் எழுதி வெளிப்படுத்துவது. முதலில், ஆங்கில பாஷையில் உள்ளவைகளை மொழி பெயர்த்தோ அல்லது தழுவி எழுதியோ நூல்களை வெளியிடவேண்டும். மகா மண்டலத்தின் ஒவ்வொரு பிரதான இடங்களிலும் சம்பளங் கொடுத்தாவது, மகா மண்டலத்தின் கல்விக் கமிட்டியார் தெரிந்தெடுப்பவர்களைக் கொண்டு நூல்கள் எழுதும்படிச் சொல்லவேண்டும். அதற்கு மத்தியில் இப்போது கிடைக்கும் நூல்களை வைத்துக்கொண்டே வேலையை ஆரம்பித்து விடவேண்டும்.

மகாமண்டலத்தின் மூன்றாவது வேலை, ஏழைகளாயிருக்கும் இந்திய ஸ்திரீகள் கையால் செய்யும் சாமான்களை வாங்கி வைத்து விற்று அவர்களுக்குப் பிழைப்பு உண்டாகும்படி, ஒரு டிப்போ ஏற்படுத்துவ தாகும்.

இந்த வருஷத்துக்கு இந்த மகா மண்டலத்தின் நான்காவதும் கடைசியுமான வேலையாதெனில், இந்திய ஸ்திரீகளுக்கு நோய், வியாதி முதலியவை யுண்டானால் அவர்களுக்குச் செய்யப்பட்டு வரும் ஔஷதப் பிரயோகங்களைப் பற்றி விசாரித் தறிதலாகும். எவ்வகையான மருந்துகள் தற்காலம் கிடைக்கும்? அவைகள் நல்ல பலனை யுண்டாக்காம லிருப்பதற்குத் தடையென்ன? உபயோகமான நல்ல மருந்துகளை எந்த வகையில் நன்றாய்ப் பரவச் செய்யலாம்? என்பவைகளை பற்றிக் கவனித்து ஆராய வேண்டும்.

அலகாபாத் மதக்கூட்டம்.

தர்பங்கா மகாராஜா செய்த பிரசங்கம்.

கடந்த ஜனவரி மாதம் 9-ஆம் தேதி அலகாபாத்தில் கூடிய மதக்கூட்டத்தில் தர்பங்கா மகாராஜா அக்கிராசனம் வகித்துச் செய்த பிரசங்கம் பின் வருமாறு:—

கனவான்களே,—மதசம்பந்தமாய்க் கூடும் இந்தப் பெரிய கூட்டத்தில் இரண்டாம் முறையும் அக்கிராசனம் வகிக்கும்படியான சந்தர்ப்பத்தை நீங்கள் எனக்குக் கொடுத்ததைப்பற்றி நான் மிகுந்த பெருமை பாராட்டுகிறேன். இரண்டு வருஷத்துக்கு முன்பு ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி இந்தக் கூட்டம் கடைசியாகக் கல்கத்தா நகரத்தில் கூட்டப்பட்டது. நம்மவர்களுள் அச்சமயம் வந்திருந்த அநேகர், அந்தக் கூட்டத்தில் நடந்த நடவடிக்கைகள் எல்லோர் மனதிலும் குடிகொண்டிருக்கும் சகோதரபாவமான மன உணர்ச்சியை எவ்வளவு தூரம் விசாலப்படுத்திப் பதியும்படிச் செய்தனவென்பதை மறந்திருக்கமாட்டார்கள். அந்தக் கூட்டம் கூடிய பின்பு மதங்களுக்குள் இருக்கும் பொதுமையான பாகங்களை ஜனங்கள் இதற்கு முன்பு அறிந்ததை விட அதிகமாய் அறிந்திருக்கிறார்கள். மதங்களின் வெளித்தோற்றங்களும், கொள்கைகளும், போதனைகளும், பற்பல விதமாய் இருந்து ஒன்றையொன்று

பிரிக்கும்படியான பெரிய சுவர்களைப்போல் அதுவரை யில் காணப்பட்டபோதிலும், எல்லா மதங்களின் மூலதத்துவங்களையும் ஒற்றுமைப்படுத்தி நம்மெல் லோரையும் ஒரே கட்டாக இருக்கும்படிச் செய்திருப்ப தோடு, பாரமார்த்திகமாய் சோதித்துப் பார்த்தால், அந்த வித்தியாசங்கள், ஒன்றுமே இல்லையென்று சொல்லவேண்டும்.

2. கனவான்களே,—உங்களையும், இந்தக் கூட் டத்தில் அக்கரைகாட்டித் தேசத்தின் பற்பல பாகங் களிலிருந்து வந்திருக்கும் டெலிகேட்டுகளையும் நல் வரவேற்று உபசரிப்பதில் எனக்கும், இந்தக் கூட்டம் நடைபெறவேண்டி முக்கிய முயற்சி யெடுத்துக்கொண்ட வர்களுக்கும், உண்டாகும் மகிழ்ச்சி கொஞ்சமல்ல. இவ் விதம் நீங்கள் விஜயம் செய்திருப்பது தற்கால நிலைமை யில் ஒரு விதமான நம்பிக்கையும் உற்சாகமுமான அறிகுறியாக இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. கடந்த முறை கூடிய கூட்டம் நன்றாய் நடைபெற்றது. இந்தக் கூட்டம் அதைவிட நன்றாய் நடைபெறட்டும். அதாவது, மதசம்பந்தமான நம்முடைய சிநேக பாவத்தை இன்னும் நெருங்கிய கட்டுக்குள் கொண்டு வருவதிலும், நம்முடைய சேர்க்கையை இன்னும் பலப் படுத்துவதிலும், நாம் ஒருவரை யொருவர் நன்றாய் அறிந்துகொள்ளுவதிலும், இந்தக் கூட்டம் இன்னும் நன்றாய் நடைபெறட்டும். மூடுபனியின் மத்தியில் காணப்பட்ட மனிதனைப்பற்றிய கதையை நீங்கள் கேள்விப்பட் டிருக்கலாம். ஒரு மனிதன் தூரத்தில் ஒரு உருவத்தை மூடுபனியில் கண்டான். ஒரு நாயைப்

போல அது அவனுக்குத் தோன்றிற்று. இன்னும் கொஞ்ச தூரம் செல்லவே அந்த உருவம் ஒரு மனிதனுகத் தோன்றிற்று. கடைசியில் சமீபத்தில் நெருங்கிப் பார்க்கவே, தன்னுடைய சொந்த சகோதரனுயிருக்கக் கண்டான். இந்த உபமானக் கதை இங்குகூடி யிருக்கும் நம்மெல்லோருக்கும் சிறந்த நீதியைப் போதிக்கிறதா யிருக்கிறது. இந்த கூட்டம் மூடுபனி யெல்லாம் விலகிப் போகக்கூடிய ஒரு இடமாக இருக்கட்டும். சுத்தமான வெளிச்சத்தில் நாம் ஒவ்வொருவரும் சகோதரர்களாய் இருப்பதைக் காணலாம். பல வழியில் ஒரே நோக்கத்தோடு செல்லும் யாத்திரீகர்களாய் நாம் இருக்கிறோம். கடைசியில் குறித்த இடத்துக்கு அதாவது ஒரே கடவுளாகிய நமது பிதாவிடத்துக்கு நாம் செல்லுவோம்.

(3) எல்லா மத நூல்களையும் ஒன்றனோடு ஒன்று ஒப்பிட்டுப் படித்து, அவைகள் தத்தம் வழிகளில் எல்லாவற்றிற்கு மேலும் நம்மெல்லாருக்குள்ளும் இருக்கிற ஒரே கடவுளின் இலக்கணத்தைப்பற்றியே போதித்து அவரை நன்ருய் அறிந்துகொள்ளச் செய்கின்றன, என்ற நம்பிக்கையில் நமக்கு ஊக்கத்தை சென்ற முறை கூடிய கூட்டம் கொடுத்திருப்பதற்கு இப்போது நாம் கூடியிருப்பதே ஒரு அத்தாட்சியாகும்.

(4) முதலிலேயே நான் இதைப்பற்றிச் சொல்லக் காரணமென்னவென்றால், கடவுளைப்பற்றிய அறிவே நம்முடைய ஜீவியத்தில் முக்கியமானதா யிருக்கிறது. அவரை அறிந்து கொள்ளுவதும், அவருடைய குணதிசயங்களைத் தெரிந்து கொள்ளுவதும், நம்மைப்பற்றி

அவருடைய திருவுளப் பாங்கு எவ்விதமிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளுவதும் அவசியம். ஏனெனில் இவைகளை அறிந்துகொண்டால் தான் நாம் அவரை நேசித்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து, நாளாவட்டத்தில் அவரைப்போல் ஆவதற்கு முடியும். அவ்விதம் ஆவதற்குப் பிரதிதினமும் பக்தியோடு அவரை வணங்கியும் தாழ்மையோடு ஸ்மரித்தும் நாம் வரவேண்டும். இதுதான் எல்லா மதங்களினுடையவும் முடிவுப் பொருள். இந்தக் கொள்கையை தன்னுள் கொண்டிராத எந்த மதமும் மனிதனுடைய தினப்படி வாழ்நாளுக்கு ஒரு சிறிதும் பயன் படாது.

(5) சகல உலகங்களுக்கும் கடவுள் பிதாவாக இருக்கிறார் என்னும் உணர்ச்சியிலிருந்தே மனிதர்கள் சர்வலோக சகோதரர்களாய் இருக்கவேண்டுமென்னும் உண்மை புலப்படுகிறது. இந்த உண்மை உள்ளபடியே நம்மால் உணரப்பட்டால் உலகத்தில் தற்காலத்தில் இருந்துவரும் விரோதங்களும் பகைமையும் பறந்துவிடும்; நமக்குப் புலப்படாமலிருக்கும் பிரச்னைகளுக்கெல்லாம் வெகு எளிதில் பதில் கிடைத்துவிடும். அன்புக்கும் ராஜபக்திக்கும் வாசஸ்தானமாய் இந்தியாவைச் செய்துவிடும். ஜாதி வித்தியாசங்கள் அடியோடு ஒழிந்துவிடும். நம்முடைய தேசத்தின் க்ஷேம லாபங்களைக் கருதி அதனுடைய அபிவிருத்தியில் கவலையெடுத்து உழைக்கும்படி நாம் எல்லோரும் சகோதரர்களைப்போல் ஒன்று சேருவோம்.

(6) கனவான்களே! இந்த முடிவான நோக்கத்தைத் தான் இப்படிப்பட்ட மதக்கூட்டங்களில் தேடுவ

தற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மனித சமூகத்தின் பல ஜாதியாரும், வகுப்பாரும் அனுசரித்துவரும் பலவிதமான மதங்களைப்பற்றி உபந்நியசிப்பதும், வாசிக்கப்படும் உபந்நியாசங்களைக் காதினல் கேட்பதும் மட்டும்போதாது. ஆனல் மதவிஷயங்களை ஆராய்ந்து தேர்ச்சி பெற்றிருக்கும் கல்விமான்களின் மூலமாய் நாம் இவ்விஷயங்களைக் கேட்பது நன்மைதான். இருந்தபோதிலும் அவைகளை உள்ளபடியே உணர்ந்து அநுபவத்துக்குக் கொண்டுவருவது இன்னும் நன்மையுடையதாகும். பல வகுப்பிலுமுள்ள மதப்பிரியர்கள் கடவுளை நோக்கிப் பிரயாணம் செய்யும் வழியில் இவைகளை அநுபவசித்தமாய் உபயோகிக்கிறர்களல்லவா? அது போலவே நாமும் உபயோகிக்கவேண்டும். நம்முடைய நித்தியப்படி வாழ்நாளில் நம்முடைய மதத்தையும் அதனுடைய போதனையையும் உபயோகித்து நம்முடைய குடும்பத்திலும், ஜனசாரத்திலும், வியாபாரம் கைத்தொழில் முதலியவைகளிலும் கலக்கும்படிச் செய்யவேண்டும். அப்படிச் செய்து நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டும், எத்தனையோ மதங்களும் ஜாதிகளுமிருந்தபோதிலும், நாமெல்லோரும் ஒரே கடவுளின் புத்திரர்களென்பதை உணர்ந்து, ஒருவருக்கொருவர் சகோதரபாவ முறையில் நடந்துகொள்ளுகிறோமென்பதைப் பிறருக்குப் புலப்படுத்திக்கொண்டும் வரவேண்டும்.

(7) கனவான்களே! பொதுவாக மனிதன் ஒரு மதத்தில் பிறந்து, அவனுடைய முன்னேர்கள் எந்த

மதத்தை அனுசரித்து வந்தார்களோ அந்த மதத்திலேயே வளர்க்கப்பட்டு வருகிறான். அப்படியேன் வரவேண்டுமென்றால், அது கடவுள் காட்டியிருக்கும் வழியாயிருக்கிறது. கடவுளைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்காக ஒரு மனிதன் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு மாறவேண்டிய அவசியமில்லை. எல்லா மனிதர்களும் சகோதரர்களைப்போல் இருக்கிறார்கள் என்னும் உண்மையை அறிந்து, அதன்படியே ஒருவருக்கொருவர் சகோதரபாவத்துடன் நடந்துகொள்ளுவதற்கு ஒரு மனிதன் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்குப் போகவேண்டிய அவசியமில்லை. ஆனால் உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்கும், அது கிடைக்கும்போது தயங்காமல் பெற்றுக்கொள்ளுவதற்குத் தயாராக அவன் மனக்கண்ணையும், ஞானக்கண்ணையும் நன்றாய்த் திறந்துவைத்துக்கொண்டிருக்கவேண்டும். ஏனெனில் எல்லா உண்மையும் கடவுளுடையது. அது எந்த இடத்திலிருந்து வந்தபோதிலும் சரியே. ஏனெனில் ஒருவன் ஒரு மதத்தைத் தழுவியிருந்தால், அவன் மற்ற மதங்களால் பெறப்படும் உண்மைகளை அசட்டை செய்யவேண்டுமென்பதாவது, அல்லது அவைகளை அவமதிக்கவேண்டுமென்பதாவது கட்டாயமல்ல. எந்த வகுப்பிலிருந்து வந்தபோதிலும், எந்த ஜாதியிலிருந்து வந்தபோதிலும் உண்மை புறக்கணிக்கப்படக்கூடியதல்ல. மேலான கடவுளைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதுதான் ஒவ்வொரு மதத்தினுடைய முக்கிய நோக்கம். ஆனால் அவரை அடைவதற்குரிய பற்பல வழிகளில் ஏற்பட்டிருக்கிற வித்தி

யாசத்தைமட்டும் அவைகள் போதிக்கின்றன. நாம் அசட்டை செய்து அவமதிப்பதைவிடச் சட்டை செய்து கௌரவிப்போமானால், ஒவ்வொரு மதத்திலும் உள்ள குற்றங்குறைகளை எடுத்து வெளிப்படுத்திக் கொண்டு சண்டையிடுவதைவிட, அவைகளில் பரவிக் கிடக்கும் உண்மைகளையும் நலங்களையும் கண்டுபிடிக்க நாம் முயல்வோமானால், இன்னும் நன்றி யறிவுள்ள கடமையை நாம் கடவுளுக்குச் செய்தவர்களாவோம். இவ்விதம் நாம் ஒன்றையும் மற்றொன்றையும் ஒப்பிட்டுப் பார்த்து, உண்மையை அறிந்துகொள்ளும் விதமாய் ஆராய்ச்சி செய்து வருவோமானால், நம்முடைய சிரமத்துக்குத் தகுந்த பலன் எல்லாம் வல்ல கடவுளிடமிருந்து கிடைக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

(8) கனவான்களே! நானே இந்துக்களுள் ஒரு இந்துவாய் இருக்கிறேன். அவ்விதம் இருப்பதற்கு ஒரு இந்துக் குடும்பத்தில் நான் பிறந்து, இந்து மதத்தில் என்னுடைய முன்னோர்கள் சென்ற வழியில் நானும் வளர்க்கப்பட்டதைத் தவிர வேறு காரணமில்லை. மற்றவர்கள் இந்தக் கூட்டத்தில் இப்போது சொல்லப் போகிற இந்து மதத்தின் உண்மைகளைப்போல் நான் ஒன்றும் உங்களுக்குச் சொல்லப்போகிறதில்லை. சம்ஸ்கிருதத்தில் சொல்லுகிறபடி இந்து மதத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்:—முதலாவது "நான் அவருடையவன்" (கடவுளுடையவன்). இரண்டாவது "நான் உன்னுடையவன்" மூன்றாவது "நான் நீயே." நம்முடைய மதத்தின் ஆரம்பத்திலேயே மனிதன் கடவுளுக்குச் சொந்தமானவன், அவருடைய அருளால்

அவன் பாதுகாக்கப்படுகிறான் என்னும் உண்மை போதிக்கப்படுகிறது. "நான் அவனுடையவன்" "நான் உன்னுடையவன்" என்னும் உணர்ச்சி அதற்குமேல் உண்டாகிறது. அப்பொழுது மனிதன் தன்னைத் தானே இன்னும் நன்றாய் உணருகிறான். தினப்படி ஜீவியத்தினும் கடவுளுடைய பிரவர்த்தியை இன்னும் நன்றாய் அறிகிறான். மூன்றாவது நிலைமையில் இன்னும் தன்னைத் தானே நன்றாய் உணர்ந்து கடவுளை நெருங்கி "நானே நீ" என்னும் அத்துவைத நிலையை மனிதன் அடைகிறான்.

(9) இந்து மதத்தில் சகல லோகங்களையும் ஆளுகிற ஒரே சக்தியைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. அது "ஏகமேவாத்விதீயம் பிரம்மம்" என்னும் மூன்று வார்த்தைகளில் அடங்கியிருக்கிறது. பிரம்மத்தைத் தவிர்த்துத் தனியாய் இருப்பதுபோல் காணப்படுகின்ற எல்லாப் பொருள்களும் வெறும் மாயாதோற்றமே ஒழிய வேறில்லை என்பது இந்து மதத்தின் போதனை. இது தான் உண்மையான வேதாந்தம்.

இந்து மதமானது வேதத்திலிருந்து ஆரம்பித்து, எல்லாவற்றையும் தழுவினதாய், மனிதருடைய எல்லா மனப்போக்குக்கும் நிலைமைக்கும் உற்றதாயிருக்கிறது. அதில் சொல்லப்படும் கருமகாண்டப் பகுதிகள் சிலருக்குப் பிடிக்கின்றன. வேறு சிலர் இந்து மதத்தில் சொல்லப்படுவதைத் தங்களுடைய நித்தியப்படி ஜீவியத்தில் அனுசரித்து வருவதில் விருப்பங்கொள்ளுகிறார்கள். இந்து மதத்தில் சொல்லப்படுகிற ஒழுக்க முறைகளை வேறு சிலருடைய மனதில் பதிகின்றன. பக்தி

யான பாகங்கள் மற்றுஞ் சிலருக்குப் பிடிக்கின்றன. இன்னுஞ் சிலருக்கு தத்துவ உண்மைகளை அறிவதில் மனம் செல்லுகிறது. இந்த விதமான எண்ணங்களெல்லாம் பகவத் கீதையின் சுலோகங்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

(10) எல்லாப் பெரிய மதங்களும் தங்களுக்குச் சொந்தமான அடையாளங்களை உடைத்தாயிருக்கின்றன. கடவுள் சுத்த சக்திமயமாயிருக்கிறார் என்பதை எல்லா மனிதர்களும் அறிவார். கடவுள் பூலோகத்தில் அவதாரம் செய்வதைக்கொண்டும், விக்கிரகங்களைக் கொண்டுந்தான் அவர்கள் கடவுளை உணருகிறார்கள். அதினால் தான் இந்து மதத்தில் விக்கிரக ஆராதனை பலவழிப்பட்டிருக்கிறது; ஆனாலும் ஒவ்வொன்று இறைவனுடைய ஒவ்வோர் கல்யாண குணத்தைக் குறிப்பிடுவதாகவே இருக்கிறது. இந்த ஆராதனையின் அந்தரங்க அர்த்தத்தை உணராத அநேகர் "விக்கிரக ஆராதனை" என்று இழித்துச் சொல்லுகிறார்கள். அது விக்கிரகமாயினும் சரியே, அல்லது இறைவனை உணர்த்தும் ஒரு அறிகுறியாக இருப்பினும் சரியே, இந்து மதத்தின் கொள்கைப்படி அதில் கடவுளுடைய இலக்கணமே அமைந்திருக்கிறது. முழு உலகத்திலும் அணுக்கள் கலந்திருப்பதைப்போல் கடவுள் அந்த விக்கிரகத்திலும் இருக்கிறார். ஆதலால் விக்கிரக ஆராதனை கடவுளுடைய ஒவ்வொரு அம்சத்தையும் குறிப்பிடும் அறிகுறியாயிருக்கிறதே தவிர வேறில்லை. சித்திரத்தில் எழுதப்பட்ட ஒரு உருவம், அவ்வுருவத்தை உண்மையில் நேரில் காணும் வரையில், இன்றி

யமையாது இருந்தமேல போல, மனிதன் தன்னுடைய ஆன்மஞானத்தை விருத்திசெய்து மேலான பரம் பொருளை உணருகிறவரையில் கடவுளை வணங்கி வழி படுவதற்கு ஒரு விக்கிரகமோ அல்லது அறிகுறியோ மனிதனுக்கு அவசியமாய்த் தானிருக்கிறது. ஆன்ம ஞானம் மனிதனுக்கு விரிந்து செல்லச் செல்ல ஸ்தூல மான ஒரு உருவத்தைக் கடவுளாக வழிபடும் உணர்வு குறைந்து கொண்டேவரும். கடைசி நிலையாகிய சாயுச் சிய பதவிகிடைத்து, இறைவனுடைய அருளில் படிந்து விட்டானேயானல், பிறகு அவனுக்கு விக்கிரக ஆரா தனை அநாவசியம். அது வரையில் அவசியமே.

(11) விக்கிரக ஆராதனையும், அவதாரங்களும் ஒன்றுக் கொன்று மிக நெருங்கிய சம்பந்தமுடையவை களாய் இருக்கின்றன. எல்லாம் வல்ல முழுமுதற் கட வுளோ உருவமற்றவர். இருந்தபோதிலும் பக்தர்கள் வணங்கும் சகலக் கோலமும் கடவுளுடைய உருவந் தான். பக்தன் எவ்விதமான விக்கிரகத்தைச் செய்து வைத்து வணங்குகிறானே, அந்த உருவத்தில் கட வுள் வெளிப்படுகிற ரென்னும் நம்பிக்கையோடு தான் அவன் வணங்குகிறன். இப்படிக் கடவுள் வெளிப்பட்டார் என்று கொள்ளுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் கடவுளே இந்த உலகத்தைச் சிருஷ்டித்தார். உலகத்தில் நடைபெறும் ஒவ்வொரு விஷயமும் அவருடைய இயக்கத்தினலேயே நடை பெறுகின்றன என்று பிரஹதாரண்யம் கூறுகின்றது. கடவுள் தம்முடைய சிருஷ்டியைத் தொடங்கும்போதே உலகம் சரிவர நடைபெறும்படி பலவகையான சக்தி

களையும் தத்தம் நிலையில் சரியானபடிச் செல்லும்படி செய்கிறார். ஆனால் நாளாவட்டத்தில் இச்சக்திகள் ஒன்று பலவாக விரிகின்றபடியால் ஒழுங்கீனமும், தடுமாற்றமுமான அறிகுறிகள் நமக்குத் தோன்றுகின்றன. ஒரு யந்திரத்தைச் சரியானபடிப் பூட்டி அதை வேலை செய்யும்படி முடுக்கி விடுகிற ஒரு யந்திரக்காரனைப்போல் கடவுள் இருக்கிறார். யந்திரத்தில் அமைந்திருக்கும் மற்றக் கருவிகள் தாங்களே தங்கள் தங்கள் வேலையைச் செய்துகொண்டு போகின்றன. அச்கருவிகளுள் ஒன்று முறை பிறழ்ந்து போனால், யந்திரக்காரன் அதை மறுபடியும் சரியான நிலையில் வைக்கிறான். அப்படியே தான் கடவுளும்.

பிரபஞ்ச அமைப்பாகிய பெரிய யந்திரம் வேலை செய்யும்போது, அதில் அமைந்திருக்கும் கருவிகளுள் ஏதாவது சீர்குலைந்துபோனால், மறுபடியும் அதை ஒழுங்காய்ச் செய்யும் நிமித்தம் கடவுள் அவதாரமெடுத்து பூலோகத்துக்கு வருகிறார். இந்த உண்மையை ஸ்ரீ கிருஷ்ணனே பின்வருமாறு சொல்லுகிறார்:—

“ஓ! பாரதா! எங்கே தர்மம் குறைந்து அதர்மம் அதிகரிக்கிறதோ, அங்கே நான் அவதாரம் செய்கிறேன்—நல்லவர்களை ரட்சிப்பதற்கும், கெட்டவர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் நான் அவதரிக்கிறேன்.”

கடவுள் தம்முடைய பிரபாவத்தை நன்றாய்ச் செலுத்துவதற்கு ஏதோ ஒருவகையான ஸ்தூல சரீரத்தை அவர் எடுக்கவேண்டியவராயிருக்கிறார். நீர்ப் பகுதிகளில் சக்திகள் பிறழ்ச்சியடைந்தால் அந்தச்

சக்தியைச் சரியான வழியில் திருப்புவதற்கு ஏற்ற விதமாய் ஒரு அவதாரத்தைக் கடவுள் எடுக்கிறார். வாயு அல்லது காற்றில் முறை பிறழ்வு நேரிட்டால், அதை ஒழுங்குபடுத்தும்படியான விதமாய் அவர் அவதாரம் செய்கிறார். இப்படியே தான் ஒவ்வொன்றிலும். அவர் எப்படிப்பட்ட அவதாரம் எடுப்பார் என்பதற்கு ஒரு எல்லைகிடையாது. அவர் எடுக்கும் அவதாரத்தில் உயர்ந்தது எது தாழ்ந்தது எது என்று சொல்லுவதும் முடியாத விஷயம். அவருக்கு எல்லா உருவமும் ஒன்றுதான். அதனால் தான் அவர் வெளிப்பட்டுத் தோன்றும் ஒவ்வொரு அவசரத்தையும் நாம் "அவதாரம்" என்று சொல்லுகிறோம். "அவதாரம்" என்பதற்குக் கீழே இறங்குதல் என்று பொருள். எல்லாம் வல்ல உயர்ந்த கடவுளே, உலக நன்மையின் பொருட்டுத் தம்முடைய மேலான நிலைமையும் விட்டு பூமியில் அவதாரம் செய்வது, எதைக் குறிப்பிக்கிறதென்றால் எல்லா ஒழுக்கத்துக்கும் நன்மைக்கும் அடிப்படையாக இருப்பது "தன் மறுப்பு" என்பதைக் குறிப்பிக்கிறது.

(12) கனவான்களே! நம்முடைய ஜாதி விஷயமாய் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல எனக்கு இடங்கொடுப்பீர்களென்று நான் நினைக்கிறேன். ஜாதியென்பது இந்துக்களுக்கு மட்டுந்தான் உரியது என்பதல்ல; இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் ஜாதி என்பது இருந்துகொண்டேயிருக்கிறது. ஆனால் ஒவ்வோர் தேசத்தில் ஒவ்வோர் பெயரால் அது வழங்கப்படுகிறது. அதனால் நன்மையு மிருக்கிறது;

றீமையு மிருக்கிறது. புருஷ சூக்தத்தில் சொல்லுகிற படி முதல் முதல் இந்து மதத்தில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்கு வருணங்களே ஏற்படுத்தப்பட்டன. இந்த வருணபேதம் ஜனசமூகத்தின் நன்மைக் கென்றே ஏற்பட்டதாகும்; மத விஷயங்களைக் கவனிப்பதற்கு பிராமணர்களும், தேசத்தைப் பாதுகாத்து ஆளுவதற்கு க்ஷத்திரியர்களும், தேசத்தின் பொருளாதார விருத்தியிலும் கைத்தொழி லபிவிருத்தியிலும் கவனஞ்செலுத்த வைசியர்களும், மற்ற வேலைகளைச் செய்வதற்கு சூத்திரர்களும், ஏற்பட்டார்கள். மற்ற உட்பிரிவுகள் ஜனசார நிலைமையிலும் தொழில் நிலைமையிலும் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக உண்டானவைகளாகும்; ஒவ்வொரு பிரிவும் அதற்கென்று சொந்த மதக்கொள்கை, சுபாசுபச் சடங்குகள், ஆசார அனுஷ்டான விதிகள் முதலியவைகளை உடைத்தாயிருக்கின்றது.

தவிர பந்திபோஜனம், விவாகம், அபரக்கிரியைகள், முதலியவைகளையும் அவரவர்கள் ஒவ்வோர் வரையாய் அனுஷ்டிக்கிறார்கள். இவ்விதம் இருப்பதை ஸ்தூலமாய் பார்ப்போமானால், தேசத்திலுள்ள ஜனங்களுக்கு அது ஒரு மூலாதாரப் படிப்பைப்போல் இருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளலாம். ஒரு பையனுடைய அறிவை விரியச்செய்து ஜன சமூகத்தில் ஒருவனாக அவன் தன் வேலையைச் செய்யும்படிச் செய்வதுதான் கல்வி என்பதின் கருத்தென்றால், ஜாதியேற்பாடு அந்தக் கல்வி செய்யும் வேலையை இதுவரையில் நன்றாய்ச் செய்திருக்கிற

தென்றே சொல்லவேண்டும்! பள்ளிக்கூடத்தில் வெறும் எழுத்துக்களைக் கற்றுக்கொள்வது கல்வியாக மாட்டாது. ஜாதிமுறைப்படி பிள்ளைகள் குழந்தைப் பருவம் முதற்கொண்டே தங்கள் தங்கள் தொழிலிலும், வியாபாரத்திலும், வேலையிலும் பழக்கப்பட்டு வருகிறார்கள். இதனால் பிற்காலத்தில் அவரவர்கள் தங்கள் தங்கள் தொழிலில் பூரணபாண்டித்திய மடைகிறார்கள். இப்படிப்பட்ட பாண்டித்தியம் ஜாதியினால் ஏற்பட்ட ஒரு பெரிய நன்மை யல்லவா? ஜாதியினால் கெடுதல் இருக்கிறதென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனாலும் மற்றத் தேசத்தார் அதை ஒரு கெடுதலாகச் சொல்லும்படியான விதமாய் நம்முடைய ஜாதி இல்லை.

(13) நம்முடைய இந்துமதத்திலுள்ள எல்லா மத நூல்களும், கடவுளை நேசிப்பது, ஜனசமூகத்தை நேசிப்பது, அரசனிடம் ராஜபக்தியோ டிருப்பது, சட்டத்துக்கும் ஆசார விதிகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது, உதவியற்றவர்களுக்கு உதவி செய்வது ஆகிய இப்படிப்பட்டவைகளுள் எல்லா நல்ல காரியங்களும் அடங்கிப் போயிருக்கின்றன என்று போதிக்கின்றன. நம்முடைய தினப்படி வாழ்வைப் பற்றிச் சொல்லுகிற விஷயங்களில் கூட மதக் கொள்கைகள் கலந்திருக்கின்றன. மதத்தினிடத்தும், பல மதத்தைப்பின் பற்றுகிறவர்களிடத்தும் மதிப்போடு நடந்துகொள்ளும்படி நமக்குப் போதிக்கின்றன.

(14) கனவான்களே! இந்து மதத்துக்கு ஒருவிதமான புதிய உயிர் உண்டாகி வருகின்றதென்று, நான்

பலமாய் நம்பியிருக்கிறே னெனச் சொல்லுவதற்காக என்னை மன்னிக்கும்படிக் கோருகிறேன். இந்து மதம் நம்மவர்களுக்குப் புதிய உணர்ச்சியை உண்டாக்குவதா யிருந்தால், அப்படிப்பட்ட உணர்ச்சி முதல் முதல் குடும்பத்தில் தான் உற்பத்தியாகவேண்டுமென்பதை இதற்குமுன் நாம் ஒரு போதும் உணர்ந்திராத விதமாய் இப்போது உணர்ந்து வருகிறோம். இந்து மதம் பிரைமரி வகுப்புகளிலும், காலேஜ்களிலும், யூனிவர்ஸிடிகளிலும் கற்பிக்கப்பட்டு வர வேண்டும். தினப்படி வீட்டிலேயே கடவுளை வணங்க வேண்டும். ஏற்கெனவே சிலஸ்தாபனங்கள் மதக் கல்விக்கென்று ஏற்படுத்தி, அவைகள் மூலமாய் நல்ல விதையை நாம் விதைத்து வருகிறோம். அந்த விதைகள் கூடிய சீக்கிரத்தில் நல்ல பலனை அளிக்குமென்றும் நம்புகிறோம். உண்மையான இந்துவுக்குக் கடவுளைப்பற்றிய கல்வி யில்லாததானது கல்வியே இல்லாம லிருப்பதைவிட அதிகமான தீங்கைப் பயப்பதாகும்.

(15) கனவான்களே! இனி என்னுடைய பேச்சை ஒருவாறு முடிவுக்குக் கொண்டுவர நான் பார்க்க வேண்டும். இங்கு பேசுவதற்காக வந்து கூடியிருக்கும் பல மதஸ்தர்களுடைய கொள்கைகளையும் அன்புடன் இந்துக்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் சொல்லும்போது, என்னுடைய மதஸ்தர்களின் நோக்கத்தை அறிந்தே சொல்லுகிறேன் என்று எனக்குத் தெரியும். ஒருவருக்கொருவர் உள்ள அன்புரிமையும் உணர்ச்சியும் பலப்படவேண்டுமென்பதே இந்தக்

கூட்டத்தின் முக்கிய நோக்கம். நாம் ஒருவரை யொருவர் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகத் தெரிந்து கொள்ளுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நாம் ஒருவரை யொருவர் மதிக்கவும், அன்புடன் நேசிக்கவும் ஏதுவாகும். அப்போது மத சம்பந்தமான விரோதங்கள் உருகியோடி விடும். ராஜவிசுவாச மின்மை யென்பது நின்றுபோய்விடும். எல்லாவற்றிற்கும் மூலைக் கல்லைப்போல் இருக்கும் மதம் நாம் நினைப்பதிலும், பேசுவதிலும், செய்வதிலும, பிரகாசித்துக்கொண்டிருக்கும். நியாயம் மிகுதிப்படும். சமாதானம் தேசம் முழுவதும் ஒரு பெரிய நதியைப்போல் ஓடிக்கொண்டே இருக்கும். கனவான்களே! இங்கிலாந்தின் சீர்திருத்தக்காரருக்குப் பல வருஷங்களுக்கு முன்பு விட்டியர் (Whittier) என்னும் அமெரிக்க கவிவாணர் சொன்ன செய்யுளடிகளை உங்களுக்கு எடுத்துச் சொல்லுவதை விட நன்றாய் வேறு எதையும் எடுத்துச்சொல்லி என் பேச்சை முடிக்க என்னால் முடியாது. அந்தக் கவிவாணர் பின் வருமாறு சொல்லுகிறார்:—

"மனித சமூகத்தில் உங்களுடைய நம்பிக்கையை வைத்து மேல் நோக்கிச் செல்லுங்கள். இரத்தம் சிந்துவதால் நீங்கள் அடைய முடியாத நன்மையெல்லாம் உங்களுடைய சமாதானத்தினால் அடையக்கூடும்."

கனவான்களே! கடைசியாக நான் இதுவரையில் சொல்லி வந்ததை நீங்கள் பொறுமையுடன் கேட்டதற்காக நான் என்னுடைய வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

அன்னை புக் டிப்போ,
[illegible]
[illegible] கிடைக்கும்,
[illegible]
[illegible]
PROP: M. S. [illegible]



Craig
12972